சக்தி

[illegible]லிபனுக்கு ஓர் அழைப்பு .... மகாத்மா காந்தி
[illegible]பண்ணு ? .... மஞ்சேரி எஸ். ஈச்வரன்
புதுமைப்பித்தனின் வரலாறு .... ரகுநாதன்
காந்திஜி[illegible]ம் ரசமான சம்பவங்களும். "ஸீயார்"
எட்டயபுரம் கலைஞர்கள் .... கு. அழகிரிசாமி

சர்வதாரி அணா 8 ஐப்பசி

சக்தி காரியாலயம்
சென்னை 14.

பொருள் அடக்கம்

மலர் 15 : இதழ் 7

சென்னை-600 008

அமரர் மகாத்மா ...	தலையங்கம்	1
காலச் சுழல் ...	குறிப்புகள்	3
வாலிபனுக்கு ஓர் அழைப்பு ...	மகாத்மா காந்தி	6
பெண்ணா ? ...	மஞ்சேரி எஸ். ஈச்வரன்	11
சொந்தச் சிப்பு ...	கி. ராஜநாராயணன்	17
காந்திக்குக் கடிதம் ...	லியோ டால்ஸ்டாய்	21
குட்டிக் கதைகள் ...	ஈசோப்பு	25
3 கொள்கைகள் ...	வி. சக்கரை செட்டியார்	29
காந்தீயம் ...	கு. அழகிரிசாமி	33
மணமகளுக்கு ஒரு வார்த்தை ...	ஜி. பி.	38
படங்கள் ...	...	41—48
புதுமைப்பித்தன் வரலாறு ...	சிதம்பர ரகுநாதன்	49
காந்திஜியின் உவமைகள் ...	... ...	56
நாட்டுப் பாடல்கள் ...	கெ. எ. நம்பி	57
எட்டயபுரம் கலைஞர்கள் ...	கு. அழகிரிசாமி	59
காந்திஜியும் ஜின்னாவும் ...	காலக்கோலன்	65
காந்திஜியும் ரசமான நிகழ்ச்சிகளும்	'ஸீயார்'	70
இருபத்தி மூன்று ...	ரகுநாதன்	78
காந்திஜியைப்பற்றி அறிஞர்கள் ...	ஜி. செல்லையா	79
புத்தக உலகம் ...	மூவர்	85

அட்டைப் படம்: கே. முத்துராமலிங்கம், கரூர்

*

சர்வதாரி சக்தி ஐப்பசி

கட்டழகி தவமணி தேவி தன் மேனியை மிருதுவாகவும் மென்மையாகவும் வைத்திருக்க
லக்ஸ் டாய்லட் சோப்பைத் தான் நம்புகிறார்



அதிருபவதியான இந்த சினிமா நட்சத்திரத்தின் அழகு படுத்திக்கொள்ளும் முறை லக்ஸ் டாய்லட் சோப் தான். சருமத்தை சுத்தம் செய்து மிருதுவாக்கு இச்சோப்பின் வெண்ணிறம் கொண்ட சுகந்த நுரை போல் வேறெதுவுமில்லை என்பது அவருக்குத் தெரியும். மென்மை வாய்ந்த பூரணப்பொலிவுள்ள மேனியை விரும்பும் எல்லோரையும் அவர் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து தவறுமல் சுத்தம் செய்துகொள்ளும்படி உபதேசிக்கிறார்.

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!

LTS. 174-50 TM

கேளுங்கள் !!

ஸ்டார் ஆப் இந்தியா
பென்ஸில்களுக்கு

மதருஸ் பென்ஸில் பாக்டரி

உயர்தர அச்சுவேலைகளுக்கும்
லித்தோ பிரிண்டிங்குக்கும்

ஹோ & கம்பெனி

எல்லாவிதமான உயர்தர
ஸ்டேஷனரி சாமான்களுக்கு

வி. பெருமாள் செட்டி & சன்ஸ்

நெ. 5, ஸ்டிஞ்சர்ஸ் தெருவு

சென்னை—1

மிகவும்
ருசிகரமானது
மாத்திரமல்ல-
இது
நல்லது !
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
BY CADBURYS
ALISTS IN FOOD
S FOR 100 YEARS
முக்கியமாக
குழந்தைகளுக்கு
போர்ன்-வீடாவிலுள்ள கால்ஷியமும் விடமின்களும், வளரும் குழந்தைகளுக்கு வலுவான எலும்புகளும், கெட்டியான் சதையும் வளர உதவுகின்றன. பெரியவர்களுக்கு நிம்மதியான ஆழ்ந்த உறக்க மளித்து ஜீவசக்தி ததும்பச் செய்கின்றன.
காட்பரீஸ்
போர்ன்-வீடா
கால்ஷியம், விடமின்கள் நிறைந்தது.
KB27M

அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த

தீபாவளி வாழ்த்துக்கள்



முதல்தரமான வஸ்துக்களுக்கு ஈடு கிடையாது. எதிலும் தரம் வேண்டுமானால் அதற்கு உண்டான மதிப்பைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வைரங்கள் பாபாலால் கம்பெனியிலிருந்து வாங்கினதானால் அவைகளின் கண்ணியமான தரத்தைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டியதில்லை. அவைகள் எப்பேர்ப்பட்ட பரீக்ஷைகளுக்கும் தயாராக இருக்கின்றன.

பாபாலால் & கம்பெனி

கீர்த்திபெற்ற வைர நகை வியாபாரிகள்

மதராஸ்

DIRECT IMPORTERS OF QUALITY DIAMONDS.

சர்வதாரி
மலர் 15

சக்தி

ஐப்பசி
இதழ் 7

மெய்ப் பொருள் காண்பது அறிவு

•

அமரர் மகாத்மா

மகாத்மா காந்தி அமரத்துவம் அடைந்தபின், முதலாவதாகக் கொண்டாடப்படும் காந்தி ஜயந்தி இம்மாதம் 2-ம் தேதியன்று நாம் கொண்டாடிய காந்தி ஜயந்தியாகும். தம் 79-வது ஜன்ம தினத்தன்று நம் தந்தை நம்மிடையே இல்லை. ஆகவே வழக்கம்போலக் குதூகலத்துடன் இந்தப் பெரிய வைபவத்தைக் கொண்டாட முடியாமல் போய்விட்டது. எத்தனையோ சண்டைகளுக்கும் பூசல்களுக்கும் மத்தியில் தேசத்தின் ஒற்றுமை குலைந்து விடாமல் பேணிப் பாதுகாத்து வந்த ஒரு மகா சக்தி நம்மிடமிருந்து பறி போய்விட்டது. ஏழை பங்காளனாக இருந்து, ஏழை மக்களின் நலனுக்கு வழி வகுத்துக் கொண்டிருந்த இந்தப் புண்ணிய புருஷரின் மறைவால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் இந்தியாவின் பொது ஜனங்கள். இந்தப் பொது ஜனங்களுக்கு ஏற்பட்ட இந்த மிகப் பெரிய குறையை நிவர்த்தி செய்வதுதான் இன்றைய காந்தீய சேவையாக இருக்கிறது. மகாத்மாவும் தம் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதுதான் தமக்குச் செய்யும் கௌரவமாகும் என்று பல தடவைகளிலும் எடுத்துக் கூறினார். வீணாகத் தம்மை மூடநம்பிக்கையுடன் தெய்வமாக்கித் தொழுவதால், உலகத்துக்கு நன்மை பிறந்துவிடாது என்றுதான், அவர் வாழ்நாளெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார். அவருடைய இந்தத் தர்மோபதேசத்தை நாம் கடைப்பிடித்திருக்கிறோமா என்று தன் உள்ளத்தைப் பரிசோதித்துப் பார்த்து, ஆவன செய்வதற்கு முயலாத ஒருவன் தேசபக்தன் என்றோ, காந்தி பக்தன் என்றோ தன்னைக் கூறிக் கொள்வதற்கு உரிமை கிடையாது.

இன்று காந்தி மகானை நினைவு கூரும்போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய விஷயங்கள் என்ன?

காந்திஜியின் படத் திறப்புவிழாவும், சிலை நாட்டுவிழாவும், தூண் எழுப்பும் விழாவும் அல்ல இன்றைய பிரதானமான காரியங்கள். காந்திஜியின் படங்களும், சிலைகளும் ஏராளமாக உள்ளன. காந்திஜியை என்றென்றைக்கும், மனத்தூய்மையுடன் தம் உள்ளத்தில் பிரதிஷ்டை

செய்யப் பொதுமக்கள் தயாராகவே இருக்கிறார்கள். ஆகவே, காந்திஜியின் அரும்பெரும் பணியைத் தொடர்ந்து செய்வதுதான் இன்றைய பிரதானமான காரியம்; கடமை. காந்திஜியின் உயிரைப் பருகிய வகுப்புவாத வெறி இனி கொஞ்சம் கூட நாட்டில் தலைதூக்க விடாதபடி செய்யவேண்டியது முழுமுதல் காரியம். வகுப்புவாத வெறிதான் தேசத்தின் ஒற்றுமையைச் சீர்குலைத்து வந்திருக்கிறது என்பதைக் கண்டோம். தேசத்தின் ஒற்றுமை இனியும் சீர் குலைந்தால், ஒற்றுமையின் அடிப்படையில் நடைபெற வேண்டிய தேசத்தின் சகல நற்பணிகளும் நடந்தேறுவது முடியாத காரியம். இன்று தேசம் வாழவேண்டுமானால் வகுப்புவாத வெறி சாகவேண்டும்.

அடுத்தபடி, காந்திஜி, தம்முடைய உறவினர்கள் என்று யாரைக் கூறினாரோ அந்த ஏழை மக்கள் உணவு உடை போன்ற ஜீவாதாரத் தேவைகளின்றி, இன்றும் தத்தளிக்கிறார்கள். இந்தத் துயரத்தைப் போக்குவதுதான் தேச பக்தர்களின் முக்கியமான கடமையாக இருக்க வேண்டும். 'எந்த மந்திரியை ஒழித்து விட்டு யாரைப் புதிதாக மந்திரியாக்குவது, மந்திரி சபையைக் கவிழ்த்து விடுவோமா, அல்லது வேறு ஏதாவது செய்வோமா' என்று யோசித்துக் கொண்டிருப்பதனால், தேசம் சுபிக்ஷம் அடையாது. சென்னை மாகாண மந்திரி சபை விவகாரத்தை மிகவும் ரசாபாசமாக்குகிறார்கள் சில பத்திரிகைக்காரர்கள். ஓமந்தூர் ஸ்ரீ ராமசாமி ரெட்டியாருக்கு நிர்வாகத் திறமை இல்லாதது போலவும், மதுவிலக்கு மந்திரி ஸ்ரீ குருபாதம் ஏதோ சில பரிபூரண யோக்கியர்களைக் குறைத்துப் பேசிவிட்டதாகவும் சில பத்திரிகைகள் கூறுகின்றன. ஓமந்தூராரைவிட எந்தக் காலத்திலும் எந்த மந்திரியும், அதிக நாணயத்துடனும், திறமையுடனும் நிர்வாகம் பண்ணியதாக நமக்குத் தோன்றவில்லை. ஸ்ரீ குருபாதம் எந்தத் தேசபக்த சிகாமணிகளைக் குறைவாகப் பேசிவிட்டார் என்பதை மனக்குறை கொண்ட பத்திரிகைகள் எடுத்துக் காட்டினால் ரசமாக இருக்கும். பத்திரிகைகள் எவ்வளவு யோக்கியதையுடன் குற்றம் சாட்டுகின்றன என்பதைப் பொதுமக்கள் உணர்ந்து கொள்ளுவார்கள் அல்லவா?

கோஷ்டிகள் கூடிக்கொண்டு நாட்டு நிர்வாகத்தில் குழப்பம் உண்டாக்குவதைவிட, நல்ல யோசனைகள் சொல்லலாம்; அந்த யோசனைகளை நிறைவேற்றி வைக்க முன்வந்து பாடுபடலாம்; இல்லை என்றால் உபத்திரவம் பண்ணாமலாவது இருக்கலாம். ஒரு காலத்தில் காந்திஜியின் தலைமையில் போராடிய நற்சாட்சிப் பத்திரத்தைப் பயன் படுத்தி தகாத காரியங்களைச் செய்வது காந்திஜி நமக்கு அளித்த வரப்பிரசாதத்தைச் சாக்கடையில் எறிந்து விடுவது போலாகும். ஆகவே அமரத்துவம் பெற்ற நம் தந்தையின் உபதேசங்களை நிறைவேற்றி, தேசத்தின் ஒற்றுமைக்கும், தேசமக்களின் சுபிட்சத்துக்கும் தேச பக்தர்கள் பாடுபடுவார்களாக!

✲

காலச்சுழல்

அரசாங்க பாஷை :

இந்தி தேசீய பாஷையாகி விட்டாலும், அந்தந்த மாகாணங்களில், மாகாண பாஷைகள்தான் மாகாண அரசாங்க நிர்வாகத்தில் வழங்கப்படும் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது. இதைப் பரீக்ஷை செய்து பார்ப்பதற்காக ஏற்கெனவே, தமிழ் ஜில்லா ஒன்றிலும், ஆந்திர ஜில்லா ஒன்றிலும், ஜில்லாவின் அரசாங்க நிர்வாகங்களுக்கெல்லாம் முறையே தமிழையும், தெலுங்கையும் பயன்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது; அந்தக் காரியம் இப்போதும் நடந்து வருகிறது. இதற்கிடையே இந்தியாவின் சட்டமந்திரி ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். பாஷாவாரி மாகாணப் பிரிவினைக் கமிஷனுக்கு அவர் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறாராம். பாஷாவாரிமாகாணங்கள் ஏற்பட்டாலும் மத்திய சர்க்காரின் பாஷைதான் மாகாண சர்க்கார்களுக்கும் அரசாங்க பாஷையாக இருக்கவேண்டும் என்று அதில் தெரிவித்திருக்கிறாராம்; இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றும் உபாயமாம் இது!

ஏற்கெனவே, மறைமுகமாக, தமிழ் நாட்டு இளம் பாலகர்களை இந்தியைக் கட்டாயமாகப்படிக்க வைத்ததோடு நில்லாமல், இப்போது விவகாரம் புதிதுபுதிதாகக் குட்டிபோடத் தொடங்கியிருக்கிறது. மாகாண அரசாங்க பாஷையும் மத்திய அரசாங்க பாஷையாக, இந்தியாக, இருக்க வேண்டும் என்றால், தமிழ் தானாகவே இரண்டாம்தரமான அந்தஸ்தைப் பெற்றுவிடுவதைத் தவிர வேறு வழி இல்லை. இந்தப் புதிய நிர்ப்பந்தத்தை மத்திய அரசாங்கமோ, மாகாண அரசாங்கங்களோ ஏற்றுக் கொள்ளப் போகிறதோ, என்னவோ, இப்போதும் எதுவும் தெரியவில்லை. மத்திய சர்க்காரின் முடிவை அனுசரித்தே எல்லாக் காரியங்களையும் செய்து வந்தாலும், இந்த மாகாண அரசாங்க பாஷையாவதை நம் சென்னை சர்க்கார் அனுமதிக்கக் கூடாது என்று கூற விரும்புகிறோம். அரசாங்க பாஷை சம்பந்தப்பட்ட மட்டில், அந்தந்த மாகாணங்களின் மந்திரிகள், மற்றும் பல பொதுஜன ஊழியர்கள், பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த அறிஞர்கள், கல்வித் துறையில் உழைத்து வரும் கல்வி நிபுணர்கள் முதலியவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் தன்னிச்சையாக ஒரு திட்டத்தை ஜனநாயக அரசாங்கம் அமலுக்குக் கொண்டு வருவது நியாயமில்லை.

பர்மாவில் இந்தியர் சொத்து :

சுமார் 100 வருஷங்களுக்கு முன்னமேயே பர்மாவில் இந்தியர்கள் குடியேறி அக் நாட்டின் செல்வ நிலையையும், வளப்பத்தையும் பெருக்கியிருக்கிறார்கள். இந்தியர்களின் குடியேற்றத்துக்கு முன் பர்மா இவ்வளவு சீரும் சிறப்புமாக இருந்ததில்லை. பர்மாவினால் இந்தியர்கள் ஏராளமான லாபத்தை அடைந்தார்கள் என்றாலும், பர்மாவின் முன்

னேற்றத்துக்குக் காரணமாக இருப்பது இந்தியர்களின் உழைப்புத்தான் என்பதை மறுக்க முடியாது.

பர்மாவில் இப்போது, நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களுக்குச் சொந்தமான, சுமார் 80 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள சொத்துக்கள் இருக்கின்றன. பர்மா சர்க்கார் இப்போது நிலங்களைத் தேசிய மயமாக்கும் தன் திட்டப்படி, இந்தியர்களின் நிலங்களையும் எடுத்துக்கொண்டு, அதற்குப் பெயரளவுக்கு ஒரு சிறு நஷ்ட ஈடுத் தொகையைக் கொடுப்பதாகவும், அதையும் எத்தனையோ வருஷங்களுக்குப் பின் கொடுக்கப் போவதாகவும் அறிவித்துள்ளது. நிலங்களைத் தேசிய மயமாக்கினால் அந்த நாட்டில் இந்தியர்களுக்குப் பிரஜா உரிமை வழங்க வேண்டும். பர்மா சர்க்கார் இதைச் செய்யவில்லை. பிரஜா உரிமை வழங்காத சர்க்கார், இந்தியர்களின் நிலங்களை எடுத்துக் கொள்ளும்போது, நியாயமான நஷ்ட ஈட்டைக் கொடுக்க வேண்டும்; அதையும் உடனே கொடுக்க வேண்டும். காலத்தை ஒத்திப் போடக் கூடாது. இன்றுள்ள உலக நிலையில் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று சொல்லுவதற்கில்லை. நம் மத்திய அரசாங்கமும், சென்னை அரசாங்கமும் இந்தியரின் சொத்துக்களுக்கு, பர்மா சர்க்காரிடமிருந்து நியாயமான நஷ்ட ஈட்டை வாங்கித் தர முயலுவதாகத் தெரிகிறது. உடனடியாக நியாயமான நஷ்டஈட்டுத் தொகையைக் கொடுக்கும்படி பர்மா சர்க்காரை நம் சர்க்கார் வற்புறுத்த வேண்டும் என்று கூறுகிறோம்.

அ. இ. கா. தலைவர் தேர்தல்:

அகில இந்தியக் காங்கிரஸின் தலைமைப் பதவிக்கு, இன்று ஸ்ரீ புருஷோத்தமதாஸ் தாண்டனும், ஸ்ரீ பட்டாபி சீத்தாராமையாவும் போட்டியிடுகின்றனர். பட்டாபி சென்ற விடமெல்லாம் பலமாய்ப் பிரசாரம் செய்கிறார். காந்திஜியால் ஒரு காலத்தில் ஆதரிக்கப்பட்ட அபேக்ஷகர் என்ற விலாசத்தை பட்டாபிக்கு ஒட்டுகிறார்கள். தென்னாட்டுக்காரர் என்ற தனி யோக்கியதையையும் அவருக்குச் சூட்டுகிறார்கள். ஆனால், இன்று நம் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலும் நாம் பட்டாபியை ஆதரித்து ஓட்டுப் போடுவதற்கில்லை. பட்டாபிக்கு அகில இந்திய ரீதியில் பலமான செல்வாக்குக் கிடையாது. தவிரவும் 'ஆந்திர நாட்டைப் பிரிக்க வேண்டும்' என்று தேசத்தின் மற்றப் பிரச்னைகளைக்கூடப் பொருட்படுத்தாமல், கூச்சல் போட்டு வந்தவர். சென்னையை விழுங்கப் படமெடுக்கும் ஆந்திர கோஷ்டியின் தலைவரை, சென்னையைத் தலை நகராகக் கொண்ட தமிழ்நாட்டான் ஆதரிக்கப் போவதில்லை. பட்டாபிக்குப் பதவியும் செல்வாக்கும் கிடைத்தால், சென்னைநகர விஷயத்தில் தம் செல்வாக்கையெல்லாம் அவர் பயன் படுத்தமாட்டார் என்று சொல்லமுடியாது. ஆகவே, எதிர்கால அபாயத்தைத் தமிழர்கள் இப்போதே சிந்திக்க வேண்டும்.

அந்தக் காலத்தில் காந்திஜியின் ஆதரவு கிடைத்தாலும், தேசத்திற்காகச் சொல்லொணாத் துயரங்களுக்குள்ளாகி, சர்வபரித்தியாகம் செய்த ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் போன்ற தலைவரை எதிர்த்துப் போட்டிபோட பட்டாபி

சம்மதிக்காமல் இருந்திருக்க வேண்டும். அதுதான் பெருந்தன்மை. ஆனல் போட்டியிட்டு பட்டாபி படுதோல்வி அடைந்தார் என்பது உலகப் பிரசித்தம்.

ஸ்ரீ புருஷோத்தமதாஸ் தாண்டனுடைய தேச சேவையையும் நேர்மையையும் பற்றி எள்ளத்தனையும் குறை சொல்லக் கூடியவர்கள் இந்த நாட்டில் கிடையாது. சமீபத்தில் கூட, ஒரு பொதுக் கூட்டத்தில், தாம் காங்கிரஸ்காரராக இருந்தும் கூட, காங்கிரஸ்காரர்கள் சிலர் லஞ்சம் வாங்கும் செய்தியைக் கேட்டு அழுதுவிட்டார் இந்தப் பழம் பெரும் தேச பக்தர். சூழ்ச்சித் திறமையோ, சர்டிபிகேட் பலமோ அவ்வளவு செல்வாக்கை உண்டாக்கிவிடாது. நேர்மைக்குத்தான் செல்வாக்கு அதிகம். இதற்கு நல்ல உதாரணம் நம் தந்தை காந்தியடிகளே.

இன்று எல்லோரும், குறிப்பாகத் தமிழ் மக்கள், ஸ்ரீ புருஷோத்தமதாஸ் தாண்டனுக்கு ஓட்டளித்து அவரை அ. இ. கா. தலைவராக்க வேண்டும் என்று கூறுகிறேம்.

கம்பர் மகாநாடு:

இம்மாதம் 8, 9, 10 தேதிகளில் சென்னை ராஜாஜி ஹாலில் 4-வது கம்பர் மகாநாடு நடைபெற்றது. தமிழ் நாட்டின் கவிச் சக்கரவர்த்தியைக் கொண்டாடுவதற்கென்று இம் மகாநாட்டை ஏற்பாடு செய்த எல்லோரையும் பாராட்டுகிறேம். ஆனல், போலீஸ்காரனை வாசற்காவலனுக வைத்து மகாநாட்டை நடத்தியதும், மகாநாட்டுக்கு வருகிறவர்கள் 'டிக்கட்'டைக் கையோடு கொண்டுவரும்படி தெரிவித்திருந்ததும், கம்பரின் கவிதைகளைப் பாடி, அபிநயம் பிடித்தவர்களை நியாயமாகப் பாராட்டுவதுடன் நில்லாமல், அவர்கள்தான் அக்டோபர் 8-ம் தேதி கம்பராமாயணத்தையே அரங்கேற்றியதாக ஸ்ரீ டி. கே. சி. புகழ்ந்ததும், யாரோ ஒரு கூட்டத்தார் கம்பராமாயணத்தைத் தூஷிப்பதைப் பொருட்படுத்தி, சில அறிஞர்கள் மகாநாட்டில் அனுவசியமாகப் பிரஸ்தாபப் படுத்திப் பேசியதும் மகாநாட்டுக்கும், கம்பரின் பெருமைக்கும் ஆகாத காரியங்கள். எதிர்காலத்தில் இப்படி விரசங்கள் நேராமல், கம்பர் மகாநாடுகளை இந்தப் பிரமுகர்கள் ஏற்பாடுசெய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேம். கம்பர் மேட்டில் கம்பரின் ஞாபகார்த்த நிலையம் கட்ட ஏற்பாடு செய்துவருவதாக இம்மகாநாட்டில் பல அறிஞர்களும் தெரிவித்தார்கள். இது தமிழபிமானிகள் யாவருக்கும் பெரு மகிழ்ச்சி அளிக்கும் புனித கைங்கரியமாகும் என்பதில் சந்தேகமில்லை.

வ. ரா. மணி விழா:

இம் மாதம் 31-ம் தேதியன்று மூதுபெரும் தமிழ் எழுத்தாளர் ஸ்ரீ வ. ரா. வின் மணிவிழா நடைபெறப் போகிறது. அன்றையத் தினம் அவருக்குப் பணமுடிப்பு அளிக்க இதுவரையிலும் ரூ. 17 ஆயிரம்வரை சேர்ந்திருக்கிறது. இனி ஒரு எட்டாயிரம் ரூபாயாவது சேரவேண்டும். தமிழர்கள் இந்த மிச்சத் தொகையையும் கொடுத்துப் பூர்த்தி செய்வது, அவசியமாகும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

வாலிபனுக்கு ஓர் அழைப்பு

மகாத்மா காந்தி

தேசத்தின் வாலிபர்களிடத்தில் தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். வாலிபர்கள் பாவ காரியங்களுக்கு ஆளாகிறார்கள் என்றாலும் இயற்கையில் அவர்கள் பாவிகளாக இல்லை. யாதொருவிதமான உதவி இல்லாது போய் விடுவதினாலும், சிந்தித்துப் பார்க்காததினாலுமே அவர்கள் பாவ காரியத்தில் இறங்குகிறார்கள். அது தங்களுக்கும் சமூகத்துக்கும் இழைக்கப்பட்ட தீங்கு என்று அவர்கள் கருதவேண்டும். தங்களையும், தங்கள் நாட்டையும் சர்வ நாசத்திலிருந்து காப்பாற்றுவது ஒழுக்கமான வாழ்க்கையே தவிர வேறு எதுவுமல்ல என்பதை அவர்கள் அறியவேண்டும்.

எல்லாவற்றையும்விட, அவர்கள் கடவுளை உள்ளத்தில் கண்டறிந்து சபலங்களுக்கு ஆட்படாதிருக்க அவருடைய உதவியை நாடினாலொழிய, வேறு எவ்வித மான வறட்டு ஒழுக்கமும் அவர்களுக்கு நன்மை பயந்து விடப் போவதில்லை. தாயன்பைக் காட்டுவதற்கு வெளி அடையாளங்கள் எவையும் தேவையில்லை; யாதொரு அடையாளங்களும் இன்றியே குழந்தை தாயன்பை உணர்ந்து கொள்ளுகிறது. அதுபோல கடவுளை நேருக்கு நேராகப் பார்ப்பது என்பது கடவுளை நம் உள்ளத்தில் பிரதிஷ்டை செய்திருக்கிறோம் என்பதை உணருவதுதான்.

நாளைய உலகத்தின் தந்தைகளாகக் கருதப்படும்......வாலிபர்கள்...தேசத்தின் தலைசிறந்த ஒழுக்க சீலர்களாக விளங்க வேண்டும். ஒழுக்கத்தை இழந்துவிட்டால் அதை வேறு எங்கு போய்ப் பெற முடியும்?

உலகெங்கும் வாலிபர்கள் உணர்ச்சித் துடிப்புள்ளவர்களாக இருக்கலாம். அதனால் தான் அவர்கள் கல்வி பயிலும் காலத்தில் அதாவது குறைந்தது 25 வயது வரையிலும் பிரமச்சரியத்தை அனுசரிக்க வேண்டும் என்று கட்டாயமாக வற்புறுத்த வேண்டியிருக்கிறது.

சூதறியாத இளம் வாலிபர்கள் விலையற்ற சம்பத்துக்கள். அந்தச் சம்பத்து, க்ஷண நேரத்தில் தோன்றி மறையும் உணர்ச்சிகளுக்கும், சுகபோகம் என்று தப்பிதமாக அழைக்கப்படும் காரியங்களுக்கும் இரையாகித் தேய்ந்து போய்விடக்கூடாது.

நீங்கள் (வாலிபர்கள்) கிராமங்களுக்குப் போய் அங்கேயே ஒன்றிவிட வேண்டும் என்று நான் கூறுகிறேன். ஆனால் நீங்கள் கிராமத்து மக்களின் எஜமானர்களைப் போலவோ அல்லது அவர்களைக் கைகொடுத்துத் தாங்கும் தர்மப் பிரபுக்களாகவோ செல்லாமல் அவர்களுடைய ஊழியர்களைப் போலச் செல்ல வேண்டும். அவர்கள் செய்ய வேண்டியது என்ன, அவர்கள் தங்கள் வாழ்க்கை முறையை எப்படி மாற்றியமைக்க வேண்டும் என்பதை அவர்களே உணரும்படி

ஒவ்வொருவனையும் ஏழைமக்களின் ஊழியத்துக்காகவே பண்படுத்தும் இந்த அரிய உபதேசம் படிப்பதற்குமட்டுமல்ல; வாழ்க்கையில் கடைப்பிடிக்கவும்தான் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

செய்யுங்கள். வெறும் உணர்ச்சியினால் யாதொரு பயனும் கிடையாது. அது வெறும் நீராவியைப் போலத்தான். நீராவி தனியாக இருந்தால் அதனால் ஏதாவது பயன் உண்டோ? சரியான வழியில் பயன்படுத்தினால்தான் நீராவி ஒரு மகா சக்தியாக மாறும். நீங்கள் இந்தியாவின் ஆத்மாவுக்கு ஏற்பட்டுள்ள புண்ணுக்குத் தடவக்கூடிய களிம்பு மருந்தை எடுத்துக்கொண்டு, கடவுளின் தூதர்களாகச் செல்ல வேண்டும் என்று நான் கூறுகிறேன்.

கிராம வேலை நம்மைப் பயமுறுத்துகிறது. நகரங்களில் வளர்ந்த நாம் கிராம வாழ்க்கையைக் கைக்கொள்ளுவது மகா சிரமம் என்று கருதுகிறோம். கஷ்டமான வேலைக்கு நம் சரீரம் வளைந்து கொடுப்பதில்லை. ஒரு வர்க்கத்தின் ஆட்சியை ஒழித்துவிட்டு, அந்த இடத்தில் மற்றொரு வர்க்கத்தின் ஆட்சியை ஸ்தாபிப்பதற்கு விரும்பாமல், மக்களுக்காக சுயராஜ்யத்தை நிலை நாட்ட விரும்பினால் கஷ்டத்தை நாம் தைரியமாக, ஆண்மையுடன் எதிர்த்து நிற்கத்தான் வேண்டும். ஒரு வர்க்க ஆட்சியை ஒழித்து மற்றொரு வர்க்க ஆட்சியை நிலை நிறுத்துவது மகா மோசமான காரியமாகக்கூடப் போய்விடலாம். இதுவரையிலும் நாம் வாழ்வதற்காக, கிராமத்து மக்கள் ஆயிரக் கணக்கிலே செத்தார்கள்; இப்போது அவர்கள் வாழ்வதற்காக நாம் சாகலாம். ஆனால் இந்த இரண்டு பேரும் சாவதிலும் அடிப்படையான ஒரு வித்தியாசம் உண்டு. கிராமத்து மக்கள் தங்களை அறியாமலே, தாங்கள் வேண்டுமென்று கருதாமலே, செத்தார்கள்; அவர்களைக் கட்டாயப்படுத்தி தியாகம் பண்ணச் செய்த காரியம் நம்மைக் கேவலப்படுத்தி விட்டது. இப்போது நாம் மனசார உணர்ந்தும், இஷ்டப்பட்டும் செத்தால், நம் தியாகம் நமக்கும் நம் நாடு முழுவதற்கும் பெருமை அளிக்கும். சுதந்திரமும் சுயமரியாதையும் உள்ள தேசீய மக்களாக நாம் வாழ விரும்பினால், நம் அவசியமான தியாகத்தில் நாம் தளர்ந்துவிடக் கூடாது.

இந்தியா, தன் நகரங்களில் வாழவில்லை; ஆனால் கிராமங்களில் வாழ்கிறது. நகரத்தில் வாழும் மக்கள் இந்தியாவின் கிராமத்தில் வாழும் மக்களுக்காகவே உயிர் வாழ்வதாகக் காட்டிக்கொள்ள விரும்பினால், நகரங்களிலுள்ள சகல சாதனங்களையும், ஏழைகளின் நிலையைச் சீர்படுத்தி, அவர்களுடன் நட்பு கொள்ளுவதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

நாம் கிராமத்து மக்கள் மீது பரிபாலனம் பண்ணக்கூடாது. அவர்களுடைய ஊழியர்களாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நகர மாந்தர் ஏழைகளின் நலனுக்காக வாழ விரும்பினால், அவர்கள் தங்கள் மாட மாளிகைகளையும், ஸ்தாபனங்களையும், வாழ்க்கை முறையையும் நம் கிராமங்களின் நிலையை அனுசரித்தவையாக மாற்றி அமைக்க வேண்டும்.

யார் கிராம ஊழியராக மாற முடியும்? இந்த வேலைக்கு, ஒவ்வொரு ஊழியரும் நூற்புக் கலையில் பரிபூரண பாண்டித்தியம் உள்ளவராக இருக்க வேண்டும்; அதாவது தத்துவ ரீதியிலும், பிரத்யக்ஷமாகச் செய்து காட்டக்கூடியவாறும் திறமை இருக்க

வேண்டும். ஊழியர் தம் கிராமத்தில் முன்மாதிரியான ஒரு வாழ்க்கையை நடத்த விரும்பினால், அவர் பொதுஜன சுகாதாரத்தைப் பற்றி நன்கு அறிந்து கிராம ஜனங்களுக்கு அதைக் கற்பிக்கும் ஆற்றல் உள்ளவராக இருக்க வேண்டும். தினந்தோறும் ஏற்படக்கூடிய சிக்கு சிப்பந்திகளைத் தீர்த்து வைக்கும் குடும்ப வைத்தியம் அறிந்தவராகவும் இருக்க வேண்டும். எளிய முறையில் கணக்கு வைத்துக் கொள்ளவும் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். எல்லாவற்றையும் விட கிராம ஜனங்களின் நம்பிக்கையைக் கவர்ந்து அவர்கள் உள்ளத்தில் தம் நினைவைப் பதிக்க விரும்பினால், அவர் பரிசுத்தமான வாழ்க்கையை நடத்துபவராக இருக்க வேண்டும். ஆகவே, கிராம ஊழியர் எளிய, சிக்கனமான வாழ்க்கையில் சந்தோஷம் காண்பவராக இருக்க வேண்டும். இது மிகவும் கஷ்டமான காரியமாகத் தோன்றலாம்; ஆனால் பொறுமை நிறைந்த ஒரு மாணவனுக்கு அப்படித் தோன்றாது. எந்த வேலையில் ஈடுபடுவதாயிருந்தாலும், ஒழுக்கமான நடத்தையே முழு முதல் காரியமாக இருக்க வேண்டும். சுகாதார விதிகளைத் தெரிந்து தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்காவிட்டாலும், சிறு சிக்கு சிப்பந்திகளுக்குரிய குடும்ப வைத்தியத்தையும் தெரிந்து கொள்ளாவிட்டாலும், கிராம ஊழியர் ஏதாவது ஒரு நோய்க்கு ஆளாக வேண்டி ஏற்படலாம்.

நம் கிராமங்களைப் பிடித்துள்ள மூன்று வகையான நோய்களைத் தீர்க்கவேண்டி யிருக்கிறது: 1. கூட்டு முறையில் சுகாதாரத்தைக் கவனித்துக் கொள்ளாமல் இருக்கும் நிலை; 2. சத்துக் குறைவான உணவு; 3. செயலற்றுக்கிடக்கும் சோம்பல்......அவர்கள் தங்கள் சொந்த சுகத்தைப் பற்றி அக்கறை செலுத்துவதில்லை. நவீன சுகாதார முறைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளுவதில்லை. நிலத்தைக் கிளறி, வழக்கம்போல செய்து வந்த வேலைகளைச் செய்வதைத் தவிர, மேற்கொண்டு எதுவும் செய்ய அவர்கள் சிரமம் எடுத்துக் கொள்ளுவதில்லை. இந்தக் கஷ்டங்கள் உண்மையிலேயே பெருங் கஷ்டங்களாகவும், கவலை அளிக்கக் கூடியனவாகவும் உள்ளன. நம் சேவையில் நாம் மாளாத நம்பிக்கை வைக்கவேண்டும். மக்களிடத்தில் மிகவும் பொறுமையோடு நடந்துகொள்ள வேண்டும். கிராம சேவைக்கு நாம் புதியவர்களாக இருக்கிறோம். பரம்பரை பரம்பரையாக இருந்துவந்த ஒரு நோயை நாம் போக்கவேண்டியிருக்கிறது. நம்மிடம் பொறுமையும் விடாமுயற்சியும் இருந்தால் மலை போன்ற கஷ்டங்களையும் நாம் கடந்து செல்ல முடியும். நோயாளிகளை விட்டு நீங்கி அப்பால் போய்விட இயலாத தாதிகளைப் போல நாம் இருக்கிறோம்; ஏனென்றால் அந்த மக்களிடம்

> **செய்வது என்ன ?**
>
> வேதம் படித்திடுவோம்
> வெறுங் கைமுழம் போட்டிடுவோ[ம்]
> சாதத்துக் காகச்
> சங்கரனை விற்றிடுவோம் !
> அத்தனைக்கும் மேலல்லோ
> அஹிம்சைக் கதைபேசி
> வித்தகனும் காந்தியினை
> விற்றுப் பிழைக்கின்றோம் !
>
> —புதுமைப்பித்தன்

குணப்படுத்த இயலாத நோய் இருப்பதாக நமக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஒரே வழி என்ன, தெரியுமா? கிராம ஜனங்களிடையே இருந்து அவர்களுடைய போஷகர்களைப் போல இல்லாமல், அவர்களுடைய தோட்டிகளாகவும், தாதிகளாகவும், வேலைக்காரர்களாகவும் விசுவாசத்துடன் வேலை செய்வதுதான்; அப்போது நம் தப்பபிப்பிராயங்களையும், ஏற்கெனவே மனதில் கருதியிருந்த எண்ணங்களையும் மறந்துவிட வேண்டும். சிறிது காலத்துக்கு நாம் சுயராஜ்யத்தையே மறந்துவிடுவோம்; ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் அடி எடுத்து வைத்து நடக்கத் தொடங்கும் போது பணக்காரர்களின் காட்சி நம்மைத் துன்புறுத்துகிறது. அவர்கள் அப்படி இருக்கிறார்கள். இந்தப் பெரிய பிரச்னைகளைப் பற்றி அலசிக்கொண்டிருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். நாம் கிராமத்தில் செய்ய வேண்டிய பவ்வியமான பணியைச் செய்வோமாக. அதுதான் இப்போதும், நாம் நம் லட்சியத்தை அடைந்த பிறகும்கூட அவசியமான காரியமாக இருக்கிறது. உண்மையில், கிராம சேவை வெற்றிகரமாக முடிந்தால், அதுவே நம் லட்சியத்தை நமக்கு அருகாமையில் கொண்டு வந்து விடும்.

நீங்கள் அவர்களுடன் (இந்திய விவசாயிகளுடன்) பேசத் தொடங்கி அவர்களும் பேச ஆரம்பித்துவிட்டால், அவர்கள் வாயிலிருந்து ஞானத்தின் துளிகள் சிதறுவதை நீங்கள் காணலாம். சொர சொரப்பான அவர்களின் வெளித் தோற்றத்தின் மறைவில், ஆழ்ந்த ஆத்ம ஞானக் கடல் கட்டிக் கிடப்பதை நீங்கள் பார்ப்பீர்கள். இதைத்தான் நான் கலாசாரம் என்று சொல்லுகிறேன். மேலை நாட்டில் இந்த சங்கதியை நீங்கள் பார்க்க முடியாது. மேலை நாட்டு விவசாயி ஒருவனுடன நீங்கள் சம்பாஷணை செய்து பாருங்கள்; அவனுக்கு ஆத்மீக விஷயத்தில் கொஞ்சம்கூட அக்கறை இல்லாதிருப்பதை நீங்கள் கண்டு கொள்ளுவீர்கள்.

இந்திய நாட்டைச் சேர்ந்த கிராமவாசியின் சொர சொரப்பான வெளித் தோற்றத்தினுள், பூர்வமான கலாசாரம் மறைந்திருக்கிறது. அவனுடைய மேல் தோற்றத்தைக் களைந்துவிட்டு, அவனுடைய வறுமையையும், கல்வியின்மையையும் அப்புறப்படுத்திவிட்டுப் பார்த்தால், பண்பாடும், அனுபவ முதிர்ச்சியும் பெற்ற நாகரிகமான சுதந்திர புருஷன் ஒருவனுடைய சீரிய தன்மையை நீங்கள் பார்ப்பீர்கள்.

கிராம சேவை.........என்பது உண்மையான கல்வியைக் குறிக்கிறது. உண்மையான கல்வி என்பது எழுதப் படிக்கத் தெரிவதையும், கணக்குப் போடத் தெரிவதையும் குறிப்பதல்ல; சிந்திக்கும் பிராணிகளுக்கு ஏற்ற உண்மையான வாழ்க்கையின் தேவைகளைக் கண்டுகொள்ள அவர்களின் அறிவைத் திறந்து வைப்பதுதான் உண்மைக் கல்வி. மானிடப் பிறப்புக்கள் சிந்திக்கும் பிராணிகள் என்றுதானே கருதப்படுகின்றன?

யோக்கியமான ஒரு வீட்டுக்கு இணையான பள்ளிக்கூடமும் கிடையாது; யோக்கியமான பெற்றோர்களுக்கு இணையான ஆசிரியர்களும் கிடையாது. தற்

காலத்திய (உயர்நிலைப் பள்ளி) கல்வி கிராமவாசிகளுக்கு தாங்க முடியாத பாரமாக இருக்கிறது. அவர்களுடைய குழந்தைகள், நவீனக் கல்வியைப் பெற இயலவே இயலாது. ஆனால் இந்தக் கல்வியை இழந்ததினால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு கட்டுவது எப்படித் தெரியுமா? யோக்கியமான ஒரு வீட்டில் தகுந்த பயிற்சியைக் குழந்தைகள் பெற்றிருந்தால் போதும். கிராம ஊழியம் செய்யப் போகும் ஆணோ, பெண்ணோ யோக்கியமான ஒரு வீட்டை நடத்துவதற்குத் தகுதியுள்ள கௌரவம் இல்லாதவர்களாயிருந்தால், அவர்கள் கிராம ஊழியப் பதவியில் உள்ள உயர்ந்த சலுகையையோ, உயர்ந்த மரியாதையையோ விரும்பாமல் இருப்பதே மேல்.........கிராமவாசிகளுக்குத் தேவையானது எழுத்துப் படிப்போ, கணித சாஸ்திரமோ அல்ல; அவர்களுக்கு அவசியம் தெரியவேண்டியது அவர்களுடைய பொருளாதார வாழ்க்கையைப் பற்றியும், அதை எப்படிச் சீர்படுத்துவது என்பதைப் பற்றியுமே. இப்போது அவர்கள் உணர்ச்சியற்ற யந்திரங்களைப் போல வேலை செய்துகொண்டு வருகிறார்கள். அவர்கள் தங்கள் சுற்றுப்புறத்தைப் பற்றிய பொறுப்புணர்ச்சி உள்ளவர்களாகவோ, வேலையில் சந்தோஷம் காண்பவர்களாகவோ இல்லை.

இந்தியாவின் கிராமங்கள் இன்று இருப்பதுபோலவேதான் என்றும் இருந்து வந்திருக்கின்றனவா என்று ஆராய்வதில் யாதொரு லாபமும் கிடையாது. என்றுமே அவர்கள் நல்ல நிலையில் இருந்தவர்களல்ல என்றால் அது நாம் பெருமையோடு சொல்லிக் கொள்ளும் நம் புராதன கலாசாரத்தின் பிரதிபலிப்பேயாகும். ஆனால் என்றுமே அவர்கள் நல்ல நிலைமையில் இருக்கவில்லை என்றால், எப்படி அவர்கள், நாம் இன்று கண்கூடாகக் காண்பது போன்ற அழிவிலிருந்து தப்பி நூற்றாண்டுக் கணக்கில் உயிர் பிழைத்து வந்திருக்க முடியும்?... கிராமங்களைப் பீடித்துள்ள இந்த அழிவை எப்படித் தடுப்பது? நகரங்களில் வசிப்பது எவ்வளவு இலகுவானது என்று கருதப்படுகிறதோ அவ்வளவு இலகுவாக கிராமங்களில் ஒருவன் வசிக்கத் தக்கவாறு எப்படி கிராமங்களைப் புனர் நிர்மாணம் பண்ணுவது? இதைச்செய்வதுதான் நாட்டன்பு கொண்ட ஒவ்வொருவருடைய முக்கியமான கடமையாகும். உண்மையில் ஒவ்வொரு தேசபக்தனுடைய மிக முக்கியமான வேலையும் இதுதான்.

கல்வி

வாழ்க்கையின் பல துறைகளிலும் எழுகின்ற பிரச்னையைத் தீர்க்க, மாணவனின் அறிவைப் பயன்படுத்தச் சொல்லிக்கொடுக்கும் கல்விதான் பயனுடையது.

இந்தியாவின் ஜனத் தொகையில் 80 சதவிகிதம் பேர் விவசாயத் தொழிலிலும், 10 சதவிகிதம் பேர் வேறு தொழிலிலும் ஈடுபட்டிருக்கின்றனர். அப்படியிருக்கையில் இலக்கிய ரசனைக்காகவே கல்வி போதிப்பது கடும் குற்றமாகும்.

—மகாத்மா காந்தி

பெண்ணா?

மஞ்சேரி எஸ். ஈச்வரன்

என்னைச் சேர்த்து கண்டக்டர், டிரைவர் முதலியவர்கள் உட்பட மொத்தம் எழுபேர் அந்தக் காரில் இருந்தோம்; எதையும் துல்லியமாகக் கணக்கிட்டுச் சொல்லுவது என் வழக்கம். அது இத்தாலிய டயசல் என்ஜின் கார். போக்குவரத்துச் சாதனங்களைச் சர்க்கார் தேசியமாக்கத் தொடங்கிய சமயத்தில் புதிதாக விடப்பட்ட சில கார்களில் அதுவும் ஒன்று. காருக்கு உள்ளே நுழையும் வாசலின் பக்கமாக நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். எனக்கு எதிராக உட்கார்ந்து கொண்டிருந்த நபரைப் பார்த்தேன். முதலில், திடீரென்று, ஒரு ஓரமாகவே பார்த்தேன்; பார்த்ததுதான்; தொடர்ந்து பல தடவை ரகசியமாகவும், பிறகு துணிவோடு எறிட்ட வாக்கிலும் பார்த்தேன். அங்கு உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணை ஒட்டக ஜாதியோடு ஒன்ருக இணைத்துக் கூற வேண்டுமென்ருல் அதற்கு ஒரு மிருக சாஸ்திர விற்பன்னர் வரவேண்டிய அவசியம் இல்லை; அதே போல, அவளை நாரையினத்தில் சேர்த்துக் கூறவும் ஒரு பக்ஷி சாஸ்திரப் பண்டிதர் வரவேண்டாம். இந்த இரண்டு பிராணிகளின் லட்சணங்களுமே அவளிடம் பொருந்தியிருந்தன; அவளுடைய அங்கங்கள் சிலவற்றையும் அவளுடைய மொத்தத் தோற்றத்தையும் பார்த்தால் அவள் இருபது வயது நிரம்பாத குமரிபோலவும் நடுத்தர வயது ஸ்திரீ போலவும் சர்வ விகாரமான கிழடு போலவும் தோன்றினள். அவள் கூந்தலைக் கோதிவிட்டு முடியலங்காரம் செய்திருந்தாள். முகத்தில் 'மேக்-கப்' செய்யப்பட்டிருந்தது; விரல் நகங்களில் சிவப்பு நிறமான 'க்யூடெக்ஸ்' சாயம் தடவியிருந்தாள். அதுவும் சில விரல்களில் உதிர்ந்து போயிருந்தது. அந்த ஆங்கிலோ-இந்தியப் பெண் ஒரு ஜார்ஜெட் புடவையை உடுத்திக் கொண்டிருந்தாள். அதில் கண்ணைப் பறிக்கும் வர்ணங்களில் பூப் போடப்பட்டிருந்தது. அவள் போட்டிருந்த 'ஜாக்கெட்' கழுத்தை விட்டு மிகவும் கீழே தள்ளி கத்திரித்துவிடப்பட்டிருந்தது. கழுத்தைச் சுற்றியும் ஒரு 'இமிடேஷன்' முத்துமாலை; மடியிலே தோல் பை. பழுப்பு நிறமுள்ள அந்தப் பையில் பாரசீக முறையை ஒட்டிய ஒரு சித்திரம் புடைப்பாகப் பொறிக்கப்பட்டிருந்தது. ஒருவரை ஒருவர் கட்டித்தழுவும் இரண்டு காதலர்கள்; இலைகளுக்கும் மலர்களுக்கும் நடுவே இருந்து பறந்துவந்து தன் அகன்ற புள்ளிகளோடு கூடிய இறகுகளை விரித்து, பிறருடைய கண் பார்வைக்குத் தெரியாதபடி அந்தக்காதலர்களுடைய சுவர்க்கத்தை மறைக்கும் ஒரு அழகான வண்ணாத்திப் பூச்சி-தோல் பையில் பொறிக்கப்

பிரசவ ஆஸ்பத்திரியில் நர்ஸ் தொழில் பார்க்கும் இரண்டு பெண்கள் ஒரு பிரசவக் கேஸைப் பற்றிப் பேசிக்கொண்டு போகிருர்கள். அவர்கள் பேசும் தோரணையைப் பார்த்தால் அவர்கள் பெண்கள் தானு என்ற ஐயம்பிறக்கிறது; இதற்குக் கரித் துண்டைக் கொண்டு முத்தாய்ப்பு வைக்கிருன் ஒரு பொடிப்பயல்.

பட்டிருந்த சித்திரம் இதுதான். ஜார்ஜெட் புடவையும், கீழே இறக்கிக் கத்திரித்துத் தைக்கப்பட்ட ஜாக்கெட்டும், முத்துமாலையும், தோல் பையும், குதிகால் தூக்கிக்கொண் டிருக்கும் ஜோடுகளும் அவளுடைய ரசனைக்கு லட்சியம்போல அவளுக்குத் தோன்றின. எனக்கோ ....தன் அழகை வெளிக்குக் காண்பிப்பதற்கென்று அவள் பலுக்கிக்கொண் டிருந்ததும், ஏதோ மட்ட ரகமான ஓ-டி-கொலோனுடன் கலந்து அவள் சரீரத்தில் வியர்வை கொட்டுவதும் எனக்கு......



"டிக்கட்! டிக்கட்!" என்று கத்தினன் கண்டக்டர்.

பஸ் நின்றது. பஸ் நிற்கக்கூடிய ஒரு இடம் இது. அதன் பக்கமாகச் செங்கல் கட்டடம் ஒன்று இருந்தது; அது ஒரு பிரசவ ஆஸ்பத்திரி. காரிலிருந்து ஒருவன் எழுந்து, உட்புற வாசலின் வழியாக வெளியே போக முயன்றான். கண்டக்டர் அவனைப் பிடித்து மெதுவாகப் பின்னுக்கு இழுத்து, வெளியே போகும் வாயிலைச் சுட்டிக் காட்டி அதன் வழியாகப் போகும்படி சொன்னன். அவனுக்கு மிகவும் எரிச்சலாக இருந்தது. இதை அடுத்து போட்டி போட்டுக்கொண்டு நான் முந்தி நீ முந்தி என்று காரில் ஏறுகிறவர்களின் சந்தடி ஏற்பட்டது. ஆறுபேர் வழியை மறித்துக் கொண்டு இடித்துப் புடைத்துக் கொண்டு ஒரே மொத்தமாகக் காரில் ஏறினர்கள். கண்டக்டர், 'ஆடுமாடுகளுக்கு உள்ள ஒழுங்கு முறைகூட இல்லை' என்று முனகிக் கொண்டே ஒருவருக்குப் பின் ஒருவராக அவர்களைக் காருக்குள் விட்டான். மிகவும் எரிச்சலுடன் மணியை அடித்தான். பழையபடியும் பஸ் புறப்பட்டது.

"ஹலோ மேன்! *

"இங்கே எங்கே வந்தே?" என்று ஒரு குரல் கேட்டது. யாரென்று ஏறிட்டுப் பார்த்தேன். நான் முன்னே எந்தப் பெண்ணை ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருந்தேனே அந்தப் பெண்ணைப் பார்த்து, ஒரு இளம் பெண் மேற்கண்டவிதமாகச் சொன்னாள்.

* 'ஹலோ மேன்!' என்றால் 'வா அப்பா' என்றுதான் பொருள். ஆங்கிலோ இந்தியப் பெண்கள் பெண்களைப் பார்த்தே 'ஹலோ மேன்!' என்று (ஆண்களைப் பார்த்துச் சொல்லுவதுபோல்) சொல்லுவது உண்டு.

"ஹலோ மேன்!" என்று பதிலுக்குச் சொன்னாள் ஆங்கிலோ இந்தியப் பெண்.

நான் கண்களைத் துடைத்து விட்டு, அகல விழித்து, ஆங்கிலோ இந்தியப் பெண்ணைப் பார்த்தேன். திடீரென்று பெண் ஆணாக மாறிவிட்டாளா என்ன! அதுவும் என் கண் முன்பாகவா! கடவுளே, என்ன அதிசயம் இது! பெண் எங்கே, ஆண் எங்கே! மிகவும் பயந்து போய் ஆங்கிலோ—இந்தியப் பெண்ணை நன்றாக உற்றுப் பார்த்தேன்; நான் நினைத்தபடி மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. 'ஹலோ மேன்!' என்று ஆணைப் பார்த்து சொன்னது போலச் சொன்ன அவளுடைய சொல்லினால், அந்த மந்திரத்தினால், பெண்ணை ஆணாக்கி விடவோ, சர்வ வல்லமை வாய்ந்த கடவுளின் மகா சக்தியைக் கொன்று விடவோ முடியவில்லை. ஆண், ஆண்தான்; பெண், பெண்தான். ஆனால் இப்படி 'மேன்' என்று கூப்பிட்டுக் கொள்ளுவது, ஒரு வேளை, முதிராத வாலிபப் பிராயத்தின் ஆசைகளின் காரணமாகவோ, ஏமாற்றங்களின் காரணமாகவோ இருக்கலாம்; அல்லது அது ஒரு குறிப்பிட்ட ஜாதிப் பெண்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் அதிக வித்தியாசம் பாராட்டாமல் பழகும் ஒரு முறையை ஒட்டியதாகவும் இருக்கலாம்.

இப்போது காரில் ஏறிய பெண், தன் சிநேகிதையின் பக்கமாக இருந்த காலியிடத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள். இரண்டு பெண்களும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகை செய்து, 'கிளு கிளு' வென்று சிரித்தார்கள். இயற்கையாகச் சிரிக்காமல் வேண்டுமென்று சிரித்த சிரிப்பு அது.

இரண்டு பேருடைய தோற்றங்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தன. புதிதாக வந்த பெண் கறுப்பாகவும் தடியாகவும் இருந்தாள். அவளுக்கு வயது சுமார் இருபத்திரண்டோ அல்லது அதற்கு இரண்டு வயது குறைவாகவோ இருக்கலாம். அவளுடைய முகமெல்லாம் ஒரேயடியாக தடிப்பு தடிப்பான பருக்கள்; முகத்தில் இலேசாகப் பவுடர் பூசியிருந்தது, பருக்களின் 'தீவுக் கூட்ட'த்தைப் பின்னும் கொஞ்சம் துலாம்பரமாகத்தான் எடுத்துக்காட்டியது. அவள் 'வாயில்'புடவை உடுத்தி 'வாயில்' ஜாக்கெட்டையே போட்டிருந்தாள். அதனால் உள்ளே உடுத்தியிருந்த பாவாடையும், ஜாக்கெட்டின் நீல நிறமான கைகளும், கைகளின் ஓரத்தில் தைக்கப்பட்டிருந்த ஜரிகைக் கரையும் வெளியே தெளிவாகத் தெரிந்தன. அவளுக்கு மிகவும் சுருங்கிய நெற்றி. அதன் மேலாக உள்ள கரிய தலை மயிரை உச்சி வகிடு எடுத்து இருபுறமும் வாரி விட்டு, மொத்தத்தில் 'பன்' ரொட்டி மாதிரி கொண்டுபோய் சுற்றி முடிந்து அதில் கொண்டை ஊசிகளை இறுக்கிச் செருகியிருந்தாள். அந்த 'ரொட்டிக் கொண்டை'யின் மத்தியில் ஒரு சிறு சிவப்பு ரோஜா. அவளுடைய செருப்பின் தோலில் சிவப்புச் சாயம் ஏற்றப்பட்டு, ஓரத்தில் பளபளப்பாக மின்னும் ஜரிகை வைத்துத் தைக்கப்பட்டிருந்தது. செருப்பின் விரல்கள் மேல் நோக்கி வளைந்து சுருண்டிருந்தன. அவள் கழுத்தில் அணிந்திருந்த மெல்லிய தங்கச் சங்கிலியின் ஒரு பகுதி வெளியே தெரிந்தது. அது நீளமான சங்கிலி. அவளுடைய மார்புக்கும் கீழாக இறங்கித் தொங்கியது அந்தச் சங்கிலி. அதன் நுனியில் ஒரு அலங்காரமான சிலுவை. இதெல்லாம் அவளுடைய மெல்லிய புடவையை ஊடுருவிக்கொண்டு வெளியே தெரியும்படியாக மினுமினுத்தது. அந்தப் பெண்ணின் வலது கரத்தில் 'பொடி'யான நான்கு பொன் வளையல்கள் கிடந்தன. அவளுடைய இடது கையை ஒரு சிறு ரோல்டுகோல்டு கடிகாரம அலங்கரித்துக் கொண்டிருந்தது. அந்தக் கையிலேயே, தன் குட்டையான தடித்த விரலில் கல் பதித்த மோதிரம் ஒன்றை அணிந்திருந்தாள். அவளிடம் ஒரு வெல்வெட் பை இருந்தது; ஒரு பட்டுக் கயிற்றில் கட்டித் தொங்கும் அந்தப் பை இப்படியும் அப்படியும் ஆடி அசைந்துகொண்டிருந்தது. இந்தமாதிரி ஆடை யாபரணங்களுடன் காலைப் பரப்பிக்கொண்டு 'ஜப்' என்று குதிர்போல உட்கார்ந்திருந்த அவளைப் பார்க்கவே சகிக்கவில்லை. அவளுடைய கண்கள் மூடித் திறப்பதில் தென்படும் அந்தக் குதூகலத் தோற்றம் மட்டும் இருந்திராத பட்சத்தில் அவளைப் பார்க்கப் படு பயமாக இருந்திருக்கும்.

"வேலை முடிந்தது அல்லவா?" என்று ஆங்கிலோ — இந்தியப் பெண்ணைப் பார்த்துக் கேட்டாள் அந்தப் பெண்.

"வேலை முடிந்தது" என்று ஒரு போலிச் சிரிப்போடு பதில் வந்தது.

"எங்கேயாவது சினிமாவுக்கா? இப்போது மூன்று அருமையான படங்கள் ஏக காலத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. எதற்கென்று போவது?"

"ஆமாம், அது ஒரு சங்கடந் தான். ஆனல் நான் இப்போது சினிமாவுக்குப் போகவில்லை."

இருவரும் அர்த்தபுஷ்டியோடு ஒருவரை ஒருவர் இமை கொட்டிய வண்ணம் பார்த்துக்கொண்டார்கள்.

அது கோடைகாலம்; அன்று பிற்பகல் மிகவும் உஷ்ணமாக இருந்தது; ரோட்டிலே காரும் வண்டியும் போய் ஒரேயடியாக புழுதி பறந்துகொண் டிருந்தது. சுற்றிலும் உள்ள ஒவ்வொன்றும்—கடைகள், வீடுகள், மரங்கள், காலி மனைகள், கட்டுக்கிடைக் கூவம்; எல்லாமே—உஷ்ணத்தினுலும், புழுதியினுலும் அலுத்துச் சலித்துக் கிடந்தன. ஒரு மட்ட ரகமான ஹோட்டலில், ஒரு இந்தி இசைத்தட்டை அறுத்துக் கொண்டிருந்தது ஒரு கிராம போன்.

ஆங்கிலோ இந்தியப் பெண், "சீ! நேற்றிரவு ஒரே நச்சு!" என்றுள்.

"என்ன, ஏதாவது ஆபத்தான கேஸா?"

"ஆமாம்; நடு ராத்திரியில் வந்து சேர்ந்தது."

"பிரசவம் ஆய்விட்டது அல்லவா?"

"ஆய்விட்டது."

இருவரும் நர்ஸ் தொழில் பார்க்கிறவர்கள் போலிருக்கிறது! கொஞ்சம் ரகசியம்போல தாழ்ந்த குரலில் இரண்டுபேரும் பேசினர்கள்.

"ரொம்பவும் கஷ்டப் பிரவசமோ?"

"நீ ரொம்பவும் லேசாகச் சொல்கிருயே!"

"ஆயுதப் பிரயோகமா? அறுத்து எடுத்தீர்களோ?"

"ஊஹூம்."

"பிள்ளை செத்துப்பிறந்ததாக்கும்?"

"அதேதான். ஆனல் பிரசவத்திற்குப் பின் பயங்கரமான ரத்தப் பெருக்கு."

"அவள் உயிரோடு இருக்கிருளா?"

"நான் 'வார்'டை விட்டு வெளியே வரும் வரையில் உயிரோடுதான் இருந்தாள். ஆனல் அவள் செத்துப் போயிருக்கவேண்டும் என்று தான் நினைக்கிறேன்."

"பாவம்!"

"பாவம் என்ன, பாவம்! இது ஒரு ருசிகரமான கேஸாக்கும். அவளுக்கு வயது இருபத்தைந்து தான் ஆகிறது. பத்துத்தடவை கர்ப்பம் தரித்திருக்கிருள்; ஆறு தடவைகள் பரிபூரணமாகக் கருச்சிதைவு. மூன்று குழந்தைகள் ஏதோ ஒரு வயது நிரம்பும் வரைக்கோ, அல்லது கொஞ்சம் அதிகமாகவோ உயிரோடு இருந்துவிட்டு மண்டையைப் போட்டுவிட்டன. மூத்த குழந்தைதான் உயிரோடு இருக்கிறது. பாவம்தான், உண்மையில் அவள் விஷயம்தெரியாத பெண்! இந்தப் பெண்கள் எல்லோருமே ஒன்றும் தெரியாத மக்குகளாகவும் பயந்தாங்கொள்ளிகளாகவும் இருக்கிருர்கள்."

"ஆம்படையான் என்ன வானுன்?"

"யார்? அவள் புருஷனு?"

"ம்ம்"

"அவன் ஒரு அஷ்ட தரித்திரம்! ஒரேயடியாகக் கிழடு தட்டிப்போய் தன் தாத்தாவைப் போல இருக்கிருன். ஏதோ கவர்மெண்டு ஆபீசில் கிளார்க்காம்."

"ஒருவேளை அவள் அவனுக்கு இரண்டாம் தாரமோ?"

"இரண்டாம் தாரம் என்ருல் என்ன, மூன்ரும் தாரம், நாலாம் தாரம் என்ருல்தான் என்ன?"

"டிக்கட் டிக்கட்!" என்று கத்தினன் கண்டக்டர்.

ஆயிரம்விளக்கில் வந்து நின்றது பஸ். ஆங்கிலோ—இந்தியப் பெண் காரை விட்டுக் கீழே இறங்கினள். இறங்கினதுதான் தாமதம், அப்படியே போய் தெரு மேடையில் சிகரெட் பிடித்துக்கொண்டு நின்ற ஒரு இளைஞனின் கரங்களில் ஐக்கியமாகிவிட்டாள். அந்த இளைஞனுடைய உடைகள் யாவும் ஒரே மினு மினுப்பாக இருந்தன. கால்சாராயில் நீள நீளமாக மடிந்து சுருக்கல் விழுந்திருந்தது. தோல் பூட்ஸுகள் போட்டு, கழுத்தைச் சுற்றியும் ஒரு ஜொலிப்பான 'டை' கட்டியிருந்தான்; அவன் தலையில் வைத்திருந்த தொப்பி ஒரு பக்கம் கோணலாகச் சரிந்திருந்தது. பிரியமான பூனைக்குட்டி மாதிரி அவனிடம் போய் ஒண்டினள் அந்தப் பெண். அவனுடைய ஒருகை, வாயிலிருந்து சிகரெட்டை எடுத்தது. மற்றெரு கை, மெள்ள மெள்ளபோய் அவளுடைய இடையைச் சுற்றியது. அவள் சிரித்தாள்; அவன் இளித்தான்.

"போய் வாரேன்" என்று தன் சிநேகிதையைப் பார்த்துக் கையை ஆட்டிக்கொண்டு சொன்னள் பெண்.

"போய் வா" என்று பதில் வந்தது.

பஸ் நகர்ந்தது. நான் வெளியே எட்டிப் பார்த்தேன். அங்கே ரோட்டு வளைவில் இருந்த சுவர் முழுவதிலும் ஒரே சினிமா விளம்பரங்கள்; அவற்றின் மேல் ஒரு பொடிப் பயல் கரித்துண்டை வைத்துக்கொண்டு அக்கரையோடு என்னவோ வேலை செய்துகொண்டிருந்தான். அந்த சினிமா விளம்பரப் படங்களிலேயே மிகவும் வர்ணம் ஜாலம் செய்துகொண்டிருந்த ஒரு படத்தில் ஒரு சினிமா நடிகை சாய்வாக மல்லாந்து படுத்துக்கொண்டிருப்பது போல் வரையப்பட்டிருந்தது. ஒரு காலை நீட்டியவாக்கிலும், மற்றெரு காலை மடக்கிக்கொண்டும் அவள் படுத்திருந்தாள். கைகள் இரண்டும் கீழே விரிந்து கிடந்தன; கண்களை மேல் நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தாள். குஷியான ஒரு பள்ளியலறைக் கோலம்தான் அது. அந்தப் படத்தில் இருக்கும் ஏதோ ஒரு குறைபாட்டைப் பூர்த்தி செய்கிறவனைப் போல், அந்தப் பையன் கரித் துண்டால் அதற்கு மீசை போட்டுக்கொண்டிருந்தான். பிறகு என் முகத்தைத் திருப்பி, எனக்கு எதிரே உட்கார்ந்து கொண்டிருந்த பெண்ணைப் பார்த்தேன். அவளுடைய தோற்றம் பாவமற்றுத் தோன்றியது. ஆஸ்பத்திரி வார்டில் செத்தோ, செத்துக் கொண்டோ கிடக்கும் அந்தப் பெண்ணைப் பற்றி அவள் நினைத்துக் கொண்டிருந்தாளோ?...... அல்லது, பஸ் நிற்கக் கூடிய ஒவ்வொரு இடத்திலும், ஒரு காதலன் தனக்காகக் காத்துக் கொண்டிருப்பான் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தாளோ?

✲

ஒரு சினிமா விமரிசனம்

இந்தப் படம் மனிதனுடைய கேவலமான உணர்ச்சிகளையும் கூடத் தூண்டவில்லை.

—காம்பெல் டிக்ஸன்

அன்பர்களனைவருக்கும்
எங்கள்

தீபாவளி வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

"யுனைடெட் இந்தியா பில்டிங்ஸ்"

எஸ்பிளனேட் :: சென்னை

நீங்கள் படித்தீர்களா?

மகாத்மா காந்தி — **வெ. சாமிநாத சர்மா**

இந்தத் தலைசிறந்த புத்தகத்தில் உலகத்தின் பேரறிஞர் பலர் மகாத்மா காந்தியைப் பற்றி எழுதியுள்ளனர். காந்திஜியைப் பற்றி இதைவிடச் சிறந்த ஒரு தொகுப்பு நூல் கிடையாது.

விலை ரூ. 10-0-0

ஆன்டன் செஹாவ் — **புரசு பாலகிருஷ்ணன்**

ஆன்டன் செஹாவ் ருஷியாவுக்கு மட்டுமல்லாமல், உலகத்திற்கே ஒரு சிறுகதைச் சக்கரவர்த்தியாக இலங்கு கிறார். இவருடைய கதைகளைப் பாராட்டாத இலக்கிய அறிஞர்கள் கிடையாது. இந்தச் சிறுகதைச் சக்கரவர்த்தி யின் வாழ்க்கை வரலாறு இது.

விலை ரூ. 3-8-0

இலக்கிய விமர்சனம் — **சிதம்பர ரகுநாதன்**

தயாதாட்சண்யம் பாராமல் மிகவும் துணிவுடன் தமிழ் நாட்டு இலக்கியத்தை ஆசிரியர் இந்தப் புத்தகத்தில் விமர் சனம் செய்திருக்கிறார். பல அறிஞர்கள் பாராட்டிய நூல்.

விலை ரூ. 2-0-0

புதுமைப் பித்தன் — **சிதம்பர ரகுநாதன்**

சிறுகதை மன்னர் புதுமைப் பித்தனுடைய வாழ்க்கை வரலாற்றை, அவருடன் நேரில் பழகிய ஸ்ரீ சிதம்பர ரகுநாதன் விரிவாக எழுதியிருக்கிறார். புத்தகம் அச்சில் இருக்கிறது. விரைவில் வெளிவரும். புத்தகத்துக்காக உங்கள் பெயரை உடனே பதிவு செய்துகொள்ளுங்கள்.

தமிழ்ப் புத்தகாலயம்

மயிலாப்பூர் :: சென்னை 4.

அந்தச் சீப்பைப் பிறர் பாழாக்குவது கண்டு கோபாலனுக்கு ஒரே ஆத்திரம். கடைசியில் தன் ஆத்திரத்தைத் தீர்க்க ஒரு வழி கண்டு பிடித்தான்; அந்த விசித்திரமான வழி ஏதோ வேதாந்தம்போல இருக்கிறது! அது என்ன?

சொந்தச் சீப்பு

கி.ராஜநாராயணன்

கோபாலனோடு அந்த அறையில் நான்குபேர் வசித்து வந்தார்கள். நால்வரும் அவ்வூரில் ஒரே பள்ளிக்கூடத்தில் வேலை பார்க்கும் உபாத்தியாயர்கள். அந்த ஊரில் வீடு கிடைக்காத கஷ்டத்தினாலேயே அவர்கள் அப்படிக் கூடி வாழ நேர்ந்தது.

நண்பர்கள் எல்லோரும் சந்தோஷத்துடனேயே வசித்து வந்தார்கள். கோபாலனுடைய மனசு மாத்திரம் சில நாட்களாக கவலை கொள்ள ஆரம்பித்து விட்டது. அதை நினைக்க நினைக்க அவனுக்கு ஒரே சங்கடமாக இருந்தது.

கோபாலன் தன் பக்கத்து ஜன்னலில் இருக்கும் கண்ணாடியையும் சீப்பையும் ஒருதடவை பார்த்தான். பட்டென்று முகத்தை இந்தப்பக்கம் திருப்பிக்கொண்டான். அவனுடைய துக்கமெல்லாம் அந்த சீப்பு கண்ணாடியைப் பற்றியதே.

அந்தக் கண்ணாடி மிகவும் நேர்த்தியானது; நல்ல உறுதியானது; அழகானதும் கூட. அதில் முகத்தைப் பார்ப்பவர்கள் அதையும் பர்ப்பார்கள்.

அதன் பக்கத்தில் உறுதியான வெள்ளைச் சீப்பு ஒன்று இருக்கிறது. தந்தத்தினால் செய்தது. அதைப் பார்த்த உடனேயே எடுத்து சீவிக்கொள்ளத் தோன்றும்.

அன்று திங்கட்கிழமை காலை. இன்னும் நண்பர்கள் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. கோபாலனும் படுத்துக் கொண்டுதான் இருந்தான்.

இப்படியாகச் சிறிது நேரம் சென்றது. கடிகாரம் மணி எட்டு அடித்தது. நண்பர்களில் ஒருவர் எழுந்திருந்தார். நேராகச் சீப்பு கண்ணாடி இருக்கும் ஜன்னல் பக்கம் சென்றார். தம் முகத்தை ஒருதடவை அந்தக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டார். அவர் முகத்தில் திருப்திக்குறி காணப்பட்டது. உடனே சீப்பை எடுத்தார். சீவ ஆரம்பித்துவிட்டார். கோபாலன் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டே இருந்தான். நண்பர் சீவினார்; சீவினார்; வெகுநேரம் சீவினார்.

இரண்டாவது நண்பர் எழுந்திருந்தார். அவரும் கண்ணாடியின் பக்கம் வந்தார். முகத்



தைப் பார்த்தார். ஜெவ ஆரம்பித்தார்.

மூன்றாவது நண்பர் எழுந்திருந்தார்...............அவரும் அப்படியே..........

· கோபாலன் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டேதான் இருந்தான்.

மூன்று நண்பர்களும் குளிக்கப் புறப்பட்டார்கள். கோபாலன் காலையில் குளிக்கும் பழக்கமுடையவனில்லை. ஆதலால் பேசாமல் படுத்துக்கொண்டே இருந்தான்.

நண்பர்கள் வெளியே சென்றதும் சிறிதுநேரம் கழித்து கோபாலன் மெதுவாக எழுந்திருந்தான். நண்பர்களின் படுக்கைகள் சுருட்டி வைக்கப்படாமல் அப்படியே கிடந்தன. அவன் தன் படுக்கையைச் சுருட்டி வைத்தான். தண்ணீரால் முகத்தைக்

கழுவினான். முகத்தைத் துடைத்துக்கொண்டே கண்ணாடி இருக்கும் ஜன்னல் பக்கத்தில் போனான். சீப்பைப் பார்த்ததும் அவன் மனம் மிகவும் வேதனைப் பட்டது. அதில் ஒரே அழுக்கு நிறைந்திருந்தது. ரோமங்களும் இருந்தன. ஒரு சின்னப் பேன் கூட இருந்தது. அதைச் சீவிய நண்பர்கள் துடைக்காமல் அப்படியே வைத்துவிட்டுச் சென்றிருந்தார்கள்.

கோபாலன் அழாக்குறையாக அதை எடுத்து நன்றாகத் துடைத்தான். ஊதினான். ஒரு பொடிக் குச்சியை எடுத்து அழுக்கையெல்லாம் போக்கி சீப்பைப் பழைய வெண்மைக்குக் கொண்டு வந்தான். இப்போது அவனுக்கு சிறிது திருப்தி உண்டாயிற்று. கண்ணாடியை எடுத்துத் துடைத்து முகத்துக்கு நேராக சரிப்படுத்தி வைத்துக் கொண்டு சீவினான். முடிந்ததும் சீப்பை நன்றாகத் துடைத்து வைத்தான்.

காப்பி சாப்பிட சில்லறையை எடுத்துப் பைக்குள் போட்டுக் கொண்டு அறையைப் பூட்டி சாவியை நிலைமேல் வைத்துவிட்டுப் புறப்பட்டான்.

* * *

அந்தச் சீப்பும் கண்ணாடியும் கோபாலனின் கல்யாண சமயத்தில் வாங்கியவை. வெகுநாட்களாகியும் அவை நன்றாக உழைத்து வந்தன. கோபாலன் பணக்காரன்தான் என்றாலும் மிகவும் செட்டுடையவன். தன் சாமான்களை வெகு பந்தோபஸ்தாக உபயோகிப்பான். அவனுக்குத் தெரிய வாங்கிய அவனுடைய நண்பர்களின் சீப்புகளும் கண்ணாடிகளும் முறிந்தும் உடைந்தும் போயின. ஆகவே தான் நண்பர்கள் அவனுடைய சீப்பையும் கண்ணாடியையும் உபயோகித்து வந்தார்கள். மேலும் கோபாலன் சிறிது சங்கோஜி. கேட்கவா வேண்டும்!

நண்பர்கள் குளித்துவிட்டு வந்தார்கள். தலைக்கு எண்ணெய் தேய்த்தார்கள். மீண்டும் மீண்டும் சீவினார்கள்.

கோபாலன் வந்தான். இந்த அமளியைப் பார்த்துச் சகிக்கவில்லை அவனுக்கு. பேசாமல் பேப்பரை எடுத்து வைத்துக் கொண்டு வாசிக்க ஆரம்பித்தான். முடியவில்லை. படங்கள் பார்க்க ஆரம்பித்தான்.

நண்பர்கள் வெகுநேரம் பேசிய வண்ணம் சீவிக் கொண்டே இருந்தார்கள்.

ஒருவாறு முடிந்தது. எல்லோரும் கோபாலன் பக்கம் வந்தார்கள்.

"என்ன ஐயா கோபாலன்; ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்? வீட்டுக்கவலை வந்து விட்டதோ?" என்று ஒரு நண்பர் கேட்டார்.

"வீடு எனில் என்ன பொருள் ஐயா"? என்று மற்றொரு பண்டித நண்பர் கேள்வி போட்டார். இப்படியாக 'தமாஷ்கள்' கிளம்பின. கோபாலன் இதில் அதிகமாகப் பங்கு கொள்ளவில்லை. ஆயினும் மத்தியில் இரண்டொரு வார்த்தைகள் பேசி வைத்தான்.

நேரமாகிவிட்டபடியால் நண்பர்கள் சாப்பிட்டுப் பள்ளிக் கூடம் போகப் புறப்பட்டார்கள்.

கோபாலன் எழுந்து மீண்டும் ஒருதடவை சீப்பை எடுத்து சுத்தம் செய்து வைத்தான்.

அவனால் இதைச் சகிக்க முடியவில்லை. 'எத்தனை நாள்தான்

இதைப் பொறுத்துக்கொண்டிருப்பது? ஒருவன் சீப்பை எடுத்து இத்தனை பேர் சீவலாமா? இது ஏன் இவர்களுக்குத் தெரிய மாட்டேன் என்கிறது?' இவ்வாறெல்லாம் பலவாருகச் சிந்தித்துக்கொண்டே பள்ளிக்கூடம் புறப்பட்டுச் சென்ருன்.

*   *   *

ஒருநாள் கோபாலன் கண்ணுடியின் முன் நின்று சீவிக்கொண்டிருந்தான். திடீரென்று "நண்பர் சுந்தரம், இங்கே வாருங்கள்" என்று தன் நண்பர்களில் ஒருவரை அழைத்தான்.

நண்பர் சுந்தரம் வந்தார்.

"இந்தச் சீப்பையும் கண்ணுடியையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். நான் இன்று வேறு சீப்பும் கண்ணுடியும் வாங்கிக்கொள்ளப் போகிறேன்" என்று எடுத்துக் கொடுத்தான். அதற்கு நண்பர் சுந்தரம்,

"நான் வாங்கிக் கொள்கிறதென்னேயா, அதுகள் அங்கேயே இருக்கட்டும்; நாங்கள் உபயோகித்துக் கொள்கிருேம். நீங்கள் வேண்டுமானல் வேறு வாங்கிக் கொள்ளுங்கள்" என்ருர் நண்பர்.

கோபாலன் "சரி" என்ருன். அவன் நெஞ்சிலிருந்து ஒரு பெரிய பாராங்கல் இறங்கிய மாதிரி இருந்தது.

நிம்மதியாக சீப்பையும் கண்ணுடியையும் ஜன்னலில் வைத்தான். பஜாருக்குப் புறப்பட்டான்.

அன்று கடைசி ஞாயிற்றுக் கிழமையாதலால் கடைகள் மூடியிருந்தன. ஆகவே சீப்பு கண்ணுடி வாங்க முடியவில்லை.

'பரவாயில்லை நாளை வாங்கிக் கொள்ளலாம்' என்று திரும்பினன். அன்று கோபாலன் மிகவும் சந்தோஷத்தோடு இருந்தான். சினிமா பார்க்கக்கூடச் சென்ருன்.

மறுநாள் சீப்பு கண்ணுடி வாங்க அவனுக்கு நேரம் கிடைக்கவில்லை. அதற்கு மறுநாள் அதைப்பற்றி அவனுக்கு ஞாபகம் இல்லை. இப்படிச் சில நாள் அவகாசமின்மையும் ஞாபக மறதியுமாக அவன் சீப்பும் கண்ணுடியும் வாங்காமலே இருந்து விட்டான்.

கோபாலன் இப்பொழுதெல்லாம் பழைய சீப்பை வைத்தே சீவிக்கொள்ளுகிருன். நண்பர்களும் அதையே உபயோகிக்கிருர்கள். அந்த அறைக்கு வருகிறவர்கள் போகிறவர்கள் கூட உபயோகிக்கிருர்கள். கோபாலன் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிருன். அவன் மனசு இப்போது கொஞ்சங்கூடக் கஷ்டப்படுவது கிடையாது. அந்தச் சீப்பும் கண்ணுடியும் இப்போது அவனுக்குச் சொந்தமில்லை என்பதிஞலோ, என்னவோ!

*

உயர்ந்த யோக்கியதாம்சம்!

ஒரு ஆபீஸ் மானேஜராக வருவதற்குரிய உயர்ந்த யோக்கியதாம்சம் என்ன தெரியுமா? ஆபீஸ் முதலாளியின் மகளைக் கல்யாணம் செய்து கொள்ளுவதுதான்.

—வில் லாதர்

காந்திக்குக் கடிதம்

●

லியோ டால்ஸ்டாய்

கட்செட்டி, ருஷ்யா
செப்டம்பர் 7, 1910.

உங்களுடைய பத்திரிகை கிடைக்கப் பெற்றேன். சத்தியாக்கிரஹிகளைப்பற்றி அதில் கூறப்பட்டிருக்கும் விஷயங்களைப் பார்த்து மகிழ்ந்தேன். அதைப் பார்த்ததும் எனக்குத் தோன்றிய எண்ணங்களைப்பற்றி உங்களுக்குச் சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

நாட்கள் செல்லச் செல்ல, அதுவும் நான் சாவை நெருங்குகிறேன் என்று துல்லியமாக உணருகிறபோது, குறிப்பாக எதை நான் ஸ்பஷ்டமாகப் பார்க்கிறேனோ, எனக்கு எது முக்கியமாகத் தோன்றுகிறதோ, அதாவது 'சத்தியாக்கிரஹப் போரை'ப் பற்றிப் பிறருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால் சத்தியாக்கிரஹப் போர் என்பது பொய்யான வியாக்கியானங்களால் பாதிக்கப்படாத காருண்ய போதனைதான். மனித ஆத்மாக்கள் ஒன்று சேர வேண்டும் என்று தூண்டுகிற அந்தக் கருணை, கருணையின் அடியாகப் பிறக்கிற செயல் முறைதான் மனித வாழ்க்கையின் மகோன்னதமான ஒரே நீதி. தன்னுடைய ஆன்மாவின் அடித்தளத்தில் (குழந்தைகளிடம் இதை நாம் காண்பதுபோல) மனிதன் இதை உணருகிறான்; அறிகிறான். உலகத்திலுள்ள பொய் புனைசுருட்டுக்களில் சிக்காத வரையில் இதை நன்றாக உணருகிறான். இந்த நீதி, இந்திய, சீன, கிரேக்க, எபிரேய, ரோமானிய ஞானிகள் எல்லோராலும் போதிக்கப்பட்டு வந்தது. அன்பு நெறியில்தான் எல்லா நீதிகளும், தீர்க்கதரிசிகளும் காணப்படுகிறார்கள் என்று போதித்த ஏசு கிறிஸ்து இந்தத் தர்மத்தைத் தெளிவாகக் கூறியுள்ளார் என்று நினைக்கிறேன்.

ஆனால் இந்த நீதி பிற்காலத்தில் பாதிக்கப்படும் என்று முன்கூட்டியே அறிந்து அதன் ஆபத்தை உடனடியாகச் சுட்டிக் காண்பித்தார். தங்களுடைய நலனைப் பாதுகாக்க ஹிம்சையைத் தற்காப்பாக உபயோகப்படுத்துவது, பலாத்காரத்துக்குப் பதில் பலாத்காரம், தங்களிடமிருந்து பறிபோன சொத்தைப் பெற ஹிம்சையைக் கையாளுவது போன்ற ஆபத்துக்கள் உலக ஆசாபாசங்களுக்கிடையில் வாழுகிற மக்களின் இயற்கை. வாழ்க்கையின் அடிப்படை நீதியாக உள்ள அன்பு நெறிக்குப் பலாத்காரம் கட்டிவராது. அதாவது பலாத்காரம் கையாளப்படுமானல் அன்பு நெறியின் பலம் குறைந்துவிடுவது புலனாகும். ஆகவே வாழ்க்கையில் அன்பு நெறி தள்ளப்பட்டு விடுகிறது என்பதை ஒவ்வொரு அறிவுள்ள மனிதனும் உணர்ந்தே தீர வேண்டும். ஏசு கிறிஸ்துவும் இதை அறிந்திருந்தார். இந்தக் குறைபாட்டை,

ருஷ்யர்களும், உலகத்தவர்களும் டால்ஸ்டாயை மிகப் பெரிய ருஷ்ய மகான் என்கிறார்கள்; இந்தியர்களும் உலகத்தவர்களும் காந்திஜியை மிகப்பெரிய இந்திய மகான் என்கிறார்கள். ருஷ்ய மகான் இந்திய மகானுக்கு எழுதிய கடிதம் இது. காந்திஜி, தம்முடைய குருவென்று டால்ஸ்டாயை அழைத்தார். ஆகவே இது, குரு சிஷ்யருக்கு எழுதிய கடிதமும் கூடத்தான்.

முரண்பாட்டை, அறிந்தோ அறியாமலோ கிறிஸ்தவ நாகரிகம் அமோகமாக வளர்ந்து வந்திருக்கிறது.

அன்பு நெறியில் பலாத்காரமும் அஹிம்சையும் இடம் பெற்ருல் அன்புக்கே இடம் இல்லாமல் போய்விடும்; அப்போது அன்பு, வாழ்க்கையின் நீதியாக இருக்க முடியாது. அன்பு நெறி இல்லாவிட்டால், உலகத்தில் நீதிக்கே இடம் இருக்காது. பலாத்காரத்தைத் தவிர, அதாவது பலசாலிகளின் ஆதிக்கம்தான் நிலவும். சென்ற பத்தொன்பது நூற்ருண்டுகளாக இந்த ரீதியில் தான் கிறிஸ்தவர்கள் வளர்ந்து வந்திருக்கிருர்கள். தொன்று தொட்டு மக்கள் தங்கள் வாழ்வைச் செம்மையுற அமைத்துக் கொள்ள பலாத்காரம்தான் வழி காட்டியாக இருந்து வந்திருக்கிறது.

கிறிஸ்தவர்களுக்கும் மற்ற தேசத்தவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன வென்ருல் கிறிஸ்தவர்களுடைய காட்டில் அன்பு நெறியைத் திட்ட வட்டமாக வெளியிட் டிருந்தனர்; மற்றவர்கள் அப்படிச் செய்ய வில்லை என்பதுதான். கிறிஸ்தவர்கள் இந்த அன்பு நியதியை ஒப்புக் கொண்டு ஒழுகி வந்த சமயத்திலேயே பலாத்காரத்துக்கும் இடம் கொடுத்துவிட்டார்கள்; பலாத்காரத்தின் அடிப்படையிலேயே தங்கள் வாழ்வையும் நிர்மாணித்து விட்டார்கள். அதனுல் தான் அவர்களுடைய வாழ்க்கையே முரண்பாடுகள் நிறைந்ததாகத் தோன்றுகிறது. அவர்களுடைய கொள்கைக்கும், அவர்களுடைய உண்மையான வாழ்க்கையில் அனுஷ்டிக்கும் முறைகளுக்கும் வேறுபாடுகள் அதிகம் உண்டு. அன்பை வாழ்க்கையில் நீதியாகக்கொண் டிருப்பதற்கும், ஆளுபவருடைய ஆதிக்கம், நீதிமன்றங்கள், சேனைகள் முதலியவற்றின் அதிகாரம் வாழ்க்கையின் பல துறைகளில் அத்தியாவசியத் தேவையென்று போற்றப்பட்டு பலாத்காரம் அங்கீகரிக்கப்படுவதற்கும் எவ்வளவு முரண்பாடு! கிறிஸ்தவர்களுடைய வளர்ச்சியுடன் அவர்களுடைய வாழ்க்கையில் உள்ள முரண்பாடுகளும் வளர்ந்து வந்திருக்கின்றன; அதுமட்டு மல்லாமல் அது உச்ச நிலையை அடைந்துவிட்டது.

ஆகவே இன்றைய பிரச்னை இதுதான்: ஒன்று கிறிஸ்தவ மத போதனைகளை அனுஷ்டிக்காமல் கை விட்டுவிட்டு வலியாரின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்; அல்லது நீதிமன்றங்களையும் கட்டாய வரிகளையும், போலீஸ் ஸ்தாபனத்தையும் முக்கியமாகச் சேனைகளையும் அடியோடு ஒழித்துவிட வேண்டும்.

இந்த வருஷம் மாஸ்கோவில் பெண் பள்ளிக்கூடம் ஒன்றில் சுவிசேஷப் பரீட்சை ஒன்று வைத்தார்கள். அப்பொழுது அங்கிருந்த உபாத்தியாயரும் மத போதகரும் அந்தப் பெண்களை, கிறிஸ்தவ வேத நூலில் உள்ள பத்துக்கட்டளைகளிலே ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அதுவும் முக்கியமாக ஆருவது நீதியாக ‘கொல்லாமை வேண்டும்’ என்பதில் கேட்டார்கள். அந்தக் கேள்விக்குத் தக்க பதில் அளித்த பின்னர், ‘உயிர்க் கொலையை கடவுள் நீதி எப்பொழுதுமே தடை செய்கிறதா?’ என்று கேட்ட கேள்விக்கு அந்தப் பெண்கள், அவர்களுக்கு முன்பே சொல்லிக் கொடுக்கப்பட் டிருந்தபடி, ‘எப்பொழுதுமே இல்லை’ என்ருர்கள். அதாவது யுத்தத்திலும், குற்றவாளிகளைத் தண்டிக்கும்

பொழுதும் கொல்லலாம் என்று பொருள். பிறகு அந்தப் பெண்களில் ஒருத்தியைப் பார்த்து 'கொல்லுவது எப்பொழுதுமே பாபகரமானதா?' என்று கேட்ட பொழுது, அவள் தடுமாற்றமடைந்து நாணத்தோடு 'எப்பொழுதுமே தான்' என்று பதிலளித்தாள். மத குருவுக்கு ஏற்ற மாதிரி, அவருடைய கொள்கைகளுக்கு ஏற்றவிதத்தில், திடமான சங்கல்பத்துடன் பதில் கொடுத்தாள். கொலைசெய்வதைப் பழைய ஏற்பாடு தடை செய்தது. கொலை செய்வதை ஏசு கிறிஸ்து தடை செய்ததோடு மட்டுமல்லாமல் சகோதரனுக்குத் தீங்கு இழைப்பதையும் தவிர்க்கச் சொன்னார். மத குருவிடத்தில் கண்ணியமான தோற்றமும் சொற்சாதுரியமும் இருந்தும் கூட அவர் வாய் பேசாமல் இருந்துவிட்டார். ஆனால் பெண்ணோ வெற்றியோடு தலை நிமிர்ந்திருந்தாள்.

இன்றைய ஆகாய விமான முன்னேற்றத்தைப் பற்றியும், சிக்கல் நிறைந்த அன்னிய நாட்டு உறவுகளைப் பற்றியும், நாட்டில் உள்ள பல்வேறு கழகங்கள், கூட்டங்களைப் பற்றியும், பலவிதக் கூட்டுறவு ஸ்தாபனங்களைப்பற்றியும், கலையின் முன்னேற்றத்தைப் பற்றியும் தினசரிப் பத்திரிகைகளில் பெருமைபடப் பேசிக் கொள்ளலாம. ஆனால் அதே சமயத்தில் அந்த இள மங்கை சொன்னதைப்பற்றி நாம் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் இருக்கிறோம். ஆனால் அதைப்பற்றி மௌனம் சாதித்துவிட முடியாது. ஏனெனில் அதை எப்பொழுதுமே லேசாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் கருதுகிறான். அபேதவாதம், பொது உடைமை, அராஜகம், ரக்ஷண்ய சேனை, நாளுக்குநாள் அதிகரிக்கும் குற்றங்கள், வேலையில்லாத் திண்டாட்டம், பணக்காரர்களின் பைத்தியக்காரத் தனமான கேளிக்கைக் கூத்துகள், ஏழைகளின் அவதிகள், தற்கொலைகளின் பயங்கரப் பெருக்கம் முதலியன உள்ளே குமுறும் முரண்பாட்டின் எதிரொலிதான். இந்த முரண்பாட்டை எப்படியாவது போக்க வேண்டும். அதை விட்டு வைப்பது கூடாது. அன்பு நெறியை ஒப்புக்கொண்டு, பலாத்காரத்தை நிராகரிக்கும் விதத்தில் அந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டும்.

ஆகவே டிரான்ஸ்வாலில் நீங்கள் நடத்தும் காரியங்கள், உலகத்தின் மற்றொரு பாகத்தில் இருப்பவர்களாகிய எங்களுக்கு அதி அத்தியாவசியமான வேலையாகவும், இந்த உலகத்தில் இப்பொழுது செய்யப்படுகிற காரியங்களிலேயே அதி முக்கியமானதாகவும் தோன்றுகிறது. இந்தப் பணியில் கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி ஏனைய உலக மக்களும் பங்கெடுத்துக் கொள்ளுவார்கள்.

ருஷ்யாவிலும் அந்தப் போக்கு, பட்டாளத்தில் சேர மறுப்பது போன்ற காரியங்களினால் வலுவடைந்து வருகிறது என்பதைக் கேட்டுச் சந்தோஷமடைவீர்களென்று நம்புகிறேன். அதுவும் வருஷா வருஷம் அதிகமாகிக் கொண்டே வருகிறது. பட்டாளத்தில் சேரமறுக்கும் சத்தியாக்கிரஹிகளின் எண்ணிக்கை எவ்வளவுதான் இருந்தாலுமேகூட இவர்கள், கடவுள் தங்கள் கட்சியில்தான் இருக்கிறார் என்று தைரியமாகச் சொல்லலாம். கடவுள் மனிதனைக் காட்டிலும் சக்தி வாய்ந்தவர்.

இன்றைய கிறிஸ்தவர்கள் பாவனைபண்ணுகிற, காலப்போக்கில் பாதிக்கப்பட் டிருக்கும் கிறிஸ்தவக் கொள்கைகளை அங்கீகரிக்கப்பதோடுகூட யுத்த காலங்களில் கொல்லுவதற்காக யுத்த தளவாடங்களும், சேனைகளும் அவசியம் என்பதை ஒப்புக்கொண்டால், அதில் வெளிப்படையான முரண்பாடு இருக்கிறது. அதனுடைய அளவு அண்மையிலோ அப்பாலோ, கூடிய மட்டில் சமீபத்திலேயே தன்னுடைய சொரூபத்தைக் காட்டிவிடும். அது கிறிஸ்தவக் கொள்கைகளைப் பாவனை செய்வதையும், ஆதிக்கத்துக்கு அவசியமாய் உள்ள பலாத்காரத்தையும், பலாத்காரத்துக்குக் காரணமாய்இருக்கும் சேனைகளையும் அழித்தே தீரும். இந்த முரண்பாட்டை உங்களுடைய பிரிட்டிஷ் அரசாங்கமும் சரி, எங்களுடைய ருஷ்ய அரசாங்கமும் சரி உணரத்தான் செய்கின்றன. தங்களுடைய சுய கௌரவத்தைக் காப்பாற்ற மேற்சொன்ன அரசாங்க விரோதமான காரியங்களைத் தடை செய்வதில், வேறு எந்த எதிர்ப்பைத் தடுக்கவும் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளைக் காட்டிலும் அதிகக் கவனமும் சிரத்தையும் காட்டுகின்றன. தங்களுக்கு ஆபத்து எங்கே இருக்கிறது என்று இந்த அரசாங்கங்கள் நன்றாக அறியும். தங்களுடைய நலனைப் பாதுகாக்கும் விஷயத்தோடு மட்டுமல்லாமல், தாங்கள் இருப்பதா அழிவதா என்னும் பிரச்னையைப் பற்றியும் வெகு சிரத்தையோடும் விழிப்போடும் கண்ணுங் கருத்துமாகவும் இருந்து வருகிறார்கள்.

Leo Tolstoy

---

*

ரேடியோவும் தண்ணீரும்

ஸ்வீடனின் தலைநகரான ஸ்டாக்ஹோம் பட்டணத்தில் ரேடியோ நிகழ்ச்சிகள் சிறப்பாக இருகின்றனவா என்பதைத் தண்ணீரால் அளக்கிறார்கள். அதாவது நல்ல நிகழ்ச்சி நடந்தால் துணிகளைத் துவைக்கும் பெண்கள் துவைப்பதை நிறுத்திவிட்டு ரேடியோவின்பக்கம் வந்து விடுவார்கள்; ஆடவர்கள் அப்போது குளிக்கப் போகமாட்டார்கள். ஆகவே எவ்வளவு தண்ணீர் செலவாகியிருக்கிறது என்பதைக் கொண்டு ரேடியோ நிகழ்ச்சிகளின் சிறப்பை அளந்துவிடலாம் அல்லவா?

சிங்க நெஞ்சம்

ஓர் அழகிய பெண், சிங்கத்தைப் பழகிக் கொண்டிருந்தாள். சிங்கம் அவள் வாயிலிருந்த சர்க்கரைக் கட்டியைத் தன் வாயால் எடுத்துக் கொண்டிருந்தபோது ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருந்தாள். சிங்கம் சர்க்கரைக் கட்டியை எடுத்துவிட்டது.

"இதை என்னாலும் செய்யமுடியும்" என்றான் அங்கிருந்த ஒரு வாலிபன்.

"செய்ய உனக்குத் தைரியம் இருக்கிறதா?" என்றாள் பெண்.

"உம்; சிங்கத்தைப் போலவே என்னால் எடுக்க முடியும்"

—நியூகாஸில் ஜர்னல்



மசாலா தோசை சாப்பிட்டிருக்கிறீர்களா—

டால்டாவினால் தயாரித்தது?

6 மணிநேரம் தண்ணீரில் ஊற வைத்து 1½ கரண்டி அரிசியும் ½ கரண்டி உளுத்தம்பருப்பும் வெவ்வேறாக நன்றாக அரைத்துக்கொள்ளவும். இரண்டு மாவுகளையும் சேர்த்து ருசிக்குத்தகுந்தபடி உப்பை போட்டு 12 மணி நேரம்வைத்திருக்கவும். பிறகு ஜலம் ஊற்றி 10 நிமிடங்கள் நன்றாய் கலந்து சுமாறாக கெட்டியாகவும் ஒரே மாதிரி இறுக்கமுள்ளதாயும் செய்துகொள்ளவும்.

சூடான தோசைக்கல்லில் டால்டா வைப்பூசி, ஒரு கரண்டி கலந்த மாவை ஊற்றி, கரண்டியின் பின்புறத்தால் வட்டமாக பரத்தவும். சிறிது டால்டாவை தோசையின் விளிம்பைசுற்றி விடவும். பக்குவமானதும், மறுபக்கம்திருப்பி வேக வைக்கவும். பிறகு மசாலா சேர்த்த உருளைக்கிழங்கு பொடியை மத்தியில்போட்டு தோசையை மடிக்கவும். தோசையை சூடாக சாப்பிடுங்கள்!

பச்சை உணவுகள் சமைத்த உணவுகளைவிட மேலானவையா?

இலவசமான ஆலோசனைகளுக்கு இன்றே — அல்லது என்று வேண்டுமானாலும் — எழுதுங்கள்!

தி டால்டா அட்வைஸரி சர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 78-50 TM

ஆஸ்த்மாவை

குணப்படுத்துவது

ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீணாத்தை குணப்படுத்தி நுரை ஈரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

புத்தகங்கள்

வ. ரா. நூல்கள்

	ரூ அ
சுந்தரி (நாவல்)	5-0
வாழ்க்கைச் சித்திரம்	2-8
கலையும் கலைவளர்ச்சியும்	2-0
புண்ணியமும் பலவீனமும்	0-12
வாழ்க்கை விநோதங்கள்	2-0
மகாகவி பாரதியார்	(அச்சில்)

ராஜாஜி நூல்கள்

வியாசர் விருந்து	10-0
அபேதவாதம்	1-0
கட்டுரைகள்	5-0
அற நூல்கள்	5-0
உலக நிலை	2-0
ஸோக்ரதர்	1-8
தாவரங்களின் இல்லறம்	2-0
சிசு பாலனம்	0-8

தபால் செலவு தனி

சக்தி காரியாலயம்
சென்னை 14

குட்டிக் கதைகள்

ஈசோப்பு

வக்கீலும் குடியானவனும்

ஒரு வக்கீலிடம் ஒரு குடியானவன் வந்தான். வந்து, சிறிது நேரத்துக்கு முன் நடைபெற்ற ஒரு அகஸ்மாத்தான சம்பவத்தை வருத்தத்துடன் தெரிவித்தான்:

“என்னுடைய மாடு உங்கள் மாட்டை முட்டிக் கொன்று விட்டது. இந்த நஷ்டத்தை நான் எதைக்கொண்டு ஈடு செய்வது என்பதை நீங்கள் தெரிவித்தால் நல்லது” என்றான் குடியானவன்.

“நீ ரொம்பவும் யோக்கியமான மனிதனப்பா! நீ பதிலுக்கு உன்னுடைய மாட்டைக் கொடுத்துவிட வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். சரிதானே, இது?” என்றார் வக்கீல்.

“இதுதான் நியாயம்; ஆனல் உங்களிடம் நான் என்ன சொன்னேன்?.... ஓ! தப்பு! தப்பு!! உங்கள் மாடுதான் என் மாட்டைக் கொன்றுவிட்டது” என்று குடியானவன் சொன்னன்.

“அப்படியா? அப்படியானல் இந்த விஷயத்தைப் பற்றி நன்கு விசாரித்தறிய வேண்டும். தவிரவும்....”

“என்ன ‘தவிரவும்’? மற்றவர்களிடம் எதிர்பார்க்கும் நியாயத்தை மற்றவர்களுக்கும் நீங்கள் வழங்குகிற பக்ஷத்தில், என் வழக்கை ‘தவிரவும்’ என்ற பிரஸ்தாபம் இல்லாமல் அல்லவா முடிவு கட்டவேண்டும்?” என்று சொன்னன் குடியானவன்.

நியாயத்தை எதிர்பார்ப்பவர்கள் நியாயம் வழங்கத் தயாராக இருக்க வேண்டும்.

கழுதையும் சிங்கமும்

அகம்பாவம் பிடித்த ஒரு கழுதை ஒரு நாள் ஒரு சிங்கத்தைப் பார்த்து மிகவும் கேவலமாகத் திட்டியது. சிங்கம் முதலில் வாயைத் திறந்து பற்களை வெளியே காட்டியது; பிறகு திரும்பிப் பார்த்து, இப்படி திட்டுவது யார், என்பதைத் தெரிந்து கொண்டதும், “சீ! கழுதையா” என்று மாத்திரம் சொல்லி நிறுத்திக் கொண்டது.

ஈசோப்பு என்ற கிரேக்க தேசத்து அறிஞன் ஏசுநாதர் பிறப்பதற்கு 600 வருஷங்களுக்கு முன் பிறந்தவன். இவன் விலைக்கு வாங்கப்பட்ட அடிமையாக இருந்து, தன் அறிவின் திறத்தால் ராஜசபையின் ஆலோசகனாக மாறியவன். கடைசியில் சில முட்டாள் ஜனங்கள் இவனை மலைமீதிலிருந்து உருட்டிக் கொன்று விட்டார்கள். இவனுடைய கதைகளில் சிலவேனும் பரவாத இடம் உலகத்தில் கிடையாது. சுமார் 300க்கு மேற்பட்ட கதைகள் இன்று கிடைத்துள்ளன. கடந்த மூன்று நூற்றாண்டுகளில் பைபிளுக்கு அடுத்தபடியாக உலகத்திலேயே அதிகமாக விற்ற புத்தகம் இவனுடைய கதைத்தொகுதிதான். இங்கே இவனுடைய சிறந்த கதைகள் எட்டைக் காண்கிறோம்.

கேவலமான பேச்சுக்குப் பதில் கொடுக்க வேண்டுமானால், அதை அலட்சியப் படுத்திவிட வேண்டும்.

பிரயாணிகளும் காக்கையும்

சில பிரயாணிகள் அப்போது தான் புறப்பட்டு நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களுடைய பாதைக்குக் குறுக்காக ஒரு காக்கை பறந்து சென்றது. அந்தக் காக்கைக்கு ஒரு கண் பொட்டை. இதை மிகவும் கெட்ட சகுனம் என்று அந்தப் பிரயாணிகள் கருதி, அன்று பிரயாணம புறப்படக் கூடாது என்று தீர்மானித்துத் திரும்பி விட்டார்கள்.

அவர்களில் ஒருவன் தமாஷ் பேர்வழி; யாரையும் கேலி செய்யக் கூடியவன். அவன் சொன்னான் :

"என்ன அர்த்தமில்லாத காரியம் இது! நமக்கு என்ன நேரப் போகிறது என்பதை இந்தக் காக்கைக்கு முன் கூட்டியே அறியச் சக்தி இருக்குமானால், தன் காரியங்களையும் அது அப்படியே அறிந்து கொண்டிருக்க முடியும். இல்லையா? அந்தச் சக்தி யிருந்திருக்குமானால், தன் கண்ணில் அடிவிழுந்து கண்ணும் பொட்டையாகிப் போய் விடக்கூடிய ஒரு இடத்துக்கு இந்தக் காக்கை போயிருக்குமா, என்பதை நினைத்துப் பாருங்கள்."

சதனங்களைவிடப் பொது அறிவு மேலானது.

கோமாளியும் பன்றியும்

ரோமாபுரிப் பிரபு ஒருவர் திருவிழாக்கள் நடத்துவது வழக்கம். அவர் நடத்திய திருவிழா ஒன்றில் ஒரு கோமாளி வேஷக்காரன் மேடையில் ஏறிப் பலவிதமான தாமாஷ்கள் காண்பித்து, ஜனங்களை ஒரேயடியாகச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான். அவனுடைய தமாஷ்களில் எல்லாம் மேலானது அவன் பன்றியைப்போலக் குரல் கொடுத்துக் கத்தியதுதான். அவன் கத்தியது அசல் பன்றி கத்துவது போல இருந்தது. அதனால் அவனை மாறி மாறி அப்படிக் கத்தும்படி ஜனங்கள் சொன்னார்கள். ஆனால் அந்தக் கூட்டத்திலிருந்த ஒருவன், 'கோமாளி வேஷக்காரன் கத்தியது அவ்வளவாகப் பன்றி மாதிரி இல்லை; கொஞ்சம் வித்தியாசப் படுகிறது' என்று நினைத்தான். அதனால் அவன் மேடைமீது ஏறி, "எனக்கு அனுமதி கொடுத்தால், நாளை வந்து நான் பன்றி மாதிரி கத்தி கோமாளி வேஷக்காரனைத் தோற்கடிக்கிறேன். நான் பந்தயம் கட்டத் தயார்" என்று சொன்னான். ஜனங்களுக்கு ஒரே குஷி! மறுநாள் பெரிய தமாஷ் இருக்கிறது என்ற சந்தோஷத்துடன் அவனுக்கு அனுமதி கொடுத்தார்கள்.

மறுநாள் இரண்டு கோமாளிகளும் வந்து தத்தம் இருப்பிடத்தில அமர்ந்தார்கள். முதல்நாள் தமாஷ் காட்டிய கோமாளி முதலில் எழுந்து மேடைக்குப் போய் பன்றிமாதிரி கத்தினான். எப்போதையும்போல் இப்போதும் ஜனங்கள் மிகவும் சந்தோஷப்பட்டு ஆரவாரம் செய்தனர். பிறகு அடுத்த கோமாளியின் முறை வந்தது. அந்தக் கோமாளியோ தன் மேலங்கிக்கு உள்ளே மிகவும் ஜாக்கிரதையுடன் ஒரு பன்றியை மறைத்துவைத்திருந்தான். அது வெளியில் யாருக்கும் தெரியவில்லை. அவன் மேடை ஏறிய

தும், தன் கட்டை விரல் நகத்தால் பன்றியின் காதைப் பலமாகக் கிள்ளினான். உடனே பன்றி கத்தத் தொடங்கிவிட்டது.

"இது அவ்வளவு சுகமாக இல்லையே! ஊ ஹூம், இது அப்படி நன்றாக இல்லை," என்றார்கள் ஜனங்கள். சிலர் அவனைக் கண்டனம் பண்ணவும் தொடங்கி விட்டனர்.

இதைப் பார்த்தான் இரண்டாம் கோமாளி. "சரியான ஆட்கள் தான் நீங்கள்! எவ்வளவு நியாயமாக நடந்துகொள்ளுகிறீர்கள்! இதோ பாருங்கள், யாரைப் பன்றிமாதிரிக் கததவில்லை என்று நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்களோ அந்த ஆசாமியை!" என்று சொல்லி அங்கியின் உள்ளே இருக்கும் பன்றியை வெளியே எடுத்துக் காண்பித்தான் கோமாளி.

நியாயத் தீர்ப்பு கூறுகிறவர்கள் முன்கூட்டியே ஒரு அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தால் அவர்களுக்கு உண்மையை உணர்த்துவது கடினம்.

சாக்ரட்டீஸும் அவர் நண்பர்களும்

சாக்ரட்டீஸ் ஒரு சமயம், ஒரு வீடு கட்டியிருந்தார். அந்த வீட்டைப் பார்த்த ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு குறையைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

"என்ன வாசலாம் இது!" என்றான் ஒருவன்.

"உட்புறம் என்ன இப்படி இருக்கிறது!" என்றான் மற்றொருவன்.

"அறைகளா இவை? போய்த் திரும்புவதற்குக்கூட உள்ளே இடம் பற்றாதுபோலிருக்கிறதே!" என்றான் மூன்றாமவன்.

சாக்ரட்டீஸ் சொன்னார்:

"இந்தச் சிறு அறையை நிரப்புவதற்கே எனக்கு உண்மையான நண்பர்கள் கிடைக்கமாட்டார்களா, என்று ஏங்குகிறேன்."

சிநேகிதர்கள் கிடைப்பதைவிட வீடுகள் எளிதாகக் கிடைத்துவிடும்.

கிழவியும் வேலைக்காரிகளும்

ஒரு கிழவி தன்னிடம் பல வேலைக்காரிகளை வைத்திருந்தாள். காலையில் சேவல் கூவியதும், கிழவி வேலைக்காரிகளை வேலை செய்வதற்காக எழுப்பிவிடுவாள். தங்களுடைய சுகமான தூக்கத்தைக் கலைப்பது வேலைக்காரிகளுக்குச் சங்கடமாக இருந்தது. அதனால் அவர்கள் சேவலைக் கொன்றுவிட்டார்கள். சேவல் கூவாமல் இருந்தால் பின்னும் கொஞ்சநேரம் சுகமாகத் தூங்கலாம் என்று நினைத்தார்கள். ஆனால் கிழவிக்கு இப்போது நேரம் தெரியாமல் போய் விடவே, நடுச் சாமத்திலேயே வந்து வேலைக்காரிகளை எழுப்பிக் கொண்டிருந்தாள்.

கெட்டது, மிகா கெட்டது ஆகி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தோட்டக்காரனும் மண்வெட்டியும்

ஒருவன் தன் திராக்ஷைத் தோட்டத்தில் குழிகள் வெட்டிக் கொண்டிருந்தான். அப்போது தன் மண்வெட்டியைக் கொஞ்ச நேரம் ஓரிடத்தில் வைத்துவிட்டுப் போய் பழையபடியும் வந்து அந்த மண்வெட்டியைத் தேடிப் பார்க்கும்போது அது காணமல் போய்விட்டது. ஆகவே, தன் வேலைக்காரர்களைக் கூப்பிட்டு, "நீங்கள் மண்வெட்டியைப்

பார்த்தீர்களா?'' என்று கேட்டான். எல்லோரும் "நாங்கள் பார்க்கவே இல்லை" என்று சொல்லிவிட்டார்கள். தோட்டக்காரனுக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. உடனே, "உங்களில் ஒருவன்தான் மண்வெட்டியை எடுத்திருக்க வேண்டும். எனக்கு என்ன செலவானாலும் பரவாயில்லை, திருடனை நான் கண்டுபிடிக்காமல் விடப்போவதில்லை'' என்று சொல்லிவிட்டு, பக்கத்து ஊரிலிருந்த ஒரு பிரபலமான கோவிலுக்கு எல்லோரையும் தன்னுடன் அவசியம் வர வேண்டும் என்று அழைத்துச் சென்றான்.

ஊருக்குள் வந்து ஓரிடத்தில் எல்லோரும் உட்கார்ந்து களைப்பாறினார்கள். அந்தச் சமயத்தில் ஒருவன் தமுக்கடித்துக் கொண்டே வந்தான். வந்து, முதல் நாள் இரவு கோவிலில் திருடிவிட்டு ஓடியவனைக் கண்டு பிடித்துச் சொல்லுபவர்களுக்கு பெரிய சன்மானம் அளிக்கப்படும் என்று சொன்னான்.

இதைக் கேட்ட தோட்டக்காரன் தன் வேலைக்காரர்களைப் பார்த்து, "நம் ஊருக்குப் புறப்படுங்கள்'' என்று கட்டளையிட்டான். மேலும் அவன் கூறிய தாவது:

"தன் கோவிலில் வந்து திருடியவன் யார் என்று சொல்ல முடியாத தெய்வம், என்னுடைய மண்வெட்டியைத் திருடியவனை எப்படிக் கண்டுபிடித்துச் சொல்லப் போகிறது?''

வைத்தியனே! முதலில் உன்னைக் குணப்படுத்திக்கொள்.

காவல் நாயும் சாதாரண நாய்களும்

ஒரு நாய் ஊர்க் காவல் காத்து வந்தது. திருடர்களை வர விடாமல் காவல் காத்து வந்தது நாய். ஒரு நாள் அது தன் குட்டிகளுடன் தெருவழியாகப் போய்க் கொண்டிருந்தது. அப்போது தெருவிலிருந்த எல்லாச் சிறிய நாய்களும் காவல் நாயைச் சுற்றி வளைத்துக் கொண்டு குலைத்தன. இப்படித் தன் தந்தையைக் கேவலப் படுத்துவது கண்டு ஒரு குட்டிக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. ஆகவே அது தன் தந்தையைப் பார்த்து, "நீ என் அப்பா, இந்தச் சிறு நாய்களைப் பேசாமல் விட்டுக் கொண்டிருக்கிறாய்? கடித்து உதற வேண்டாமா?'' என்று கேட்டது.

இதற்குக் காவல் நாய் மிகவும் அமைதியோடு பின்வருமாறு பதில் சொன்னது:

"இப்படிச் சின்னஞ்சிறு நாய்கள் இல்லாவிட்டால் நான் காவல் நாயாக ஆகமுடியுமா?''

பெருந்தன்மையே தற்காப்பு.

*

காதல்!

இரண்டு பெண்கள் ஒரு ஹோட்டலில் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருத்தி சொன்னாள்: "ஆமாம், என் கணவரை முதன் முதல் கண்டவுடனேயே காதல் கொண்டுவிட்டேன். இன்றுகூட அதை என்னால் நினைத்துப் பார்க்க முடிகிறது. நான் எனது தந்தையுடன் உலாவச் சென்றிருந்தேன். அப்போது என் தந்தை அவரைச் சுட்டிக் காட்டி, "அதோ போகிறானே அந்த மனுஷன் பத்து லகரத்துக்குச் சொத்துடையவனுக்கும்!'' என்று கூறினார்.''

—டிட் பிட்ஸ்

மூன்று கொள்கைகள்

வி. சக்கரை செட்டியார்

பிளேட்டோ அரிஸ்டாட்டிலின் சந்தான பரம்பரையார் அவர்களுடைய தத்துவக் கொள்கைகளைக் கையாண்டு கற்பித்து வந்தனர். இவ்விரு திறத்தாரும் அகாடெமியென்றும் பெரிபாடடிக்கு என்றும் அழைக்கப் பெற்றனர். பிளேட்டோ போதித்த நந்தவனம், அகாடெமி; அரிஸ்டாட்டில் தாம் போதிக்கும் பொழுது தோட்டமாகிய இலிசியத்தில உலாவிக் கொண்டிருப்பது வழக்கம். ஆனாலும் பிளேட்டோவின் மாணக்கர்களும் அவருக்குப் பின் வந்தவர்களும் அவருடைய தத்துவக் கொள்கைகளை ஒரு மறைபொருளாகப் போதித்து வந்தனர். பிற்காலத்தில் பிளேட்டோவின் தத்துவம் புது பிளேட்டோனிஸமாக (Neo-Platonism) மாறியது. இக் கொள்கை என்னவென்று பின்னர் அறியலாம். இவ்விரு பெரிய தத்துவ ஞானிகளின் பின் சந்ததியார் இரு துறையில் மேம்பட்டு வந்தனர். தர்ம சாஸ்திரத்தையும் இன்னும் மற்ற கலைகளையும் விருத்தி செய்தார்கள். மூலதத்துவம் என்னவென்ற கேள்வி பின்னடைந்தது; பிரத்தியேக சாஸ்திர வித்தைகள் முன்னுக்கு வந்தன. பிளேட்டோவின் சந்ததியார் கணித சாஸ்திரத்தையும் அரிஸ்டாட்டிலின் வகையார் தர்க்க சாஸ்திரத்தையும் இன்னும் பற்பல இயற்கை சாஸ்திரங்களையும் விருத்தி செய்தார்கள்.

முக்கியமாக அக்காலத்தில் தோன்றி வளர்ந்து ஆதிக்கம் பெற்ற கொள்கைகளைப் பின்வருமாறு பிரிக்கலாம்: ஸ்டோயிக் கொள்கை (Stoicism), எபிகூரஸ் கொள்கை (Epicureanism), சந்தேகக் கொள்கை (Scepticism).

ஸ்டோயிக் கொள்கை (Stoicism) இந்தக் கொள்கையின் முதல் கர்த்தா ஸீனோ (Zeno சுமார் கி. மு. 340—265); இவர் ஸிப்பிரிய தீவினர். இவர் ஆதன்ஸ் நகரில் வாணிபஞ் செய்யச் சென்று தம் வியாபாரத்தை விட்டுத் தத்துவ ஆராய்ச்சிக்கு அடிமையாகி இக் கொள்கையைப் பிறப்பித்தார். அவருடைய காலத்தில் அவர் தத்துவ ஞான ஆராய்ச்சி பயனற்றது என்று பரிகாசஞ்செய்து இழிவுபடுத்தி வந்தார். அவருக்குப் பின் வந்தவர்களோ பல முக்கிய கொள்கைகளைக் கண்டு தங்களது வாதத்தைப் பிரசங்கித்து அக்காலத்திய பெரிய மக்களை தங்களது வாதத்தில், சமயத்தில், கூட்டினர்கள். ஸ்டோயிக் என்றால், சித்திரம் எழுதப்பட்ட மண்டபம். ஆதன்ஸ் நகரில் இந்த ஒரு மண்டபத்தில் இக் கொள்கையினர் முதல் முதல் தங்களது பிரசங்கங்களை நடத்தினர்கள். இக் கொள்கை ரோமாபுரியில் உள்ளவர்களால் அதிகமாக அங்கீகரிக்கப்பட்டு வந்தது. சுருங்கச் சொல்லின், ரோமாபுரியின் பெயர்பெற்ற கேட்டோ (Cato), புரூடஸ் (Brutus), சிசிரோ (Cicero) முதலிய பல அரசியல் வாதிகளும், சேனைத் தலைவர்களும், இக் கொள்கையை ஆத

அரிஸ்டாட்டிலுக்குப் பின் தத்துவ ஞானக் கொள்கை மூன்று வகையாகப் பிரிந்தது. அதில் முதல் கொள்கையாகிய ஸ்டோயிக் கொள்கை இங்கே விளக்கப் படுகிறது

ரித்தார்கள். இது அவர்கள்வாழ்க்கைக்கு லட்சியமாகவேயிருந்தது.

ஸ்டோயிக்கர் தங்களது கல்விப் பயிற்சியை மூன்றாகப் பிரித்தார்கள்: (1) தர்க்கம் (Logic), (2) இயற்கை சாஸ்திரம் (Physics) (3) தர்ம சாஸ்திரம் (Ethics) தர்க்கத்தில் அரிஸ்டாட்டிலின் தர்க்கத்தை ஆதாரமாகக் கொண்டார்கள். வெளிப் பொருள்களை இந்திரியங்கள் மூலமாய்த்தான் அறிந்து கொள்ளுகிறோம். இந்திரியங்கள் வெளிப் பொருள்களைப் பற்றிக்கொண்டு அவற்றின் தன்மையை மனத்தில் பதியவைக்கின்றன. இவற்றின் சக்தியால் நமது சித்தம் இயக்கப்படுகிறது. உலகத்திலுள்ளவை யெல்லாம் ஜடப் பொருள்களே. பிருதிவி (Matter) அல்லது ஜடம் இரு வகைப்பட்டது. ஒன்று அசைவற்றது, இன்னொன்று அசைக்கும் சக்தி. கடவுளும் இப் பிரபஞ்சத்தில் சிருஷ்டிக்கும் ஒரு சக்தியா யிருக்கிறார்; அவர் பிரபஞ்சத்திற்கு ஒரு ஆத்மா; உலகமே அவர் உடல் என்று சொல்லலாம். சர்வம் ஜடப் பிரமம் (Pantheism) என்பது அவர்களது கடைசித் தத்துவம். பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் மனிதனில் ஒரு பகுத்தறியும் சக்தியுள்ளது என்று வாதித்தார்கள். இந்த அறிவே ஞானம்; இந்த ஞானமே அறிவெனரார்கள். இவ்வறிவு (நாஸ்) தான் நம்முடைய எல்லாச் சிந்தனைகளையும், தொழில்களையும் அடக்கியாளும் தலைமை ஸ்தானத்தைப் பெற்றுள்ளது. இதுவே நம்முடைய வாழ்க்கையாகிய தேருக்குச் சாரதி அல்லது ஒட்டுகிறவன்.

தர்ம சாஸ்திர ஆராய்ச்சியில் முன்னேறியவர்கள் ஞானியாவார்களா என்ற கேள்வியைக் கிளப்பினார்கள். சாக்ரட்டீஸ், ஞானி தன்னைத்தான் அறிந்து ஞானத்தினால் உண்மை யென்பதை, நீதி யென்பதை அறிந்து கொள்பவர் என்றார். இம்மாதிரியாக உட்பயிற்சியினால், அந்தர திருஷ்டியினால், அறிந்தவனே ஞானி; இந்த ஞானி இன்பத்தை வேண்டுகிறான். எல்லோருந்தான் வேண்டுகிறார்கள். அதைத் தன்னுடைய உள்ளான சக்தியினால் வெளிப் பொருள்களின் சகாயத்தால், இரண்டும் கூடப்பெற்றால், சுக வாழ்வை அடையலாம். பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை யென்ற தமிழ்ப் பெரியார் திருவள்ளுவர் எடுத்துக் கூறிய உண்மையை யறிந்தனர். பொருளும் அதிர்ஷ்டமும் கூடிவரின் கவலையில்லாமல் சுக போகியாய் வாழலாகும் என்று பிளேட்டோவின் குருதேவர் சொன்னதை பிளேட்டோவின் சந்தான ஆசிரியர்கள் உபதேசித்து வந்தனர். இது ஸ்டோயிக்கருக்கு சம்பந்தமில்லை. ஒருவனுக்குச் செல்வமிருப்பினும், இல்லையாயினும், அதிர்ஷ்டமிருப்பினும், மாறுபடினும், அவன் அசையாதவனென்று மன அமைதியோடிருக்கவழி வகைகளைத் தேடினார்கள். இந்த சுயாதீனம், உள்ளாள நிலைமை, உலகப் பொருள்களாலும் மனோ உணர்ச்சிகளாலும் மனோ சலனங்களாலும் விகாரங்களாலும் கிஞ்சிற்றேனும் அசைக்கப்படாம லிருப்பவனே பரம ஞானி. அவனே உண்மையான மன்னன்; தெய்வம். இதைத்தான் கிரேக்கமொழியிலே ஆடராக்ஸியா (அசையாமை) என்பார்கள். உயரிய நிலைமைக்கு எட்ட, இந்த உயரிய ஞானி தன்னைப் பயிற்சி செய்ய முயலுதல் வேண்டும். ஆகையால்

எல்லா மனோவிகாரங்களையும் ஒழிக்கவேண்டும். மழையிலும், வெய்யிலிலும், சுகத்திலும், துன்பத்திலும், வாழ்விலும், தாழ்விலும் ஒரே மனப்பான்மையுடன் காற்றினால் அசையாத தீபம் போல மனத்தை ஒன்றுபடுத்த வேண்டும். வெளியரங்கமான யாதொன்றும் ஞானியைத் தள்ளாடச் செய்யாது. இதுதான் ஸ்டோயிகருடைய முக்கிய கொள்கையாகும். நம்முடைய நாட்டிலும் பல யோகிகள் இந்த நிலைமையை அடைந்து வந்ததாகக் காண்கிறோம். ஆனாலும் இந்த நிலைமையை யடைந்தவர்கள் கடுமையானவர்கள்; ஈவு இரக்கமில்லாதவர்கள். மனிதர்களுடைய சுக துக்கத்தில் பங்கு பெற்று இந்த மாறுபட்டு வருகின்ற சம்சார வாழ்க்கையிலே உண்மை இன்பத்தை அடைதல் வேண்டுமென்று சாதாரண மக்கள் எண்ணினர். இந்த நிலைமையை அடைய ஸ்டோயிக்கர்களால் முடியவில்லை. ரோம் பெரியார்கள் இதை, ஸ்டோயிக் கொள்கையை, கடைப்பிடித்து ஒழுகலானார்கள். அவர்களுடைய வீரத்துக்கும் விவகாரங்களுக்கும் இந்த மார்க்கமே உகந்ததாகக் காணப்பட்டது.

ஸ்டோயிக்கர் ஆத்மா என்ற பிரத்தியேகமான ஒன்று உள்ளதென்பதைத் தத்துவக்கொள்கையாக நினைக்கவில்லை. இந்திரியங்கள், இந்திரியங்கள் வாயிலாக பல அனுபவங்கள், சிந்தனைகள் என்ற பலப் பல மனோவிகாரங்கள் உண்டாகின்றன. இவை யெல்லாவற்றையும் வென்று செல்வதற்கு புத்தியைத் (நூஸ்) தலைமையாகக் கொள்ளவேண்டும். உண்மையான அறமென்பது தன்னைத் தான் வென்று உலகத்தைக் காலில் மிதித்து அசட்டை செய்வதே. இவ்வாறு அவர்கள் கருதினார்கள்.

இக்கொள்கையை மேற்கொண்டவர்கள் கடினமான உலக வாழ்க்கையை உதறிவிட்டுக் காட்டுக்குச் செல்லவில்லை. உண்மையான மனித வாழ்க்கை அசையாத மனத்துடனிருப்பதே என்ற கொள்கையினரும் உலக சம்சாரத்தில் ஈடுபட்டும் தங்களது நோக்கத்தைப் பெறலாம் என்றனர். உலக வாழ்க்கையை, மற்றவர்களுடன் கூடும் வாழ்வைத் தங்களது மேல் நோக்கத்திற்குப் படியாக அல்லது ஏணியாக எண்ணி நடக்கலானார்கள். சுக, துக்கத்தைப் பாராமல் வெளியிலிருந்து வரும் சம்பவங்களைப் பொருட்படுத்தாமல் தனக்குள்ளேயே வாழ்வதே பிரதானமென்னும் கருத்துடைய ஸ்டோயிக்கர் உலக வியாபாரத்தை முற்றும் விடவில்லை. உலகத்திலிருந்துகொண்டே தங்களது நோக்கத்தை அடையலாமென்ற வழியைக் கடைப்பிடித்து வந்தார்கள். எனவே, அக்காலத்தில் ரோமாபுரியிலே, குடியரசு நிலவிய ரோமாபுரியிலே கீர்த்தி பெற்ற அரசியல் வாதிகளுக்குள்ளும் ஸ்டோயிக்கர் இருந்தனர். ஏகாதிபத்திய காலத்திலும் குடியரசு மாறிப்போன காலத்திலும் அநேகர் இக்கொள்கையை அனுமானித்தனர். ஆயினும், அவர்கள் ஸ்டோயிக்கர், மற்ற மக்களை இழிவாகத்தான் எண்ணி வந்தனர். அவர்கள் எல்லாம் மதியீனர்கள், ஒன்றுக்கும் உதவாதவர்கள், பாபிஷ்டர்கள், தாங்கள் தான் மேலானவர்கள் என்ற பெருமை, கர்வம், அவர்களுக்குள் அதிகமாகப் பரவினது. தாங்களே நீதிமான்கள் என்று கொண்டாடி

இயேசுநாதர் இருந்த காலத்திய பரிசேயரைப்போல் (Pharisee) தங்களையே உயர்த்திக் கொண்டார்கள்.

ஸ்டோயிக்கர் ஒருபேருதவியை அக்காலத்து மக்களுக்குச் செய்தார்களென்பதை மறக்கக் கூடாது. தங்களுக்குள்ளிருக்கும் நூஸ் என்ற புத்தியும் வெளி இயற்கையிலே உள்ளது; அதுவே இயற்கையின் மனம், ஆத்மா; இதுவே தங்களுடைய கடவுள் என்றும் எண்ணினார்கள். தங்கள் தன்மையும், இயற்கைத் தன்மையும் ஒன்றே என்ற உணர்ச்சி அவர்களுக்கு வெளியானது. எனவே அறநெறி என்பது இயற்கை வழி நடப்பதே என்ற கொள்கை ஸ்டோயிக்கருடைய உயரிய கோட்பாடாக விளங்கியது. எல்லா நன்மையும் இயற்கை வழியிலுண்டு. ஆகையால் இயற்கையின் சட்டம் அல்லது நியாயமே மிகப் பெரிது. எல்லா மனித சட்டமும் நியாயமும் இயற்கைச் சட்டத்திற்கு இயைந்ததாக நியமிக்கப்பட வேண்டும். மனிதர்களுடைய நீதி, நியாயம் இதற்கு முரணாயிருப்பின் அதைத் திருத்தி அமைக்கவேண்டும். இந்தக் கொள்கை ஸ்டோயிக்கரிடமிருந்து நியாயவாதிகளிடத்து வந்தது. ரோமர் சட்டத்தை நாட்டுவதில் அதிகப் பெயர் பெற்றவர்களாயிருந்தனர். அக்காலத்தில் இது அவர்கள் நகரச் சட்டமாய்த்தானிருந்தது. இச்சட்டத்தைத் திருத்தி பூரணப்படுத்துவதற்காக இயற்கைச் சட்டத்தைத் துணையாகக் கொண்டனர். இந்தக் கூட்டுறவினால் ரோமருடைய நீதி, நியாய முறை அதிகமாக மேம்பட்டு வந்தது. கேவலம் நாட்டுச் சட்டங்களில் குற்றங்குறைகள், கொடுமைகள் உண்டு. இவற்றையெல்லாம் இயற்கை தர்மத்தைக்கொண்டு திருத்திக் கொண்டனர். இக்காலத்திலும் ஆங்கில நாடு தவிர, மற்ற ஐரோப்பிய நாடுகளின் சட்ட முறைகள் ரோமருடைய சட்ட நீதியை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆதலால் இப்போதும் சட்டக் கல்லூரியில் ரோமருடைய சட்டத்தைப் பாடமாக, முதல் பாடமாக வைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். பின்னர் பிரான்ஸ் தேசத்தில் தோன்றிய ரூஸ்ஸோ (Rousseou 1712—1778) என்ற கீர்த்தி வாய்ந்த ஆசிரியர், இயற்கை வாழ்விற்குத் திரும்பவேண்டும் என்றார். நாகரிகமென்பது, இயற்கை வாழ்விற்கு முரணானது. அதன் காரணமாகத்தான் மனித வாழ்க்கை கேடான நிலையை யடைந்தது. இந்தக் கொள்கையை தமது சித்தாந்தத்திற்கு அஸ்திவாரமாகக் கொண்டார் ரூஸ்ஸோ. தற்காலத்திலும் அநேகர் மேனாட்டில் பெரிய நகரங்களில் வதியாமல் காடுகளுக்குச் சென்று வாழ விரும்புகின்றனர். தோரு (Thoreau) என்பவர் அம்மாதிரியாகத்தான் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை நடத்தினார். இவரே காந்தியடிகளின் சட்ட மறுப்பை முழு முதல் உபதேசமாக அமெரிக்காவில் போதித்து வந்தார். இந்த இயற்கை என்பது என்ன என்பதைப் பின்னால் பார்ப்போம்.

✲

அந்தப் பிராமணீயம்

தீண்டாமையை அனுமதிக்கும் பிராமணீயம் என் நாசிக்கு துர்நாற்றமாக வீசுகிறது.

—மகாத்மா காந்தி

காந்தீயம்

கு. அழகிரிசாமி

எந்த வகையிலும் இந்தியாவுக்கு—பொதுவாக ஆசியாக் கண்டத்துக்கே—மேல்நாட்டினர் பிரதானம் கொடுக்காமல் இருந்து வந்தனர். வெறும் லௌகிக வாழ்க்கையிலேயே அவர்கள் மோகம் கொண்டு, அதன் பலனாக வாழ்க்கை முழுவதையும் போராட்டத்திலேயே கழித்தார்கள். இப்போது இந்தப் போராட்ட வாழ்க்கையில் அவர்களில் பல அறிஞர்களுக்குச் சலிப்புத் தட்டியிருக்கிறது. மேல் நாட்டின் பல கவிஞர்களும், எழுத்தாளர்களும், தத்துவ ஞானிகளும் மனிதஜாதியின் சுக வாழ்வுக்கு உகந்தது கீழ்நாட்டின் ஞானமார்க்கமே என்று கருதுகிறார்கள். அவர்கள் பார்வை இன்றுதான் கிழக்கே திரும்பியிருக்கிறது. இன்று இப்படித் திரும்பியதற்கு முக்கியமான காரணங்கள் இரண்டு:

ஒன்று: கீழ்நாட்டின் புராதனமான ஞானம் மகாத்மா காந்தியின் சேவையால் புத்துயிர் பெற்றுவிட்டது. யோகீஸ்வரர்கள் கையிலிருந்து விடுபட்டு சர்வஜன சம்பத்தாக அந்த ஞானம் மாறுவதற்கு வேண்டிய செயலை மகாத்மா செய்துவிட்டார்.

மற்றொரு காரணம்: லௌகிக மோகத்தினால் மேல்நாட்டார் செய்த யுத்தங்கள் அவர்களுக்குப் பாடம் கற்பிக்கத் தொடங்கியிருக்கிறது.

இன்று கீழ்நாட்டு ஞானம் என்றால் காந்தி ஞானம், அதாவது காந்தீயம் என்று மாறிவிட்டது. காந்தீயத்தில் ஒழுக்கம், கட்டுப்பாடு, சத்தியம், அன்பு என்ற சகல மனிதப் பண்புகளும் உண்டு. காந்தீயத்தை மேல்நாட்டார் புகழ்ந்து பாராட்டுவதாக, முதலில் வாசிக்கப் போகும் நான்கு பாடல்களும் கூறுகின்றன. காந்தீயத்தின் பெருமையை உணர அவர்களுடைய பாராட்டையும் நாம் கவனிப்பது பொருத்தமான காரியமாகும்.

கீழ்த் திசையின் திலகமடா, ஞானம் என்னும்
கிளரொளியின் சுடர்பரப்பும் பரத கண்டம்;
வாழ்த்துமொழி பகர்ந்தேற்றும் பெருமை யெல்லாம்
வாய்ந்திருக்கும் தேசமது, போரில் செத்து
பாழ்த்த நிலை பரவியுள்ள வையம் தன்னைப்
பாலிக்கப் புதுச் செய்தி பரப்பி, இன்று
தாழ்த்த தலை மேல்தூக்கி உரிமைபெற்று
சகத்துள்ளார் துயர்துடைக்க மார்க்கம் காட்டும்.

வையத்துச் செல்வமெல்லாம் சுரண்டி வந்தோம்;
மண்ணுலகில் சொர்க்கமெனும் போகம் துய்த்தோம்
மெய்வீரம் காட்டுதற்கு அயல் நாட்டாரை
வீணில் போய் போர்முகத்தில் கொன்று மாய்த்தோம்;
கைவரிசை காட்டிவிட்ட திறமை காட்டி
காவலராம் ராசரிடம் விருது மாட்டி
மெய்மறந்து புளகித்தோம்; இன்னும் வாழ்வில்
மிருகநிலை நீங்குதற்கு மார்க்கம் காணோம்.

வானத்தில் பறந்திடவும், உலகைச் சூழ்ந்த
மறிகடல்கள் தாண்டிடவும், வேற்றுநாட்டார்
கானத்தைக் கேட்டிடவும், கருவி செய்து
கண்முன்னே திரைகட்டி எங்கோ உள்ள
சீனத்துக் காட்சிகளும், பீஜித் தீவின்
செங்கரும்பும் பார்த்திடவும் கற்றோம்; ஆயின்
மானத்தைப் பேணி இங்கு மனிதர் என்று
வாழ்வதற்கு நாங்கள் இன்னும் கற்கவில்லை.

புத்தனையும் ஏசுவையும், முகமதென்னும்
புகழ் விளைத்த சீலனையும், போரை நீத்த
உத்தமர்க்குள் உத்தமனும் அசோகன் என்னும்
உலகேத்தும் பேரரசன் தனையும் தந்து,
சித்தத்தில் அன்பிருந்தால், ஒழுக்கம் சார்ந்தால்,
சீவர்களைத் தன்னுயிர் போல் பேணி வந்தால்,
சத்தியத்தைக் கைக் கொண்டால், விண்ணை மண்ணில்
சமைத்திடலாம் என்றுரைத்த காந்தி தன்னை

பெற்றெடுத்த கீழ்த்திசையே, உலகுக் கெல்லாம்
பிழைக்கும் வழிகாட்டும் என, மேலை நாட்டில்
கற்றெடுத்த ஞானத்தை அகத்தில் பூண்ட
கவிஞரொடு அறிஞர் பலர் கழறுகின்றார்;

சிற்றறிவால், செத்துவிழும் போதில் காட்டும்
சீற்றத்தால், போர் விரும்பி உலகை ஆளப்
பற்றுவைத்த மூர்க்கருக்கும் பகருகின்றார்,
பாரதத்தின் பெருமையினை, முற்றும் கற்றார்.

மண்ணோடு மண்ணாகி உரிமை யென்னும்
மாட்சியினை மறந்திருந்த காலம் போக்கி,
அண்ணாந்து பார்ப்பதற்கும் அஞ்சிக் கூசும்
ஆறறிவின் மாக்களென வாழ்ந்தோர் தம்மை
எண்ணாத பெருமைக்கு உயர்த்தி வைத்து
இவ்வுலகம் ஏத்த வழி செய்தோன், தெய்வப்
பண்ணார்ந்த மொழி பகர்ந்து அன்பை நட்ட
பாரதத்தின் தனிப்புதல்வன் காந்தி அன்றோ?

போர் தொடுத்து பகைவர் தம்மைக் கொன்று சாடி
புவிகலக்கும் படை பலத்தைக் கொண்டானில்லை;
நீரகத்தும் நெருப்பகத்தும் நடந்தானில்லை;
நிட்டையில்லை; நினைத்ததெலாம் பலிக்கச் செய்ய
மார்பகத்தில் கவசமில்லை; ஆயின் இந்த
மனித குலம் தலைவணங்கும் பெற்றி பெற்றான்;
ஏர்நடத்தும் வேளாளன் போலே வாழ்ந்தான்;
இறவாத புகழடைந்தான், காந்தி யண்ணல்.

தருக்கேறி தலைகிறங்க 'மனிதர் தம்மில்
தலைச்சாதிக் கூட்டத்தார் யாமே' என்று
செருக்கேறிச் சொன்னவர்கள், காலம் எல்லாம்
செருக்களத்தில் சீர்குலைந்து, இன்றுமாறி
மறுக்காது கைக்கொள்ள வந்த ஞான
மார்க்கமதும், காந்தி முனி வழியும், ஏதோ
பெருக்கான வேதம் அன்று; அன்பு, வாய்மை,
பேணி வைக்கும் நல்லொழுக்கம் என்பதல்லால்.

புதுமைக்கும் புதுமையாய், வையத்தார்க்குப்
புகலளிக்கும் தாரகமாய்த் தோன்றும், இஃது
அதிமர்ம சித்தாந்தம் அன்று; நாவில்
அனுதினமும் நாம் வழங்கும் இரண்டோர் சொற்கள்;
மதுவுண்ட மயக்கம்போல், உணர்வு நீங்கி
வாழ்ந்தோர்க்கு, சொற்களிவை, மாயம்போல
கதிதந்து உய்வழியாய் மாறச் செய்தான்
காலமென்ற வேடிக்கைக்காரன் இங்கே!

மேலை நாட்டினருங்கூட இன்று உண்மையைக் கண்டு கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். உலகத்துக்கே நல்வழிகாட்ட வந்த காந்தீயம், நம் நாட்டிலே தோன்றியது. காந்தீய நெறியை நாம் எவ்வளவு தூரம் பின்பற்றியிருக்கிறோம்? நம்முடைய இன்றைய நிலை என்ன?—இந்த விஷயங்களை முதலில் ஒளிவு மறைவின்றி ஆராய்ந்தால் அது நம் எதிர்காலத்துக்குப் பெருந்துணையாக இருக்கும். ஆகவே நம் நிலையை முதலில் கூறி, பிறகு நாம் செய்ய வேண்டியதும் கூறப்படுகிறது.

கூட்டத்தே மேடையினில் ஏறி நின்றும்,
　　கோபுரத்தின் மேலிருந்தும், காந்தி வாக்கை
பாட்டாக்கி, பதம் பிரித்து, விளக்கம் செய்து
　　பரப்புதற்கு முனைகின்றோம்; ஆனால் அங்கே
கூட்டங்கள் கலைந்ததற்பின் காந்தி வாக்கும்
　　குடியோடிப் போகுதடா! உள்ள மென்னும்
வீட்டுக்குள் நேர்மை வந்து வாழவில்லை!
　　விடைபெற்று நீங்குதையோ தர்மமெல்லாம்!

வர்மத்தை நெஞ்சத்தில் கொண்டார்; அன்பாம்
　　மனப்பாசம் கைவிட்டார்; தெரிந்தே செய்த
கர்மத்தைத் தொலைப்பதற்குக் கோவில் கட்டி
　　கைதொழுது கடவுளருள் வேட்டு நின்றார்;
தர்மிட்டர் என்போரும் ஆசைப் பேயால்
　　தனியிடத்தே கருஞ்சந்தை திறக்கலாச்சு.
மர்மத்தை வெளிக் கொணர்ந்தால் மானம் போச்சு;
　　மனிதரென அலைவதெல்லாம் தங்கப் பூச்சு!

மற்றவர்க்கே ஒழுக்க மோடு, கட்டுப்பாடும்
　　மனத்தூய்மை, பொது சேவை என்பதெல்லாம்
முற்றும்உணர் காந்திமுனி வாழ்நாளெல்லாம்
　　மொழிந்த உரை நமக்கன்று, என்பார்போல;
கற்றறிந்த மானிடரும் கருதுகின்றார்;
　　கள்ளமனம் கொண்டதினால் ஆண்மை கெட்டார்
சிற்றறிவும், பேடிமையும் மிகுந்து, மற்றோர்,
　　ஜேபியிலும் கைபோடும் பிழைப்பாய்ப்போனார்!

சிந்தையிலும் செய்கையிலும் நேர்மையற்று
　　செய்யாத செயல் செய்தும் இன்பம் துய்ப்பார்;
கந்தையதும் இல்லாது குளிரில் வாடிக்
　　கால்வயிற்று உணவினுக்கும் வானம் பார்த்து

நொந்துழலும் வறியோர்பால் இரக்கம் கொள்ளார்;
நோன்புண்டு, விரதமுண்டு; உலகுக்கெல்லாம்
இந்த ஒரு செய்தியையோ அளிப்பது, அந்தோ!
ஏந்து புகழ்க்காந்திமொழி இயல்புமீதோ?

போதுமடா இவ்வளவில் கேலிக்கூத்து;
போக்கற்ற இப்பிழைப்புப் போதும்போதும்;
தீதொழித்து வாழ்வதற்கு மார்க்கமின்றேல்
செத்தாலும் பெருமை உண்டு; நீசர்கூடி,
நீதி மொழி பகர்ந்தவனின் பெருமை இங்கு
நிலைப்பதற்கு இடமின்றிச் செய்திடாதீர்;
தாதையவன், மக்கள்நாம் என்றுகூறும்
தகவுபெற வழிபார்ப்பீர்; தர்மம் காப்பீர்.

வானிருந்து மழைஇறங்கும் போதில், இங்கே
வைரமணி உதிர்ந்தாலும், மலைகள்தோறும்
தேனிருந்து அருவிஎனப் பாய்ந்திட்டாலும்,
செல்வமெல்லாம் காலடியில் கிடந்திட்டாலும்
மானிடர்காள்! உள்ளத்தே வாய்மை என்னும்
மங்காத ஒளிவிளக்கும், உள்ளம்யாண்டும்
ஈனநெறி பற்றாது தடுக்கும்தூய
இறைஒழுங்கும் இல்லைஎனில், எதுவும்இல்லை.

உயிருக்கும்மேலதுவாம் ஒழுக்கம்என்ற
உண்மையினை மனம்,வாக்கு, காயம்தன்னில்
பயிர்செய்து வளர்த்திடுவோம்; பாருக்கிந்த
பண்புபெறும் நற்செய்தி பகரச்செல்வோம்;
செயிர்தீர்ந்த பெரியோன்பால் காட்டும்அன்பை
செய்கையினில் காட்டிடுவோம்; வதைத்துக்கொல்லும்
துயர்துடைக்க ஈதொன்றே மார்க்கமென்று
துணிந்திடுவோம், மனிதகுலம் துலங்கச் செய்வோம்.

குறிப்பு: இது சென்னை அகில இந்திய ரேடியோ நிலையத்தில், 2-10-48-ல் காந்தி ஜயந்தியன்று கனம் மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் தலைமையில் நடைபெற்ற கவியரங்கத்தில் அரங்கேற்றப்பட்ட கவிதை. நிலையத்தாரின் அனுமதியுடன் இங்கே வெளியிடப்பெற்றிருக்கிறது.

—ஆசிரியர், சக்தி

யாதொரு யோசனையும் இன்றியோ, அதீதமான அல்லது தப்பான நம்பிக்கைகளுடனே, புதுமணப் பெண்கள் தங்கள் கணவன்மார் வீட்டில் காலெடுத்து வைப்பதுண்டு. அவர்களுக்கு இங்கே கூறப்பட்டுள்ள யோசனைகள் மிகவும் அவசியமானவை. ஆங்கிலக் கட்டுரைகளை ஆதாரமாகக் கொண்ட கட்டுரை இது.

மணமகளுக்கு ஒரு வார்த்தை

ஜி. மி.

திருமணத்தைப்பற்றிப் பலர் பல விதக் கருத்துக்கள் கொண்டிருந்தபோதிலும் அது மணமக்களுக்கு ஓர் இன்பகரமான நாள் தான். இளங்காளை ஒருவனின் கைத்தலம் பற்றக் கண்ட கனவு அன்று தானே நினைவாகிறது. வருங்கால வாழ்க்கையைப் பற்றிய இன்பக் கனவுகளைக் கண்டு உன் உள்ளம் துள்ளிக் குதிக்கும். கல்யாணக் குஷியில் உனக்குக் காலம் போவதே தெரியாது. ஆனால் திருமணத் தினத்தைப் போலவே உன் வாழ்நாள் பூராவும் இருக்கும் என்று எண்ணாதே. ஆகவே அன்றாட வாழ்க்கைக்கு நீ தயாராக இருக்க வேண்டும். கல்யாணமான புதிதில் உன்னுடன் காதல் மொழி பேசி உன் புன்முறுவலுக்காகக் காத்திருக்கும் உன் கணவன் எப்பொழுதுமே அப்படி இருப்பான் என்று எதிர்பார்க்காதே. தன் மனைவி தனக்கு அருந்துணைவியாகவும் இடுக்கண் களையும் உண்மையான நட்புடனும் இருக்க வேண்டுமென்றுதான் ஒவ்வொரு மனிதனும் விரும்புகிறான். அவன் எதிர்பார்க்கிறபடி நீ இருக்க வேண்டும். அதற்குத் தக்கபடி நீ உன்னைத் தகுதியுள்ளவளாக்கிக் கொள்ளவேண்டும். நீ எப்படி நடந்து கொள்ளவேண்டும், எவற்றை நீ செய்யக்கூடாது என்று நான் சொல்லுகிறவற்றை நீ கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

உன் கணவன் உன்னிடம் கொண்டுள்ள மோகம் வெகு சீக்கிரத்தில் மறைந்துவிடும். ஆனால் பெண்கள் விஷயத்தில் இதற்கு மாறாகத்தான் நடக்கிறது. நாட்கள் செல்லச் செல்லத்தான் உன் கணவனிடம் நீ கொண்டுள்ள காதல் மலரும். கல்யாணமான புதிதில் இருக்கும் குதூகலத்தையும் கும்மாளத்தையும் காட்டிலும் அமைதியான அன்பு வாழ்வுதான் அதிக இன்பம் பயக்கும்.

நாலுபேர் மத்தியில் நீ உன் கணவனுடன் சிரித்துப் பேசுவதை, நல்ல குணச் சேர்க்கையுடையவர்களும் உத்தம குலத்தோன்றல்களும் விரும்பமாட்டார்கள். நீ உன் கணவனுடன் சந்தோஷமாய்க் காலம் கழிப்பதாகப் பிறர் எண்ணட்டுமே என்று நினைப்பாய். உன் செய்கையை, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பேச்சாகத்தான் எடுத்துக் கொள்ளுவார்களே தவிர வேறுவிதமாக எண்ண மாட்டார்கள். உன் கணவனுடன் இன்ப வார்த்தைகள் பேசிக் களிப்புற்றிருக்கத்தான் நிறைய நேரம் இருக்கிறதே!

புதுப் புது சேலைகளையும், நவ நாகரிக நகைகளையும் பார்த்தால் வாங்கவேண்டும் என்கிற கட்டுக் கடங்காத ஆசை, உனக்கு மட்டு மல்ல, உங்கள் இனத்துக்கே தோன்றுவது வழக்கம். நீ அம் மாதிரி அற்ப ஆசைகளுக்குப் பலியாகாமல் இருக்கவேண்டும். புதுப் புது ஆடைகள் அணிவதில் இஷ்டப்படுவதைக் காட்டிலும் சுத்தமாக இருப்பதில் நீ அதிகக் கவனம் செலுத்தவேண்டும்.

கணவனுடன் பழகும் பொழுது சர்வ ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும். உன்னைப் பற்றி அவன் நல்ல அபிப்பிராயம் கொள்ளும்படி செய்யவேண் டும். உன்னிடம் இருக்கும் சில சிறு குறைபாடுகளையும் கணவன் அறிந்துகொள்ளாதபடி நடந்து கொள்ளவேண்டும். உன்னைப் பற்றி நினைக்கும் பொழுதெல் லாம் அகெளரவமான நிகழ்ச்சி களோ, துன்ப நினைவுகளோ தோன்றக்கூடாது. அதனால் நீ எப்பொழுதும் சிரித்த முகத் துடன் இருக்கவேண்டும் என்று பொருளல்ல. ஒரு குடும்பத்தில் இருந்தால் நாலும்தான் இருக் கும். சில சமயங்களில் பிறரிடத் தில் குற்றங் குறைகள் காண வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற் படத்தான் செய்யும். அந்தச் சம யங்களில் தாறுமாருகப் பேசக் கூட அவசியம் ஏற்படும். கண வன் வீட்டில் இருக்கும்பொழுது அந்தமாதிரி தர்ம சங்கடமான நிலைமைகள் வராமல் தடுக்க வேண்டும். சில்லறைத் தகரா றுகளை உன் கணவனிடம் சொல்லி அவனைத் துன்புறுத்தக் கூடாது. வேலைக்காரி சொன்னபடி செய்ய வில்லை, பால்காரன் வரவில்லை, குழாயில் தண்ணீர் வரவில்லை, பிள்ளை பள்ளிக்கூடம் போக வில்லை என்பன போன்ற உப்புப் பெருத விஷயங்களைச் சொல்லி உன் கணவனைத் தொந்தரவு செய் யாதே. இம்மாதிரி விஷயங்களைக் கூடிய வரையில் சொல்லாமல் இருக்கவே முயற்சி செய்யவேண் டும். அப்படிச் சொல்லவேண் டும் என்று தோன்றினலும், அவன் சாப்பிட உட்கார்ந்த வுடன் சொல்லவே கூடாது. அவனுக்கு வெளியுலக ஜோலி களில் எத்தனையோ தொந்தரவு கள். உங்களுக்கென்ன, நீங்கள் வீட்டில் இருப்பவர்கள்! காரி யாலயத்திலும் மற்ற வெளி விஷ யங்களிலும் ஈடுபட்டு 'ஆய்ந்து ஓய்ந்து' வரும் உன் கணவன், வீட்டுக்கு வந்தால் நிம்மதியாக இருக்கலாம் என்ற ஒரே எண் ணத்தில்தான் அதையெல்லாம் பொறுத்துக் கொள்ளுகிருன். அப்படி வரும் உன் கணவனை இன்முகம் காட்டி உள்ளக் களிப் போடு எதிர்கொண்டு அழைக் காமல், ஏற்கெனவே நைந்திருக் கும் அவன் மனத்தை மேலும் புண்படுத்தலாமா?

உன் கணவனுக்குப் பிடித்த விஷயங்களில் கருத்தைச் செலுத்தி அந்த விஷயங்களில் சிரத்தை காட்டவேண்டும். அவ னுடைய விஷய ஞானத்தி லிருந்தே உன் அறிவையும வளரச் செய்யவேண்டும். உன் கணவன் போற்றிப் புகழும் விஷ யங்களை நீ எடுத்தெறிந்து பேசாதே. அவன் கொண்டிருக் கும் கொள்கைகளுக்கும், கருத்து களுக்கும் நீ ஆதரவு காட்ட வேண்டும். தனக்குச் சாதகமாக, தன் கட்சியில் இருக்க ஒருத்தி இருக்கிருள் என்ற நம்பிக்கை அவனுக்குப் பிறக்கவேண்டும். அந்தப் பரஸ்பர நம்பிக்கைதான் உங்கள் இருவரையும் பிணைத்துக்

கொண்டிருக்கிறது. அவன் விரும்பிச் செய்யும் காரியங்கள் உனக்குப் புரியாதது போலவோ அல்லது விருப்பமில்லாததுபோலவோ நீ காட்டிக்கொண்டால் அது உங்களுடைய சௌஜன்ய பாவத்துக்குக் கெடுதல் செய்யும். விடுமுறைநாட்களில் நீ உன் கணவனுடன் பொழுதைக் கழிக்கநேரும். அந்தமாதிரி காலங்களில் என்னத்தைப் பேச, எதைப்பற்றிப் பேச, அப்படி எவ்வளவு நேரம்தான் பேசுவது என்றெல்லாம் தோன்றும். அந்த இக்கட்டான நிலைமையைப் போக்க என்ன செய்ய வேண்டும் தெரியுமா? உனக்குத் தெரியாத விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். புத்தகத்தைப் படிக்கச் சொல்லி கேட்கவேண்டும். உங்கள் இருவருக்கும் பிடித்த காரியங்களை இருவரும் சேர்ந்து செய்யவேண்டும். அவன் சொல்லிக் கொடுத்து நீ விஷயங்களைத் தெரிந்து கொள்ளுவதை அவன் மிகவும் விரும்புவான். அவனுடைய கூட்டுறவில் நீ எதிர்பார்த்த அளவுக்கு மேலாக உன் அறிவு விளக்கம் பெறும். உன்னுடைய இந்தப் போக்கைக் கண்டு உன்னை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு உன்னைப் புகழும்பொழுதும் கொஞ்சலாக உன் கன்னத்தை வருடும்பொழுதும் மேலும் மேலும் படித்து விஷயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்கிற ஆர்வம் வளரும். இயற்கையில் உனக்குப் பிடிக்காத விஷயமாய் இருந்தாலும் அதைக்கூடத் தெரிந்துகொள்ள விரும்புவாய்.

அடுத்தபடியாக நீ கவனிக்க வேண்டிய விஷயம் என்ன தெரியுமா? உன்னுடைய சிநேகிதைகளைப்பற்றிய விஷயம்தான். உனக்குச் சரிசமானமானவர்களுடனே, உன்னைக்காட்டிலும் பெரிய அந்தஸ்தில் உள்ளவர்களுடனே பழகும்பொழுது அவர்கள் நல்ல நடத்தையுடையவர்களாயிருக்கிறார்களா என்று கவனிக்க வேண்டும். தற்பெருமை, பிறரை அலட்சியப்படுத்தும் சுபாவம், 'தான்' என்ற அகம்பாவம் முதலியன பெண்களுடைய உடன்பிறந்த குணங்கள். ஆகவே நல்ல குணச் சேர்க்கைகொண்ட பெண்களுடன் பழகவேண்டும். உன்னுடைய குடும்ப விஷயங்களில் அவர்கள் தலையிட அனுமதிக்காதே. உனக்கும் உன் கணவனுக்குமிடையே எழும் சிறு தகராறுகளை அவர்கள் பெரிதாக்கி, உனக்குச் சாதகமாக வழிவகைகள் சொல்லுவதைப் போலச் சொல்லுவார்கள். அவை உன்னை உன் கணவனிடமிருந்து பிரித்தாலும் பிரித்துவிடும். அதற்கெல்லாம் செவி சாய்க்காதே. அவர்கள் சொல்லுவதைக் கூர்ந்து கவனித்து ஞாபகத்தில் வைத்துக்கொள். ஏன் தெரியுமா? அவற்றிற்கு நேர் மாறாகச் செய்ய!

வரும்படிக்கேற்ற செலவு செய்யவேண்டும். உன் கணவனுடைய வருமானத்துக்குள்ளேயே குடும்பச் செலவுகளைச் சுருக்கவேண்டும். நாலு பேர் மதிக்க வேண்டுமென்று வீண்டாம்பீகச் செலவு செய்யக்கூடாது. மளிகைக் கடைக்கு நாலுமாத பாக்கி இருக்கிறபொழுது புதுப் புது நகைகள் வாங்குவதிலும் சேலைகள் வாங்குவதிலும் குடும்ப வருமானத்தைச் செலவு செய்யலாமா?

சுருங்கச் சொன்னால் நீ உன் கணவனுடைய அருந் துணைவியாக இருக்கவேண்டும், பெண் குலத் திலகமாக, குடும்ப விளக்காக நீ வாழவேண்டும்.



முடிவிலாக் கீர்த்தி பெற்ருய் !

★

அன்று :—

ராஜ போகம் துய்க்கும் தெய்வ ரம்பை மின்னார்களைச் சிற்பத்திலும் சித்திரங்களிலும் காவியங்களிலும் குடியேற்றினார்கள் பழைய கலைஞர்கள்; அந்தப் பெண்களுடைய ரூபலாவண்யங்களைப் பாராட்டினார்கள். அந்த சேவையிலே கலைஞர்கள் பொன்னும் புகழும் பெற்று வாழ்ந்தார்கள்.

★

படம் :
பி. ரங்கநாதன்,
சென்னை

★

இன்று :—

வயலிலும், களத்து மேட்டிலும், தொழிற் சாலைகளிலும் பாடு படும் பாட்டாளிப் பெண்களைத் தங்கள் கலைகளில் குடியேற்று வார்கள் நவயுக கலை ஞர்கள்; அந்தப் பெண் களுடைய உளப்பண்பு களை, ஜீவாதாரத் தேவைகளை எடுத்துக் கூறுவார்கள். இந்தப் பொது மக்கள் சேவை யிலே, கலைஞர்கள் புகழ் பெறுவார்கள்; பொதுமக்களை வாழ வைத்துத் தாங்களும் வாழ்வார்கள்.

★

படம் :
எஸ். பாலசுந்தரம்,
ஈரோடு



சென்னையில் நடைபெற்ற 4-வது கம்பர் மகாநாட்டில்
தலைமை தாங்கிப் பேசும் ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார்

மதுவிலக்குக்கு முதல் நாள்: மதுவரக்கனின் கடைசித் தர்பார்



சென்னை ராஜாஜி மண்டபத்தில் விஸ்வாசப் பிரமாணம் எடுத்துக்கொள்ளும்
கவர்னர் பவநகர் மகாராஜா

மதுவிலக்கு நாள்: மதுவரக்கன் கொடும்பாவியின் கடைசி யாத்திரை





அக்டோபர் 11-ம் லண்டனில் ஆரம்பித்த காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ள நம் நாட்டிலிருந்து புறப்படும் நம் பிரதமர் பண்டித நேரு

ரசாக்கர்களின் மரண சாசனமாகிய கருவிகளைக் கைப்பற்றி ஒழுங்கு படுத்தும் நம் படை வீரர்கள்



சென்னையின் புது கவர்னர்
பவநகர் மகாராஜா



சென்னையின் பழைய கவர்னர்
ஆர்ச் பால்டு நை

பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல்
நாஜிமுதீன்



மத்திய சர்க்காரில்
மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள
க. சந்தானம்



படம்: ஏ. சி. லக்ஷ்மணன், சேலம்

குறுநகை போதுமடி!

புதுமைப்பித்தனின் புகழ் வாழ்வைப்பற்றி அனைவரும் அறிவர்; எனினும் அவருடைய பூத வாழ்வைப் பற்றி அவரோடு பழகியவர்களுக்கும் கூட அதிகம் தெரியாது. கட்டுரை ஆசிரியர் புதுமைப்பித்தனோடு நெருங்கிய நட்புரிமை கொண்டவர். இந்தக் கட்டுரை தமிழ்ப் புத்தகாலயத்தார் (மயிலாப்பூர்) வெளியிட விருக்கும் புதுமைப்பித்தன் என்ற விரிவான நூலிலிருந்து எடுத்த சிற்சில குறிப்புகள்.

புதுமைப்பித்தன் வரலாறு

சிதம்பர ரகுநாதன்

இன்றல்லோ கம்பன்
  இறந்த நாள்; புன் கவிதை
இன்றல்லோ ராச சபைக்கு
  ஏற்கு நாள்—இன்றல்லோ
பூமடந்தை வாழ,
  புவிமடந்தை வீற்றிருக்க
நாமடந்தை நூல்வாங்கும்
  நாள்!

என்று ஒரு பாட்டு. கவிச்சக்கரவர்த்தி கம்ப நாடன் இறந்துபட்டபோது ஒரு கவிஞன் பாடியதாக வழங்கப் படுகிறது இந்தப் பாடல். நண்பர் புதுமைப்பித்தன் இந்தப் பாடலை கம்பனே தான் பாடியிருக்கிறான் என்று சாதித்துக் கொண்டிருந்தார். சரசுவதியின் தாலிப் பாக்கியம் தறிபட்டுப் போயிற்று என்று துணிந்து கூற அவன் ஒருவனுக்குத்தான் அத்தனை துணிச்சலும், கலைத்தேவிடயிம் தோழமை உணர்ச்சியும் உண்டு என்பது அவர் வாதம். தனது கவிதையின் மேதாவிலாசம் உணரப்படாமல் போவதையும், அதே வேளை வறட்டு வெள்ளைக் கவிகள் அம்பலமேறி அட்டகாசம் புரிவதையும் கம்பனும் அவன் ஆயுளிலேயே அனுபவித்தே இருப்பான். அந்த வயிற்றெரிச்சலின் காரணமாகவே அவனே இந்தப் பாட்டைப் பாடியிருக்கிறான் என்று அழுத்திச் சொன்னார் புதுமைப்பித்தன். இதை வலியுறுத்துவது போல, இரண்டு ஆண்டுகளுக்கு முன் திருச்சி ரேடியோ நிலையத்தார் புதுமைப்பித்தனுக்கு ஒரு வானொலிப் பேச்சுக்கு அழைப்பு அனுப்பினார்கள். 'பாட்டு எப்படிப் பிறக்கிறது?' என்பது பொருள். புதுமைப்பித்தன் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு, அந்தப் பேச்சுக்காக எழுதிய எழுத்துப் பிரதியில் கம்பனைப் பற்றிய தமது அபிப்பிராயத்தைக் கூறி, வயிற்றெரிச்சலிலும் பாட்டு பிறக்க முடியும் என்று குறிப்பிட்டிருந்தார். அத்துடன் நில்லாமல், கம்பனுக்கு ஏற்பட்டதைப் போல் தன்னுடைய வயிற்றெரிச்சலையும் இப்படி ஒரு பாட்டாக அமைக்க முடியும் என்று அத்தாட்சி பூர்வமாகக் குறிப்பிட்டிருந்தார்.

'திருச்சி ரேடியோ நிலையத்தில் பேசுவதற்காக இருந்த புதுமைப்பித்தன் அதற்கு முன்பே காலாவதி ஆகிவிட்டால்—?' என்ற கேள்வியை அவரே எழுப்பிக் கொண்டு, அப்போது தம் எதிரிகள் எத்தனை கொம்மாளம் அடிப்பார்கள், "பய, போயித் தொலைஞ்சானா?" என்று எவ்வளவு நிம்மதியுடன் சொல்வார்கள், புதுமைப்பித்தனின் மிதிபடியின் காலடி ஓசையைக்

காலனின் அடியோசையாகக் கேட்டு, கிலியடைந்த இலக்கியப் போலிகள் எப்படி ஆனந்தப் பள்ளாட்டம் போடுவார்கள் என்பதையெல்லாம் கற்பித்துக் கொண்டு, அந்த வேளையில் புதுமைப்பித்தனின் நண்பர் ஒருவர் இந்த 'நரியின் அம்பலக் கூத்தை'க் கண்டு வயிறெரிந்து, அந்த இலக்கியப் போலிகளைப் பார்த்துப் பாடுவதாக, புதுமைப் பித்தனே ஒரு பாட்டு பாடி விட்டார்.

திருச்சிக்கு என்றான்;
தென்திசைக்கே சென்றுவிட்டான்
கிரிச்சிச் சடாச் சத்தம்
கேட்டீரயோ?—உரிச்சி
வச்சமடையா வக்கு
அத்தமடையா! எச்சிற்
கர்சுமடையா போ
டா!

என்று பாட்டு. வயிற்றெரிச்சலின் காரணமாக வல்லின ஓசை செவிட்டில் அறைந்தாற் போல் உறைத்து விழுந்து, எதுகை மோனை இலக்கணங்கள் தட்டழிந்து தறிகெட்டுத் தாவுகின்றனவாம்!

இந்தப் பாட்டுக்கும் திருச்சிக்கும் ஏதோ தெய்வீக சம்பந்தம் உள்ளமாதிரி, புதுமைப்பித்தன் சந்தர்ப்ப பேதத்தால் திருச்சிக்குச் செல்ல முடியாமல் போய் விட்டது; அவருடைய பேச்சும் ஒலிபரப்பப்படாமல் நின்றுவிட்டது!

புதுமைப்பித்தன் கடைசிக் காலத்தில் திருச்சிக்குச் செல்லவில்லை; அதற்கும் தெற்கேயுள்ள திருவனந்தபுரத்துக்குத்தான் சென்றார். ஆனல், தமிழ் நாட்டின் சாபத்தீட்டு அவரை அதற்கும் தெற்கே—சென்றவர்கள் மீளாத தென் திசைக்கே—வழியனுப்பிவைத்து விட்டது. ஆம். தமிழ் நாட்டு மறுமலர்ச்சியின் தனிக் காட்டு ராஜாவான புதுமைப்பித்தன் 1948-ம் வருஷம் ஜூன் மாசம் 31-ம் தேதி யன்று காலமாய் விட்டார்.

2

சுமார் நான்கு தலைமுறைகளுக்கு முன் திருநெல்வேலி சரகத்தைச் சேர்ந்த உலகளந்த பெருமாள் பிள்ளை என்ற வேளாள குல ஆசாமி ஒருவர் தென்னாற்காடு ஜில்லாவிற்குச் சென்று அங்கு ஒரு கிராமத்தில் கர்ணம் உத்தியோகம் பார்த்து வந்தார். அவர் அங்கு விருத்தாசலத்தில், ஷதர் கோர்ட் கலெக்டராயிருந்த வெள்ளைக்காரத் துரையிடம் நன் மதிப்பு பெற்று, பதவி உயர்வும் பெற்றார். அச் சமயம் லகர ளகாரம் நிறைந்து, வெள்ளைப் பரங்கித் துரையின் வாயில் நுழையாத தம் பெயரை துரையவர்களின் உத்தரவுப்படி விருத்தாசலம் என்று மாற்றிக் கொண்டார். இந்த விருத்தாசலம் பிள்ளையின் பேரனுக்குப் பேரன் தான் சொ. விருத்தாசலம் என்னும் புதுமைப்பித்தன்.

உலகளந்த பெருமாள் பிள்ளையின் காலந் தொடங்கி, அவர்களின் வமிச பரம்பரை சர்க்கார் ரெவினியூ இலாகாவில் உத்தியோகம் வகித்து, ராஜ விசுவாசத்தோடு வாழ்ந்து வந்தனர். புதுமைப்பித்தனின் தந்தையான ஸ்ரீ வி. சொக்கலிங்கம் பிள்ளை படித்து, பி. ஏ. பட்டம் பெற்று, ஸ்ரீமதி பர்வதத்தம்மாளை வாழ்க்கைத் துணையாக ஏற்று, தென்னாற்காடு ஜில்லாவில் தாசில் உத்தியோகம் பார்த்து வந்தார். அப்பொழுதுதான், 1906-ம் ஆண்டு கடலூருக்கு அருகிலுள்ள திருப்பாதிரிப்புலியூரில் புதுமைப்பித்தன் தாசில் சொக்க

88887

லிங்கம் பிள்ளையின் சீமந்த புத்திரனாக அவதரித்தார். தமிழ்நாட்டுச் சம்பிரதாயப்படி, புதுமைப்பித்தனுக்கு அவருடைய தாத்தா விருத்தாசலம் பிள்ளையின் பெயரே சூட்டப் பெற்றது. ஸ்ரீமதி பர்வதத்தம்மாள் புதுமைப்பித்தனுக்குப் பிறகு ருக்மணி என்ற செல்லத்தம்மாள் என்ற பெண் மகவை ஈன்றெடுத்துவிட்டு 1914-ம் ஆண்டு தேக வியோகம் அடைந்துவிட்டார். அப்போது சொ. விருத்தாசலத்துக்கு வயது எட்டு; தாயின் பரிபூரணமான அன்பையும் பெற அவருக்குக் கொடுத்து வைக்கவில்லை.

தாசில் சொக்கலிங்கம் பிள்ளையின் உத்தியோகத்தின் ஸ்தல மாற்றங்கள் காரணமாக, புதுமைப்பித்தனின் பள்ளிப் படிப்பும் தேச சஞ்சாரம் செய்ய ஆரம்பித்தது. ஸ்திரமற்ற படிப்பால், சொ. வி.க்கு ஆரம்பக் கல்வி ஒழுங்காக நடைபெறவில்லை. அவருடைய ஆரம்பப் படிப்பு செஞ்சி, திண்டிவனம், கள்ளக்குறிச்சி முதலிய ஊர்களில் நடந்தேறியது. "பள்ளிக் கூடத்தில் படிப்பதைவிட, செஞ்சி மலைக் கோட்டையில் ஏறிச் சுற்றுவதுதான் எனக்குப் பிடித்திருந்தது" என்று சொ. வி.யே குறிப்பிட்டார். எனினும் பிறப்பால் அமைந்த புத்திக் கூர்மையினால் பாடமும் படித்து வந்தார். "பள்ளிக் கூடத்தில் படிக்கும்போதே, பயல் கந்தர் கலிவெண்பாவை எடுத்துவைத்துக் கொண்டு பாராயணம் செய்வான்" என்று இன்றும் ஸ்ரீமான் சொக்கலிங்கம் பிள்ளை பெருமையுடன் சொல்லிக் கொள்ளுகிறார்.

1918-ம் வருஷம் சொக்கலிங்கம் பிள்ளை பென்ஷன் பெற்று, தமது பூர்விக நாடாகிய தென்பாண்டிச் சீமைக்கு—திருநெல்வேலிக்கு வந்து குடியேறினார். அப்போதுதான் சொ. வி.க்கும் பன்னிரண்டு வயது நிரம்பி, பாலியத்தின் பேதைமை மறைந்து அறிவு தெளிந்து வரும் பருவம். திருநெல்வேலியில்தான் அவருடைய பள்ளிப் படிப்பும் ஸ்திரமாயிற்று. தமிழ் மொழி பொருப்பிலே பிறந்தாலும், தென்னன் புகழிலே வளர்ந்தது போல், சொ. வி. திருப்பாதிரிப் புலியூரில் பிறந்த போதிலும், அவரை ஆளாக்கிவிட்டது தென்னன் புகழ் படைத்த திருநெல்வேலிச் சீமைதான்.

சொ. வி.யின் பள்ளிப் படிப்பு திருநெல்வேலி கிறிஸ்தவத் திருச்சபையைச் சேர்ந்த அர்ச். யோவான் ஸ்தாபனக் கல்விக் கூடத்தில்தான் நடந்தேறியது. பள்ளியில் அவர் ஒவ்வொரு வகுப்பிலும் பல தடவை குட்டிக் கரணம் போட்டே வந்திருக்கிறார். பள்ளிப் படிப்பு இந்தப் புள்ளிக்கு உதவாமல் போய்விட்டாலும், அனுபவக் கல்வியும் அதிகமாகவே அமைந்து வந்தது. பள்ளிப் படிப்பு முடிந்து கல்லூரிப் படிப்புக்குத் தயாரானதும் சொ. வி.யின் கல்விக் கூடம் யோவான் கலாசாலையிலிருந்து இந்து கல்லூரிக்கு மாறியது. திருநெல்வேலி ஜங்ஷனில் அமைந்துள்ள இந்தக் கல்லூரியில்தான் கவிஞர் பாரதியும் கல்வி கற்றார். இந்தக் கல்லூரியில்தான் பாரதி உபாத்தியாயரைப் பார்த்து "காளமேகம் ஆசிரியரின் உத்தரவுக்கு பணிந்து மழை பொழியாது!" என்று வீறுப்புடன் பதிலளித்தார்.

கல்லூரியிலும் சொ. வி. பாடத்தில் அதிக கவனம்

செலுத்தவில்லை; ஆனாலும் நோஞ்சானாக இருந்ததால், விளையாட்டுக்களிலும் மனநாட்டம் இல்லை. எப்போதும் நண்பர்களுடன் அரட்டையடிப்பது, இலக்கிய சர்ச்சை செய்வது, இரவில் ஆற்றங்கரைத் தென்னந் தோப்பில் நண்பர் படையோடு சென்று இளநீர் திருடித் தின்பது, நாளொன்றுக்கு ஒரு துப்பறியும் நாவல் வீதம் படித்து முடிப்பது — இப்படியே பொழுது கழிந்தது. பாடத்தில் கவனம் இல்லாவிட்டாலும், குறும்பிலும், குஷியிலும் அவருக்குக் குறைச்சலில்லை. ஒரு தடவை இப்போது இந்து கல்லூரியின் 'ப்ரின்ஸிபா'லா யிருக்கும் ஸ்ரீ வி. பொன்னுசாமிப் பிள்ளையைப் பற்றி கல்லூரிக் கரும் பலகையில் கிண்டலாக ஒரு குறிப்பு எழுதி வைத்து விட்டார்.

*Mussolini is the Dictator of Italy;

Our V. P. is the Dictator of Notes!

என்பதே அந்தக் குறிப்பு. ஸ்ரீமான் பொன்னுசாமிப் பிள்ளையிடம் சரித்திர மாணவராக இருந்த மாணவர்களுக்கு இந்த ஹாஸ்யம் பெரிய சூத்திரமாகவே தோன்றும்!

சொ. வி. கல்லூரிப் படிப்பை முடித்து பட்டம் பெற்றது 1932-ம் வருஷம். பி.ஏ. பட்டம் பெற்று முடியும்போது அவருக்கு வயது 25-ஐத் தாண்டி விட்டது. 'கால் ரூபாய் சம்பளமானாலும், கவர்ன்மெண்ட் உத்தியோகம் வேண்டும்' என்ற அந்தக் காலத்துச் சம்பிரதாயப்படி, சொக்கலிங்கம்பிள்ளை தம் மகனை அரசாங்க அலுவலில் அமர்த்த நினைத்தார். ஆனால், அரசாங்க அலுவலுக்குரிய வயசு தாண்டிப் போய்விட்டது. அரசாங்க வயசுத் திட்டம் மட்டும் இல்லாதிருந்தால் சொ. வி. யும் எங்காவது தாசில் உத்தியோகம் பார்த்திருக்கக் கூடும். மேலும், சொ. வி. கற்பனையும் கவிதையும் ஊறிவரும் தமது பேனாவை, சர்க்காரின் சிவப்பு நாடாத் தொழிலுக்கு அடிமைப்படுத்த விரும்பவில்லை.

சொக்கலிங்கம் பிள்ளையோ தம் பிள்ளை சர்க்கார் உத்தியோகத்தில் அமர முடியாமல் போனாலும் சட்டம் படித்து வக்கீலாகட்டுமே என்று எண்ணினார். சொ. வி. யைத் திருவனந்தபுரம் சட்டக் கல்லூரியில் சேர்த்துவிட எண்ணினார். அதற்காக, படிப்பிலே நாட்டம் செல்லாத தம் புதல்வனுக்குப் பொறுப்புணர்ச்சி ஊட்டுவதற்காக ஒரு கல்யாணத்தையும் பண்ணி வைக்க முனைந்தார். சொ. வி. மாமனார் வீட்டோடு இருந்து சட்டக் கல்லூரி படிப்பு பெறுவதற்கு வசதியா யிருக்கும் என்று 1933-ல் திருவனந்தபுரம் மராமத்து இலாகா சூபர்வைசர் ஸ்ரீமான் பி. டி. சுப்ரமண்ய பிள்ளையின் குமாரத்தி ஸ்ரீமதி கமலாம்பாளை திருமணம் பண்ணி வைத்தார். அந்த அம்மாள்தான் இன்று புதுமைப்பித்தனை இழந்து தவிக்கும் கமலா விருத்தாசலம்.

3

திருமணம் சிறப்புற முடிந்ததே ஒழிய சொ. வி. யின் சட்டப் படிப்பு முடியவே இல்லை. அவர் கல்லூரியில் சேர்ந்தால் அல்லவா,

* முசோலினி இத்தாலியின் சர்வாதிகாரி; நமது வி. பி. யோ பாடம் ஒப்புவிப்பவர். 'டிக்டேட்டர்' என்ற பதம் சிலேடை நயத்துக்காகப் பிரயோகிக்கப் பட்டது.

முடிவதற்கு! கல்லூரிப் படிப்பின் போதே கதை எழுதுவதிலும் இலக்கிய சர்ச்சைகளிலும் நாட்டம் கொண்ட சொ. விருத்தாசலம் வறட்டு தர்க்க நியாயத்துக்குக் கட்டுப்படவில்லை. வரம்புகளைக் கடந்து நின்று இதய நீதி கூற விருந்த அவரது மேதை வெறும் ஐ. பீ. ஸி. (இந்திய பீனல்கோடு) யுடன் அடங்கச் சம்மதிக்கவில்லை. ஆகவே, சட்டக் கல்லூரியில் சேர்வதற்குப் பதிலாக, 1934-ம் வருஷம் அவர் ஸ்ரீ ராய. சொக்கலிங்கம் நடத்தி வந்த "ஊழிய"னின் உதவியாசிரியராகச் சேர்ந்துவிட்டார். அன்று முதல் இந்த இலக்கிய மேதையின் இயற் பெயர் பூர்வாசிரமமாயிற்று; புதுமைப் பித்தன் பத்திரிகை உலகில் உதயமானார்.

அப்போதே ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கத்துக்குப் புதுமைப் பித்தன், எழுத்து மூலமாய் அறிமுகம் ஆகியிருந்தார். ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் அப்போது சென்னையில் "காந்தி" பத்திரிகை நடத்திக்கொண் டிருந்தார். பின்னால் ஸ்ரீமான்கள் டி. எஸ். சொக்கலிங்கம், வ. ரா., "பிரீ பிரஸ்" கே. சீனிவாசன் மூவரின் கூட்டு முயற்சியாக, காந்தியும் இணைக்கப்பட்ட "மணிக்கொடி" பத்திரிகையில் எழுதி வந்தார். "மணிக்கொடி" பத்திரிகைதான் புதுமைப் பித்தனையும், இன்று பிரபலமாயுள்ள ஒரு சில கதாசிரியர்களையும் அறிமுகப் படுத்தி வைத்தது. லட்சியத்துக்காகப் பிறந்து, லட்சிய வாதிகளால் போஷிக்கப் பெற்று வளர்ந்தாலும், லட்சியப் பத்திரிகைகளின் கதியையே அதுவும் அடைந்து விட்டது! "மணிக்கொடி" பத்திரிகை பட்டினியி

> **வர்க்க பேதம்**
>
> சுரண்டலும் சுரண்டல் மனப்பான்மையும் இருக்கிற வரையில் சுரண்டுகிறவர்களும் சுரண்டப் படுகிறவர்களும் ஒற்றுமையோடு இருக்க வேண்டும் என்று நான் சொன்னதே கிடையாது.
>
> தொழிலாளர்களும் புத்திசாலித்தனமாக ஒன்றுபட்டு, கட்டுப்பாட்டுடன் ஒரு மனிதனைப் போலக் காரியம் செய்யக் கற்றுக்கொண்டால் பணத்தினுடைய செல்வாக்கைப் பெறுவார்கள்; அல்லது அதை விட அதிக செல்வாக்கு உடையவர்களாக இருப்பார்கள்.
>
> —மகாத்மா காந்தி

லும் பசியிலும் வளர்ந்தது. அதன் இலக்கிய வளர்ச்சிக்கு தாயும் தந்தையும் போன்ற ஸ்ரீ பி. எஸ். ராமையாவும், புதுமைப்பித்தனும் பட்டினியிலும் பசியிலும்தான் வளர்ந்தனர். கோடை காலத்து நாகப் பாம்புக்கு விஷத்தின் வேகம் அதிகரிப்பதுபோல், பட்டினியும் பசியும் அவர்கள் உடலை வாட்டியபோதிலும், உள்ளத்தின் வேகம் வலுவேறிற்று. ஆனால், மணிக்கொடி பின்னால் கை மாறி, கரைந்து மலறந்தது.

"மணிக்கொடி" என்ற சத்திய சோதனைக்குப் பின் சொ. வி., ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் ஆசிரியரா யிருந்த 'தினமணி'யில் சேர்ந்துகொண்டார். அடங்காத ஆனைத்தீ பசி கொண்ட தினசரிப் பத்திரிகையின் தர்ஜுமாத் தொழிலுக்கு சொ. வி. யின் மேதை உள்ளம் கட்டுப்பட வில்லை எனினும், பிழைப்புக்கு வழியாக அது அமைந்திருந்தது. எனினும் 'தினமணி' யின் விசேஷ மலர்கள், மடல்கள்

வெளி வரும்போது சொ. வி. யே பொறுப்பேற்று பல அரிய சாதனைகளைச் சாதித்திருக்கிறார். 'தினமணி'யை விட்டு, உதவி ஆசிரியர் குழாமும், ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கமும் ராஜிநாமா செய்து விலகிய காலத்தில் இவரும் முன்னின்று விலகினார். அதன் பின் "தினசரி" யில் ஒரு வருஷ காலத்துக்கு மேலாகவே பணியாற்றி, அங்கிருந்து விலகினார். சுமார் பத்து வருஷ காலப் பத்திரிகை அனுபவத்துக்குப் பிறகு அவர் வேறு துறையில் புக எண்ணினார்.

எனினும் இலக்கியம் அவருடைய உயிரோடு ஒட்டிய ஜீவ நாடி. அதைவிட்டு அவர் உயிர் வாழ முடியாது. ஆகவே சேவைக்கு சேவையாய், வரும்படிக்கு வரும்படியாய் உள்ள சினிமாத் துறையில் புக எண்ணினார். சினிமா உலகில் புகுந்து மூன்று படங்களுக்கு வசனம் எழுதிக் கொடுத்தும், அவருக்குப் புகழ் தேடித் தரும் படங்களைக் காணுமுன்பே இறந்துவிட்டார். ஜெமினி "ஔவையா"ருக்கும், பாஸ்கரின் "காமவல்லி"க்கும் பெரும்பாலும் இவருடைய வசனங்கள்தான்; கடைசியாக எழுதிய "ராஜமுக்தி"யும் அப்படியே.

'தினசரி'யை விட்டு விலகிய காலத்திலேயே சொ. வி. க்கு லேசாக இருமல் இருந்ததுண்டு. அதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. அவர் மேலும் அது ஆஸ்த்மா சம்பந்தப்பட்டது என்று வைத்தியர்கள் சொல்லி விட்டதால், அதற்கென வைத்தியம் நடந்தது. எனினும் வெளிக்குத் தெரியாமல் உள்ளூர அரித்து வந்த க்ஷயம் பூனைவில் அவருடைய ஓய்வற்ற உழைப்பினால் தலை தூக்கி குதியாட்டம் போட்டுவிட்டது; அவருடைய உயிரையும் குடித்துவிட்டது!

4

அவர் சினிமா உலகில் சேர்ந்த காலத்தில் சொன்னார்: "நீ ஏன் சினிமா உலகில் சேர்ந்துவிட்டாய் என்று சிலர் கேட்கிறார்கள். நானும் பத்து வருஷமாய் பத்திரிகையில் செத்தேன்; ஒன்றும் மிச்சத்தைக் காணோம். எனக்கென்று ஒரு பிள்ளை, ஒரு பெண்டாட்டி இருக்கிறார்கள். நான் அவர்களை மறந்துவிட முடியாது. அதைப் போலவே, இலக்கியத்தையும் என்னால் மறக்க முடியாது. சினிமாத் தொழிலில் கொஞ்சம் நிறைய பணம் கிடைத்தால், நீயும் நானுமாக ஒரு பத்திரிகையே ஆரம்பித்து விடுவோம். பத்திரிகையின் பெயர் என்ன தெரியுமா? சோதனை!" என்று என்னிடம் ஒருதரம் சொன்னார்.

ஆனால், அவர் எண்ணம் நிறைவேறவில்லை. சினிமா உலகமே அவருக்கு ஒரு சோதனையாய் அமைந்துவிட்டது. அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக, அவர் தம் மனைவிக்கு விட்டுச் சென்ற ஒரே பொருள், அவருடைய இரண்டரை வயதுக் குழந்தை தினகரி என்னும் பர்வத குமாரிதான்.

தமிழர்களாகிய நமக்கும் அவருடைய 'சோதனை' கிடைக்காவிட்டாலும், புதுமைப்பித்தனின் கதைகள், மற்றும் கதைத் தொகுதிகள், மொழி பெயர்ப்புக்கள், பாடல்கள் முதலியவைகளையே விட்டுச் சென்றிருக்கிறார்.

புதுமைப்பித்தனை இழந்து தவிக்கும் நமக்கு அவைதாம் ஆறுதல்; ஆதர்சம்.

5

கடைசியாக எனக்கு ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு தடவை நானும் புதுமைப்பித்தனும் பேசிக்கொண்டிருக்கும்போது, தமிழ் நாட்டின் நவயுகக் கவிஞர் ஒருவர் ஆடம்பரமாக வந்து சேர்ந்தார். அவருடைய பாடல்கள் புதுமைப்பித்தனுக்கு பிடித்தவையல்ல. வந்தவர் சும்மா போகாமல், புதுமைப்பித்தனைப் பார்த்து, "என்ன சொ. வி., உங்கள் கதைகளையும் என் கவிதைகளையும் தமிழ் நாட்டார் உணரவே இல்லை. நாமெல்லாம் ஆயிர வருஷம் தப்பிப் பிறந்துவிட்டோம்!" என்று கூறினர். புதுமைப்பித்தன் பதிலுக்கு, "வாஸ்தவம்தானப்பா. நீ ஆயிரம் வருஷம் பிந்திப் பிறந்துவிட்டாய். நான் ஆயிரம் வருஷம் முந்திப் பிறந்துவிட்டேன். இன்றைய தமிழ்நாடு நம்மிருவரையும் எப்படிப் புரிந்து கொள்ளும்?" என்றார்.

கவிஞருக்குக் கிடைத்த சூடு கிடக்கட்டும். தமது மேதையைத் தமிழ்நாடு உணரச் சக்தியற்றுக் கிடக்கிறதே என்ற ஏக்கம் புதுமைப்பித்தனுக்கு இருந்ததுண்டு. ஆம், புதுமைப்பித்தன் ஆயிரம் வருஷம் முந்தித்தான் பிறந்துவிட்டார். அப்படி 'வாராது வந்த மாமணி'யையும் நாம் தோற்றுவிட்டோம். அதையேனும் நாம் இன்று உணர்கிறோமா?

*

தொழிலாளி

ஒரு நாடு அதனுடைய லக்ஷாதிபதிகளும், முதலாளிகளும் இல்லாமலேயே வாழமுடியும். ஆனல் தொழிலாளிகள் இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது.

பணம் சேர்க்கும் பைத்தியக்கார முயற்சி குன்றவேண்டும். ஒவ்வொரு தொழிலாளிக்கும் வாழ்க்கைக்குப் போதுமான கூலி கொடுப்பதோடு மட்டுமல்லாமல், வெறுப்பான, மாறுதல் இல்லாத வேலைகள் அல்லாமல் மனதுக்குப் பிடித்த வேலை கிடைக்கச் செய்வதாகவும் நம்பிக்கை அளிக்கவேண்டும்.

சத்தியம்

என்னைப் போல எத்தனையோ பேர் இறக்கலாம், ஆனல் உண்மை மட்டும் நிலைத்திருக்கவேண்டும்.

சத்தியத்தின் முழுத் தன்மையையும் அறிய வேண்டியது மனித கடமை அல்ல. மனிதன் உண்மையை எவ்வளவு தூரத்துக்கு உணருகிருனே அந்த அளவுக்கு அவன் கடமைகளைச் செய்யவேண்டும். அம்மாதிரி செய்யும்பொழுது தூய வழிகளைக் கடைப்பிடிக்கவேண்டும். அதாவது அஹிம்சை நெறியைப் பின்பற்றவேண்டும்.

—மகாத்மா காந்தி

காந்திஜியின் உவமைகள்

என்னுடைய வீட்டில் யாரும் நுழையாதபடி சுற்றிச் சுவரெழுப்பவோ, சன்னல்களில் காற்றுப் புகாதபடி சாமான்களைத் திணித்து அடைத்துவிடவோ நான் விரும்பவில்லை. அதுபோல், உலகத்திலுள்ள பல்வேறு கலைகளும் நாகரிகமும் யாதொரு தடங்கலுமின்றி என்னைச் சுற்றி வழங்கிவர வேண்டுமென்றே நான் விரும்புகிறேன்.

ரோமாபுரி தீப்பற்றி எரியும் போது அந்தத் தேசத்தை ஆண்ட மன்னனான நீரோ உல்லாசமாகப் பிடில் வாசித்துக்கொண்டிருந்தானாம். அவனைப் போலவே இந்த ராஜாக்களும், மகாராஜாக்களும் தங்கள் நாடு இந்த நிலையிலிருக்கும்போது லண்டன் நகரிலும் பாரிஸ் நகரிலும் இருந்து உல்லாசமாகப் பொழுதுபோக்குகிறார்கள்.

நான் இலையுதிர் காலத்தில் ஒரு மரத்தில் இருக்கும் இலைக்குச் சமானமாயிருக்கிறேன். இந்த இலை எந்தச் சமயத்திலும் கீழே உதிர்ந்து விடலாம். ஆசிரியர்களோ இப்போது துளிர்த்த இளந் தளிர்கள்; இந்தத் தளிர்களும் முற்றியபிறகு காலக்கிரமத்தில் உதிர்ந்து விடும். ஆனால் மாணவர்களான நீங்களோ பழுத்த இலைகளுக்குப் பதிலாகப் புதிய இலைகளைத் தளிர்க்கச் செய்யவல்ல கிளைகள் ஆவீர்கள். ஆகவே என்னிடம் எவ்வளவு நம்பிக்கை இருக்கிறதோ, அவ்வளவு உங்கள் ஆசிரியரிடத்திலும் இருக்கவேண்டும்.

இந்தியாவிலுள்ள முப்பது கோடி மக்களை ஒரு லக்ஷத்துக்கும் குறைவான ஆங்கிலேயர் ஆளுகிறார்கள். எண்ணிக்கையால் யாது பயனுமில்லை. ஒரு சிங்கத்தைக் கண்டவுடன் ஆயிரக்கணக்கான ஆடுகள் ஓட்டம் பிடிக்கின்றன. ஆடுகள் தங்கள் பலவீனத்தை உணர்ந்திருக்கின்றன; சிங்கம் தன் பலத்தை உணர்ந்திருக்கிறது. இந்த உவமைப்படி ஆன்ம சக்தி என்பது அப்படி ஒன்றும் வீண் பிரமையோ, கற்பனையோ அல்ல. சத்தான உண்மைதான் என்று முடிவு கட்ட முடியாதா?

எதிலும் பிரதானமான விஷயத்தை முதலில் கவனித்தால் மற்றவை தாமே ஒழுங்கு பட்டு வரும். நாற்கோணமான சதுரத்திலே ஒரு கோணத்தை (Parallelogram) நிமிர்த்திவிட்டால் மற்ற கோணங்கள் தாமாகவே நிமிர்ந்துவிடும்.

பார்வதிக்கு சிவனைப்பற்றி நாரதர் எப்படி வருணித்தார் என்பதை அறிவீர்கள். ‘உடல் முழுதும் நீறணிந்த ஆண்டி, அழகில்லாதவன், பிரமசாரி’ என்று சொன்னார். ‘ஓ அப்படியா! அவர்தான் என் கணவர்’ என்றாள் பார்வதி. அதுபோல் பெண்களாகிய நீங்களும் பணம், புகழ், அழகு இவற்றைத் தேடி அலையாமல் நல்லொழுக்கத்துக்கு உறுதுணையான ஒருவனையே தேடவேண்டும். பார்வதியைப் போல் நீங்கள் தவமியற்றிவிட்டால், சிவனைப்போல் அநேக ஆடவர்களைத் தோற்றுவிப்பது இயலாத காரியம்.

காந்திஜியின் உவமைகள் சில சமயங்களில் கவிதைகளைப் போலவே அமைந்துவிடும். இங்கே தொகுக்கப் பெற்றுள்ள சில உவமைகள் அதற்கு உதாரணங்களாக இலங்குகின்றன.

கெ. எ. நம்பி

வியாபாரத்திற்காகச் சென்ற தன் மகன் இன்னும் திரும்பி வரவில்லையே என்று கவலைப் பட்டுக்கொண் டிருக்கிறாள் தாய். அன்றுவிளக்கு வைப்பதற்கு முன்னால் வருவதாக கூறிச் சென்றிருந்தான் மகன். ஆனால் விளக்குவைத்து நான்கு நாழிகை யாகியும் அவன் வந்தபாடில்லை. தாய்க்குக் கவலை அதிகரிக்கிறது. நன்றாக இருட்டிவிட்டது. 'சாப்பிட்டு விட்டு படுக்கலாம்' என்று சாப்பிடச் செல்கிறாள். சாப்பாடு செல்லவில்லை. அதை விடுத்து படுக்கச் செல்கிறாள். கண்கள் மூடமறுத்தன. படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிறாள்.

'பட்' 'பட்' என்று கதவு தட்டும் சப்தம் கேட்டதும் தன் மகன் வந்துவிட்டானென்று ஓடிச் சென்று கதவைத் திறக்கிறாள். அவள் எதிர்பார்த்த படியே மகன் வந்து விட்டான். ஆனால் அவனோடுகூட ஒரு இளம் பெண்ணும் வீட்டிற்குள்ளே நுழைகிறாள். இதைப் பார்த்தாள் தாய். உடனே தன் மகனைப் பார்த்து:

இருட்டுக்குத் துணையாக
இட்டுக்கிட்டு வந்தியா?
கூடமாட வேலை செய்ய
கூட்டிக் கிட்டு வந்தியா?

என்று சிறிது துடுக்காகக் கேட்கிறாள். மகன் பதில் சொல்ல ஆரம்பிக்கிறான். முதலில் தாயின் கேள்விக்கு மறுப்புக் கூறுகிறான்:

இருட்டுக்குத் துணையாக
இருக்குது விளக்கு
கூடமாட வேலை செய்ய
கூலியாளு இருக்கு

என்று சிறிது கோபத்துடன் பதிலளிக்கிறான். ஆனால் தாயின் கேள்விக்குச் சரியான பதில் இதுவரை வரவில்லையே! மகன் தாயிடம் மேலும் கூறுகிறான். தாயின் வெகுநாளைய ஆசையைத் தீர்க்கும் தோரணையில்:

'பாட்டி' ன்னு அழைக்கிதுக்கு
பேரன் வேண்டாமா?
கொஞ்சி விளையாடதுக்கு
கொளந்தை வேண்டாமா?

தாயின் முகம் சிறிது மலர்கிறது. ஆனால் அந்தப்பெண் யார் என்பது இன்னும் தெரியவில்லையே! அதை மகனிடம் கேட்கு முன் அவனாகவே தந்திரமாகப் பதில் கூற ஆரம்பிக்கிறான்:

அழகான பேரனுக்கு
அளிக்கிதுக்காக
அழைச்சுக்கிட்டு வந்தேனே
அவசரமாக

என்றதும் தாயின் சந்தோஷத்திற்கு அளவே இல்லை. தன் மகன் பணச்செலவில்லாமல் இவ்வளவு அழகும் குணமும் மிகுந்த

பெண்ணை கொண்டு வருவான் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை. சந்தோஷத்துடன் தன் மகனை அணைத்துக் கொள்கிறாள். பக்கத்துவீட்டுப் பெண்களிடம் பெருமை அடித்துக் கொள்ளவும் செய்கிறாள்:

அன்னைக்கு அன்பான
பிள்ளை இவன்பாரு
என்னைப்போல் நல்லபிள்ளை
பெத்தவங்க யாரு?

என்று இப்பொழுதும் பெருமைப் படுகிறாள்.

★

மனித உள்ளம்

மனித உடம்பில் எத்தனை எலும்புகள் இருக்கின்றன என்பதை ஒரு மனிதனிடம் நீ சொன்னால் உடனே அவன் உன் சொல்லை நம்புவான்; அதே வேளை "இதில் சாயாதே! ஈர வர்ணம்!" என்று எழுதப் பட்டிருக்கும் பெஞ்சைத் தொட்டுப் பார்த்தபின்தான் நம்புவான்.

—காமெடி

எட்டயபுரத்தின் சுமார் 250 வருஷகாலக் கலைச் சரித்திரத்தைக் கூறத் தொடங்குகிறது இக்கட்டுரை வரிசை. தொடர்ந்து சில இதழ்களில் இக்கட்டுரை வெளிவரும். எட்டயபுரத்தில் இதுவரையில் வாழ்ந்த குறிப்பிடத்தக்க கவிஞர்கள், கானக்கலை வல்லுநர்கள், ஓவியர்கள முதலிய பலரைப்பற்றிய குறிப்புகளையும், அவர்களது அரிய சாதனைகளையும் தொடர்ந்து படியுங்கள்.



1

பீடிகை: பாரதியார் பிறந்த எட்டயபுரத்தைப் பலரும் போய்ப் பார்த்தார்கள். முதல் முதலாக அந்த ஊரைப் பார்த்தவர்கள் 'இதுவா எட்டயபுரம்! பாரதியார் பிறந்த ஊர் இதுதானு?' என்று வியந்தார்கள். இப்படி வியந்தவர்களில் சங்கீதக் கலையில் பயிற்சி உடையவர்கள் இருந்திருந்தால், 'முத்துசாமி தீக்ஷிதர் இந்த ஊரில் இருந்துதானு அப்படி அற்புதமான சாஹித்யங்களை அருளிச் செய்தார்?' என்றும் ஆச்சரியப் பட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். உண்மை, அவர்கள் கண்டு ஆச்சரியப்பட்ட இந்த எட்டயபுரம்தான், அவர்கள் மனசுக்குள் மிகப் பெருமையான கலாக்ஷேத்திரமாகக் கருதிய அந்த எட்டயபுரம். இந்த ஊரில், கரிசல்காட்டின் நடுவில் நீர்வளம் இன்றி உஷ்ணக்காற்று வீசும் இதே ஊரில்தான், நீர்வளம் நில வளங்களைப்பற்றிப் பாடிய புலவர்களும், சமுத்திரத்தைப் பற்றிப் பாடிய புலவர்களும், தென்றலையும், சந்திரனையும் பாடிய புலவர்களும் இருந்திருக்கிருர்கள். கடந்த இருநூற்றைம்பது வருஷகாலத்தில் இந்தக் கரிசல்மண் பூமி, கவிஞர்களைப் பெற்றெடுத்திருக்கிறது; இலக்கண நூல் இயற்றிய புலவர்களைப் பெற்றெடுததிருக்கிறது; சரித்திர ஆசிரியர்கள், சங்கீதவித்வான்கள், ஓவியக் கலைஞர்கள் முதலிய பேறிஞர்களையும் பெற்றெடுத்திருக்கிறது. அது மட்டுமல்லாமல், பற்பல இடங்களிலிருந்தும் வந்த கலைஞானிகளின் பாதசுவடு பட்டு பவித்திர ஸ்தலமாகி யிருக்கிறது இந்தக் கரிசல் மண் பூமி.

இன்று கலையறிவு பெறுவதற்குரிய வசதிகள் இல்லாமல் வறு

மையில் கிடந்து தவிக்கும் குடி ஜனங்கள் வாழும் இந்த ஊரைப் பார்த்தால் 'இதுதானு எட்டய புரம்!' என்று ஆச்சரியப் பட்ட தில் அதிசயம் ஒன்றுமில்லை. லஸ்தர்களும், குளோப்புகளும் தொங்கவிட்டு, ஜோதிமயமான சூழ்நிலையில் தெய்வ கன்னிகள் வந்து நாட்டிய மாடிய ஓர் அரங்கின் காட்சி திடீரென்று நம் கண் முன்னுலேயே மறைந்து விட்டதைப்போன்ற உணர்ச்சி தட்டுகிறது இன்றைய எட்டயபுரத்தைப் பார்க்கும்போது. இது யாராலும் ஏற்பட்ட மாறுதல் அல்ல; விதியின் விளைவு அன்று. சமூகம் என்ற மகாசமுத்திரத்தின் அலைவீச்சில் இந்த மாறுதல் ஒருசிற்றலை புரண்டமாதிரி நிகழ்ந்து விட்டது. இந்தத் தவிர்க்க முடியாத மாறுதலைப்பற்றிக் கடைசியில் பார்ப்போம்.

தமிழ் நாட்டின் சமூக நிலையில்

அவ்வப்போது சிலபெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. அதில் கடைசியாக ஏற்பட்ட மாறுதலின் விளைவுதான் இன்று நிலைத்திருப்பது. இதற்கு முந்திய ஒரு பெரிய மாறுதல், இந்தியாவின் மத்திய அரசாங்கமாக இருந்த முகலாய ராஜ்யம் தகர்ந்தபோது ஏற்பட்டதாகும். பல சிற்றரசர்களை அடக்கியாண்ட முகலாய தர்பார் தகர்ந்ததும், ஆங்காங்குள்ள சிற்றரசர்கள் சுயேச்சை பெற்றனர். அவர்களுடைய மேலதிகாரத்தின் கீழ் பற்பல இடங்களில் ஜமீன்களும் பாளையப்பட்டுகளும் ஏற்பட்டன. இந்த ஜமீன்கள் சில காலம் கர்நாடக நவாப்புக்கும், சில காலம் விஜயநகர சமஸ்தானத்துக்கும் உட்பட்டிருந்தன; சில சமயம் சுயேச்சையாகவும் இருந்து வந்தன. இந்த நிலையில் கலைஞர்களின் பிழைப்பு எப்படி இருந்தது என்பதைக் கவனிப்போம.

இந்தியாவில் ராஜதர்பாரை அண்டிப் பிழைத்தவர்கள்தான் பெரும்பாலான கலைஞர்கள். பொது மக்களிடத்தில் அவர்களுக்கு நன்மதிப்பு இருந்ததே ஒழிய, பொதுமக்களின் ஆதரவில் அவர்கள் வாழ்ந்தவர்களல்லர். சோழ சாம்ராஜ்யமும், பாண்டியனுடைய ராஜ்யமும் தமிழகத்தை ஆண்டு வந்தபோது அந்தந்த நாட்டுத் தலைமைப் பட்டணங்களில் கலைஞர்கள் குடியிருப்பார்கள்; பற்பல திசைகளிலும் இருந்து கலைஞர்கள் வந்து கூடுவார்கள். சில அரசர்கள் கலையறிவு உள்ளவர்களாகவும் இருந்திருக்கக்கூடும் என்பதை அவர்கள் சிறந்த கலைஞர்களைக் கண்டுபிடித்து அவர்களை ஆதரித்து வந்ததிலிருந்து ஊகிக்கலாம். சோழ மன்னன் தமிழகத்தின் ஒற்றைக்கொரு கவிச் சக்கரவர்த்தியான கம்பரையும், மற்றும் சிறந்த புலவர்களான ஒட்டக்கூத்தர் முதலியவர்களையும் ஆதரித்தான்; பாண்டியன் தமிழ்ச் சங்கமே வைத்து நடத்தினன். கலைக்காக பூர்வகாலத்தில் இப்படிப்பட்ட சங்கங்களை நிறுவியவர்கள் கிரேக்கர்கள். அந்த நிலையில், உலகின் முன்னேற்றத்துக்கு ஒப்ப, தன் பங்கையும் தமிழகம் நிறைவேற்றுவதற்கு உதவினர்கள் தமிழ்நாட்டுக் கலைஞர்கள். மொத்ததில் தமிழ்நாட்டுக் கலைஞர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் எல்லோருமே சோழ, பாண்டிய ராஜதானிப் பட்டணங்களில் வந்து கூடியிருந்தனர். அறிஞர்கள் இரண்டொருவர் மட்டும் தங்களிடையே இருந்தாலும், மட்டமான இலக்கிய சிருஷ்டிகளில் இறங்க, குட்டிப்புலவர்

கள் கூசுவார்கள் அல்லவா? ஆகவே அந்தச் சமயத்தில் படு மோசமான நூல்கள் தோன்றாமல் இருந்துவிட்டன. அக்காலத்தில் தெய்வ பக்தி, கலை முயற்சிக்குப் பெரிதும் பயன்படும் செலாவணி நாணயமாக இருந்தது. அதனால் வெறும் சொல்லலங்காரத்திலும், சித்திர கவி, யமகம், திரிபு, திரிபங்கி, நவபங்கி போன்ற சர்க்கஸ் வித்தைகளிலும் இறங்காமல் (அதாவது தோற்றுவிக்காமல்) பக்திரசம் ததும்பும் அல்லது பக்தி ரசத்தைச் சிறப்பிக்கும் கவிதைகளைப் புனைந்தார்கள், கவிஞர்கள். சிலர் தங்களை ஆதரிக்கும் வள்ளல்கள் மீது உலா போன்ற நூல்கள் செய்திருந்தாலும், பக்திரசம் ததும்பும் நூல்களில்தான் இலக்கியச் சுவை மிகுந்திருந்தது. காரணம், ஒரு குறிப்பிட்ட அரசனின் கீர்த்திகளும் பெருமைகளும் ஒரு அளவோடுதான் இருக்கும். இந்த அளவு கவிதைக்குப் போதாது. ஆகவே, தெய்வம் என்ற வரையறையற்ற ஒரு கற்பிதப் பிண்டத்தைப் பயன்படுத்தி, தங்கள் எல்லையில்லாத கற்பனைகளை வெளியிட்டார்கள் கவிஞர்கள். பக்திரசப் பாடல்களைப் பாடிய பலரையும் தமிழ் நாட்டு அரசாங்கங்கள் ஆதரித்து வந்துள்ளன.

இதன் பிறகு தர்மா தர்மப் பிரச்னைகளை ஆராய்வதும், இலக்கியத்தின் சகல மூலை அரங்குகளையும் திரை நீக்கிக் காட்டுவதுமான, அளவிட்டு மதிப்பிட முடியாத மாபெரும் காவியத்தைக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் இயற்றினர். இந்த சமயத்தில் தமிழ் நாட்டின் கலையே அறிவின் சிகரத்தைத் தீண்டியது என்று சொல்லிவிடலாம். கம்பரைப் போன்ற ஒரு கவிச்சக்கரவர்த்தியையும், அவரே கவிச்சக்கரவர்த்தி என்று அங்கீகரித்துப் போற்றும் ஒரு சோழனையும் முன்னே வைத்துக்கொண்டு, மட்டமான பாட்டுகளை இயற்ற எவனும் கூசுவான்; இயற்றினாலும் மதிப்பிருக்காது. இந்த நிலை பின்னும் கூட வெகு காலம் நீடித்தது. கம்பர் கவிதையைக் கேட்ட காதுகளில் மற்றப் பாடல்களை நுழைப்பது எப்படி? கம்பருடைய சக்தியே சில காலத்துக்காவது மட்டாகமான கவிஞர்களைத் தலையெடுக்க வொட்டாமல் தடுத்துவிட்டது என்று கூறலாம்.

பிறகு ஒரு புது மாறுதல் ஏற்பட்டது. கம்பர் வைஷ்ணவக் கடவுளாகிய ராமனைப் பாடினர்; சைவக் கடவுளாகிய முருகனைப் பாடினால், கம்பராமாயணத்தை வைஷ்ணவக் கூட்டத்துக்கும், முருகன் காவியத்தை சைவர்களுக்கும் என்றும் உரிமைப்படுத்திவிடலாம், கவிதா ரசிகர்களின் கூட்டத்தை மதத்தின் அடிப்படையில் இரண்டாகப் பிரித்துவிடலாம் என்று திட்டமிட்டுப் புறப்பட்டது போல் கவிப் பண்பில்லாத சைவ நூல்கள் பல கிளம்பின; வைஷ்ணவ பக்தியுடன் கம்பர் ராமாயணம் செய்தமாதிரி, தாங்களும் வைஷ்ணவ பக்தியுடன் நூல் செய்யலாம் என்று புறப்பட்டார்கள் பல வைஷ்ணவர்கள். இலக்கிய சிருஷ்டிக்கு மதபக்தியும், இலக்கண அறிவும் மட்டும் போதும் என்ற மனப்பான்மை பிற்காலத்தில் ஏற்பட்டது. இதற்குச் சான்றுகளாக எத்தனையோ சாரம் சப்பற்ற புத்தகங்களைப் பார்க்கிறோம். இந்த தெய்வபக்திக் கூட்டத்தில் சிறந்த கவிஞர்களாக இலங்கியவர்கள் பட்டினத்தார், பிள்ளைப்

பெருமாள் ஐயங்கார் முதலிய ஒரு சிலர்தான். நிற்க.

கம்பர் காலத்துக்குப் பின்

சோழ சாம்ராஜ்யமும் அழிந்து விட்டது. பிறகு அரசியலில் பல மாறுதல்கள் ஏற்பட்டு, நாம் மேலே குறிப்பிட்ட ஜமீன் சகாப்தமும், பாளையப்பட்டு சகாப்தமும ஏற்பட்டது. இந்த சமயத்தில் கலைஞர்கள் கலையபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற ஆவலிருந்தாலும் இல்லாவிட்டாலும், ஜீவனோபாயத்துக்காகவாவது ஒரு பெரிய இடத்தைப் பிடிக்க வேண்டியது அவசியமான காரியமாகிவிட்டது. தமிழ் நாடு முழுமைக்குமோ, அல்லது சோழ நாடு பாண்டிய நாடு வாரியாகவோ பெரிய அரசுகள் இல்லை. அதனால் கலைஞர் கூட்டம் ஜமீன்தார்களையும், பண்ணையார்களையும், மிராசுதார்களையும் நோக்கிப் புறப்பட்டது. இப்படிப் புறப்பட்டு வாக புலவர்களையும் பிற கலைஞர்களையும் வரவேற்று ஆதரவளித்ததும் ஒரு சில ஜமீன்கள்தான். இவற்றில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்க ஜமீன்கள் இரண்டு: ஒன்று ராமநாதபுரம்; மற்றொன்று எட்டயபுரம்.

ஜமீன்களை அண்டிய புலவர்கள் பெரும்பாலும் தங்களை ஆதரித்த பிரபுக்களையே பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு அவர்கள் மனத்துக்கு இதமானபாடல்களையும், அவர்களுக்கு பெரிய ஆச்சரியமான கவிதா சக்திபோலக் காட்டும் பாடல்களையும் பாடினார்கள். இவற்றிற்கு உதாரணங்கள் முறையே, காதலனுபவம் பற்றிக் கூறும் சிருங்கார ரசமான பாடல்களும், யமகம், திரிபு, சித்திரக் கவிகள் போன்றவையுமாகும். இந்தச் சர்க்கஸ் வித்தைப் பாட்டுக்களிலும் காமரசமே கஷாயச் சத்தாக இருக்கும். சோழமன்னன் காலத்திலும் சோழனைத் தலைவனாகக்கொண்டு சில தனிப்பாடல்களையும், 'விக்கிரம சோழன் உலா' போன்ற நூல்களையும் கவிஞர்கள் இயற்றினார்கள் என்பது உண்மைதான். ஆனால் அக்காலத்திய கவிதை உணர்ச்சியின் உயர்வுக்கேற்ற நூல்களாக அவை விளங்கின. பிற்காலத்தில் ஜமீன்கள் சகாப்தத்தில் தோன்றிய தனிப்பாடல்களிலும், நூல்களிலும் பெரும்பாலானவை சர்வ மட்டமானவை. இப்படியாக இலக்கியத்தின் பொது நிலை தாழ்ந்து விட்டதற்குப் பல காரணங்கள் உண்டு. பெரிய அரசாங்கங்களின் தலை நகரங்கள் மிகப் பெரிய பிரதேசத்துக்கு மத்தியஸ்தானங்களாக இருந்ததால், தூரப் பிரதேசங்களிலிருந்து புலவர்கள் அங்கு வருவார்கள், அவர்களில் ஒருவர் சிறந்த கவிஞராக இருந்தாலும், மற்றப் புலவர்கள் சாதாரண நூல்கள் இயற்றத் தயங்குவார்கள். ஆனால் ஜமீன்களின் வட்டம் மிகக்குறுகியவை. இங்கே வருபவர்கள் அதிர்ஷ்டவசமாகச் சிறந்த கவிஞர்களாய் இருந்தால் ஒழிய, உள்ளூர்க் கொட்டுதான் தமுக்கடித்துகொண்டிருக்கும். அத்துடன் இலக்கிய மரபும் தமிழ்நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களின் காரணமாக க்ஷீணித்து விட்டது. இலக்கிய ரசனையுடன் ஆதரிக்கும் வள்ளல்களும் குறைந்துவிட்டனர். ஆங்காங்கே புலவர்களை ஆதரித்த ஒரு சில பிரபுக்களைத் தலைவர்களாகக்கொண்ட நூல்கள் பின்னால் தோன்றின. இவற்றில் சிறப்பானவையாக கூளப்பநாயக்கன் காதல், விறலி விடுதூது, எட்டயபுரத்து அரசரைப் பாட்டுடைத்

தலைவராகக்கொண்டுபெத்தணன் தளவாய் இயற்றிய உலாமடல் என்னும் அற்புதமான நூல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். பிற்கால நிலையைப் பார்த்தால் பெரும்பாலான புலவர்கள் தெரியாத்தனமாகவோ, ஜீவனோபாயத்துக்காகவோதான் கவிதைத் தொழிலைக் கைக்கொண்டதாகக் கூறும்படி இருக்கிறது. ஆகவே ஒரு சமஸ்தானத்தில் வாழ்ந்த புலவர்களையெல்லாம், அந்த சமஸ்தானம் இருக்கும் சீமையில் வாழ்ந்த புலவர்களை யெல்லாம், ஒன்று போலவே பெருங் கவிஞர்கள் என்று கூறிவிட முடியாது. இங்கே 'எட்டயபுரம்கலைஞர்கள்' என்ற தலைப்புக் கொடுத்து எழுதுவதில், எட்டயபுரத்திலும், எட்டயபுரம் சீமையிலும் வாழ்ந்த குறிப்பிடத் தக்க சிலரைப் பற்றி மட்டும்தான் கூறப்பட்டுள்ளது என்பதைத்தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தவிரவும், எட்டயபுரம் சீமையில் வாழ்ந்த ஒரு சிறு புலவரையும் அந்தச் சீமைக்குப் பெருமை யளிக்கக் கூடியவர் என்று கூறுவது பொருந்தும். ஏனென்றால், அந்தச் சீமையில் பூர்வகாலத்திலிருந்து பரம்பரை பரம்பரையாக இலக்கிய சிருஷ்டி செய்த புலவர்கள் இருந்தது கிடையாது. சுமார் 250 வருஷங்களுக்கு முன்பிருந்து தான் எட்டயபுரத்தின் கலைச் சரித்திரம் தொடங்குகிறது.

2

எட்டயபுரமும் எட்டயபுரம் சீமையும்:

எட்டயபுரம் கலைஞர்கள் என்று எட்டயபுரம் ஊரில் வாழ்ந்தவர்களை மட்டும் குறிப்பிடுவது அர்த்தமற்ற பூகோள வரையறைக்கு அடங்கி நடப்பதாகும். ஒரு ஊரின் கலைவளம் அந்தப் பிரதேசத்தை அனுசரித்து இருப்பதால், அந்தப் பிரதேசத்தில் வசித்த அத்தனை கலைஞர்களையும் பற்றிச் சொல்லுவதே பொருத்தமான காரியமாகும். ஆகவே எட்டயபுரம் சீமை என்று, தற்காலத்திய கோவில்பட்டித் தாலுகாவையே எடுத்துக் கொண்டிருக்கிறேன். கோவில்பட்டித்தாலுகா திருநெல்வேலி ஜில்லாவின் வடகோடியில் உள்ள இரண்டு தாலுகாக்களில் கிழக்கே உள்ள தாலுகாவாகும். கோவில்பட்டி தாலுகாவின் வடபக்கம் ராமநாதபுரம் ஜில்லாவும், கிழக்கே கடலும், தெற்கே ஸ்ரீவைகுண்டம் தாலுகாவும், மேற்கே சங்கரன் கோவில் தாலுகாவும் இருக்கின்றன. கோவில்பட்டித் தாலுகாவில் ஜீவநதி கிடையாது. ஆகவே புராதனமான பெரியபட்டணங்கள் இந்தத் தாலுகாவில் இருந்திருக்க நியாயமில்லை. எந்தக் காலத்திலும் ஒருராஜ்யத்தின்தலைநகரோ துறைமுகப்பட்டணமோ இல்லாத நிலையில், மக்கள் கூட்டத்தின் மேல் தட்டில் இருப்பவர்கள் இந்த மண்ணில் பழைய காலத்தில் வாழ்ந்திருக்க முடியாது. தேவார திருவாசகங்களிலோ, நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திலோ பாடல் பெற்ற கோவில் எதுவும் இங்கே கிடையாது. இப்படிப்பட்ட சீமையில் புராதன காலத்தில் கலைவளம் நிரம்பியிருக்க முடியாது. முதல் முதலில், குறிப்பிடத் தக்கவாறு, தமிழ்ப் பாட்டின் ஒலி இந்தச் சீமையில் கேட்டது கோவில்பட்டித் தாலுகாவின் மேற்கு எல்லையில் இருக்கும் கழுகுமலை என்னும் ஊரில்தான். அவ்வூருக்கு வந்த அருணகிரிநாதர் அவ்வூர் முருகன் பேரில் திருப்புகழ் பாடினர். அத்துடன் அந்த ஊரில் புராதனமான சிற்பக்கலை

பொலியும் பாறைக் கோவில் ஒன்று உள்ளது. இவைபற்றி பின்னல் விவரிக்கப்படும். எட்டயபுரம் ஜமீன் ஏற்பட்ட பிறகு தான் கலையைப் பற்றிய பிரஸ்தாபம் எழுந்தது இந்தச் சீமையில். அதாவது சுமார் 250 வருஷங்களுக்குமுன் எட்டயபுரத்தில் கடிகைமுத்துப் புலவர் பிறந்தார். அதன் பின் பரம்பரையாக, பாரதியார் காலம் வரையில் எட்டயபுரம் கலைவளர்ச்சிக்கு மத்திய ஸ்தானமாக விளங்கிவந்தது.

இக்கட்டுரை வரிசையில் இந்தச சீமையில் வாழ்ந்த கலைஞர்களின் வரலாற்றுக் குறிப்புகளும் அவர்களுடைய கலைஞானத்தைப் பற்றிய குறிப்புகளும் விரிவாகக் கூறப்படும்.

கடைசியாக ஒரு வார்த்தை: எட்டயபுரம் சீமையில் கம்பரைப் போன்ற ஒரு கவிச்சக்ரவர்த்தி பிறக்கவில்லைதான்; ஆனல் சொல்லாட்சியில் அசகாய சூரர்களான கடிகைமுத்துப் புலவரும் பெத்தணன் தளவாயும் இங்கே வாழ்ந்திருக்கிருர்கள்; தமிழகத்தின் மறுமலர்ச்சிக் கவிஞர்களில் முதல் ஸ்தானம் பெற்றவரான கவியரசர் பாரதியார் பிறந்திருக்கிருர். சங்கீதக்கலையின் இரண்டு சக்கரவர்த்திகளில் ஒருவர் என்று போற்றத்தக்க முத்துசாமி தீக்ஷிதர் இந்த ஊரில் பிறக்காவிட்டாலும் இந்த ஊரில் வாழ்ந்திருக்கிருர். ஓவியக்கலையில் ரவிவர்மாவுக்கு ஒப்பான திறமை பெற்றிருந்த காசிமகாராஜா இந்த ஊரில் பிறந்தவர். மற்றும் பற்பல கலைகளில் வல்லவர்கள் பலர் இங்கே தோன்றியுள்ளார்கள் என்ற பெருமை இந்தச் சீமைக்கு உண்டு. அந்த எல்லோருடைய வாழ்க்கையிலும் நடந்த சில ருசிகரமான செய்திகளைத் தமிழ்நாட்டில் எல்லோரும் தெரிந்திருக்க முடியாது. அவற்றை ஓரளவாவது தொகுத்துச் சேகரித்து வெளியிட முயலும் இந்த முயற்சியில், முதல் முதலாகக் கடிகை முத்துப் புலவரைப் பற்றிக் கூறப்படும். அவரைப்பற்றி அடுத்த இதழில் கவனிப்போம்.

(தொடரும்)

அந்த விஷயத்தில் கஷ்டப்பட்டார்களா?

ஒரு பெண் ஒரு கூட்டத்தில் பின் வருமாறு பேசிக் கொண்டிருந்தாள்:

"நூற்றுண்டுக் கணக்கில் பெண்களை மோசமாகக் கருதியிருக்கிருர்கள்; மோசமாக நடத்தி யிருக்கிருர்கள். அவர்கள் அடிமைப்படுத்தப்பட் டிருக்கிருர்கள்; அவமானப்படுத்தப்பட் டிருக்கிருர்கள்; சுரண்டப்பட் டிருக்கிருர்கள்; பரிகாசப்படுத்தப்பட் டிருக்கிருர்கள். லக்ஷக் கணக்கான வழிகளில் பெண்கள் கஷ்டப்பட்டிருக்கிருர்கள்."

கூட்டத்திலிருந்து ஒரு வாலிபன் எழுந்திருந்தான். எழுந்து, "ஆனல் ஒரு விஷயத்தில் பெண்கள் எந்தக் காலத்திலும் கஷ்டப்பட்டது கிடையாது" என்றான்.

உடனே அந்தப் பெண் "எந்த விஷயத்தில், அப்பனே?" என்று கோபத்துடன் கேட்டாள்.

வாலிபன் கூட்டத்தைச் சுற்று முற்றும் பார்த்துவிட்டு, "பெண்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்து கஷ்டப்பட்டது கிடையாது" என்றான்.

—கிறிஸ்டியன் ஸயன்ஸ் மானிடர்

அரிய நாவல்கள்

○

	ரூ. அ.
சிப்பாய் ஹிருதயம் 'சுகி'	1 8
வளர் பிறை 'மாறன்'	3 0
பாசவலை ய. ல.	1 8
மரகதம் விக்டர்ஹ்ஹூகோ	5 0
மிருணளினி பங்கிம்சந்தர்	2 8
தபசியும், தாசியும் (அச்சில்) அனத்தோல் பிரான்ஸிஸ்	

தபால் செலவு தனி

○

கார்த்திகேயினி பிரசுரம்

இராமச்சந்திரபுரம்,

திருச்சிறுப்பள்ளி ஜில்லா

அடுத்த விளையாட்டுப் பந்தயத்தில்

அம்ருதா

ரத்த சுத்தி திராவகம்..

கலக்கம், ஆயாசமில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.

நரம்புகளை முறுக்கேற்றுகிறது

355. A.E..

கேசரி குடீரம் லிட். மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ்நாட்டுக்கு ஏஜண்டுகள்

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை.

சக்தியின் அன்பர்களுக்கு

சக்தி ஆரம்பித்த காலம் முதலே சமுதாயம் உயர்நிலை அடைய வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடனேதான் நடைபெற்று வருவதை நீங்கள் அறிவீர்கள். சக்தி வளர்ந்து கொண்டு வருகிறது. ஒவ்வொரு இதழிலும் புதுப்புது விஷயங்களை அள்ளிக் கொடுக்கிறது. அந்த விஷயங்களைப் பற்றி வாசகர்களாகிய உங்களுடைய எண்ணத்தையும் அவ்வப்பொழுது அறிய நாங்கள் ஆசைப்படுவது இயற்கைதானே. உங்களுடைய யோசனைகளைத் தாராளமாகச் சொல்லுங்கள். சொல்ல உங்களுக்குப் பூரண உரிமை உண்டு.

ஆசிரியர், சக்தி

காந்திஜியும் ஜின்னாவும்

காலக்கோலன்

நமது நாட்டு மக்களின் வாழ்க்கையை அதிக அளவுக்கு உருவாக்கிய இரு தலைவர்கள் காந்திஜியும், ஜின்னாவும். அவ்விரு தலைவர்களும் ஒரு வருஷ காலத்துக்குள் ஒருவரையொருவர் பின்பற்றி மறைந்து விட்டனர். அவ்விருவர் வாழ்ந்த காலத்திலே பிறந்து வளர்ந்த நாம் அன்னாருடைய முக்கியத்துவத்தைச் சரிவர மதிப்பிடுவதற்கு முடியுமா என்பது சந்தேகமே. சமூகத்தில் எத்தனையோ மாறுபாடுகள் ஏற்படலாம். எந்தவிதமான நியாய நியதிகளைக் கொண்டு இக்காலத்தை வருங்காலத்து மக்கள் மதிப்பிடுவார்கள் என்பதைக் கூறுவதற்கு இயலாது. எனினும், இவ்விருவரும் நமது வாழ்க்கையையும் அரசியல் அந்தஸ்தையும் பலவகைகளில் அவர்களுடைய சொல்லினாலும் செயலினாலும் பாதித்தனர் என்ற உண்மையை நாம் அறிவோம். ஆதலால் இக்காலத்துச் சரித்திரத்தை அறிந்து கொள்வதற்கு முயலும் எந்த அறிவாளியும காந்திஜி, ஜின்னா ஆகிய இருவருடைய வாழ்க்கையை நனகு அறிந்துகொள்ள வேண்டும். இந்திய அரசியலைப் புரிந்து கொள்வதற்கு விரும்பும் அரசியல் மாணவர் யாரும் அவர்கள் தலைமை தாங்கி நடத்திய அரசியல் இயக்கங்களை, கட்சிகளை, அவற்றின் நடவடிக்கைகளை அறிய வேண்டும்.

சமீபத்தில்தான் காந்தி ஜயந்தி நடந்தது. காந்திஜி மறைந்த பின்னர் முதன் முதலாகக் கொண்டாடப்பட்ட காந்தி ஜயந்தி அது. காந்திஜியைக் கடவுளாக்கி வைத்துவிட்டு அவருடைய போதனைகளை மறந்துவிடக் கூடாது என்று ராஜாஜி எச்சரிக்கை செய்தார். ஆனால் உண்மையில் அப்படித்தான் ஆகிவிட்டது. பெரும்பான்மையான காங்கிரஸ்காரர்கள் காந்திஜியைப் பரம புருஷராகக் கொண்டாடி துதி செய்துகொண்டு, நடைமுறை வாழ்க்கையில் அவரவர்களுடைய சுய நலத்தைப் பின்பற்றி, சுய காரியங்களைச் செய்வதற்கு ஆரம்பித்து விட்டனர். பொதுமக்களிடையே காந்திஜி ஒரு பெரிய மகான் என்ற வகையிலேதான் அவருடைய பெயருக்குச் செல்வாக்கு உருவாகி வருகின்றது. கலிலியோ, நியூடன், மார்க்ஸ், எங்கெல்ஸ், டார்வின் போன்ற விஞ்ஞானிகள் இறந்த பின்னர் தங்களுடைய தத்துவத்தின் மூலம் பலருடைய வாழ்க்கையை உருவாக்கினர். புத்தர், யேசுநாதர் போன்ற தத்துவ ஞானிகள் இறந்த பின்னர் கடவுளின் அவதார புருஷர்களாகி விட்டனர். ஏனெனில் அவர்கள் போதித்தது ஒழுக்கம்; அவர்கள் இயற்கைப் பொருளை பரிசீலனை செய்து, விஞ்ஞான உண்மைகளை உரைக்கவில்லை. வாழ்க்கையில் அனுஷ்டிப்பதற்கு ஒரு முறையைக் குறிப்பிட்டனர். அந்த அனுஷ்டான முறை அன்றைய சமூகத்திற்கு ஏற்றதாக இருக்கும் வரையில் அனுஷ்டிக்கப்

காந்திஜியும் ஜின்னாவும் இன்று இல்லை. இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிப்பதற்குக் காரண கர்த்தர்களாக இருந்த இந்த இரண்டு தலைவர்களைப்பற்றிக் கட்டுரையாளர் தம் கருத்துக்களைக் கூறுகிறார். சில இடங்களில் இரண்டு தலைவர்களை ஒப்பிட்டும் கூறியிருக்கிறார்.

பட்டது. அதன் பின்னர் அதைப் போதித்தவர் மகா புருஷ ராகிவிட்டார்; அவருடைய போதனை எட்டளவில் நின்றது. அதுபோலவேதான் காந்திஜியின் போதனை நம்முடைய விடுதலைக்கு அவசியமாயிருந்த அளவுக்கு அனுஷ்டிக்கப்பட்டது; புதிதாக உருவாகிவரும் இந்திய முதலாளித்துவ சமூகத்துக்கு ஏற்ற வகையில் முதலாளி தொழிலாளி உழைப்பாளி — நிலச்சுவான்தார் தகராறைத் தணிப்பதற்கு உபயோகப்பட்டது. இந்த இரண்டாவது அம்சத்திற்குக் கூட அவ்வளவு பயன் படவில்லை. அதற்குப் புதியமுறைகள் ஏற்பட்டு வருகின்றன. ஆனால், காந்திஜியின் அளவு கடந்த பொதுஜன செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அவரைப் போற்றுவது ஓரளவுக்குப் பயன்பட்டு வருகின்றது.

காயிதே ஆஜம் ஜின்னாவுக்கு இந்த அளவுக்கு விரிவான செல்வாக்கு ஏற்பட்டதென்று கூற முடியாது. காந்திஜிக்கு ஏற்பட்ட செல்வாக்கு இந்து முஸ்லிம் ஆகிய இரு ஜாதியினிடையிலும் பரவி இருந்தது. 1948 ஜனவரி மாதத்தில உண்ணாவிரதம் மேற்கொண்ட பொழுது டில்லியிலிருந்த முஸ்லிம்களின் மசூதிகளை அவர்களுக்குத் தந்து, அவர்களுக்கு நம்பிக்கை யூட்டவேண்டுமென்பதை காந்திஜி ஒரு நிபந்தனையாக்கினார்; அதில் வெற்றி பெற்றார். நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் அதன் பின்னர் தன்னம்பிக்கையுடன் டில்லியில் நடமாட ஆரம்பித்தனர். அவர்களிடையே ஓரளவுக்கேனும் காந்திஜிக்கு செல்வாக்கு ஏற்பட்டது என்பதை மறுக்க முடியாது. இந்த வகையில் ஜின்னாவுக்கு இந்துக்களிடம் எவ்விதத்திலும் அன்பார்ந்த செல்வாக்கு ஏற்படவில்லை. ஜின்னாவின் சாதுரியத்தையும் வாதத்தையும் மெச்சும் இந்துவும்கூட, அவர்பால் அன்பு கொள்வதற்கு இடமளிக்கவில்லை; இதற்குக் காரணம் அவருடைய அரசியல் போதனையே. காந்திஜியின் சொல்லில் அன்பு ததும்பியது. ஜின்னாவின் சொல்லில் வெறுப்புத் தீ ஜொலித்தது.

எனினும் ஜின்னாவுக்கு முஸ்லிம்களிடம் ஏற்பட்ட செல்வாக்கு அபரிமிதமானது. தேசிய காங்கிரஸைப் பின்பற்றிய முஸ்லிம்கள் சிலர் இருந்தனர்; மற்றய முஸ்லிம்களில் சிலர் காந்திஜியின் சேவையைப் பாராட்டினர். ஆனால் ஜின்னா என்றால் இந்திய முஸ்லிம் சமூகம், மறு பேச்சுக் கூறுவதில்லை. பாகிஸ்தானம் ஏற்பட்ட பின்னர் இந்திய யூனியனிலிருந்த முஸ்லிம்கள் பலர், தங்களுக்கு அதனால் ஒரு லாபமும் கிடைக்கவில்லை என்று நினைத்த போதிலும், ஜின்னாவிடம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த நம்பிக்கை குறையவில்லை. பிரிட்டிஷாரை எதிர்த்து நிற்பதிலும், அவர்களுடன் திறம்பட வாதிப்பதிலும் காந்திஜிக்கு எவ்வளவு பெருமை ஏற்பட்டதோ அதே மாதிரியாக முஸ்லிம் ராஜ்ஜியத்திற்காகப் பாடுபடுவதிலும் வாதாடுவதிலும் மிகத்திறமை வாய்ந்த தந்திரசாலி என்பதனால் ஜின்னாவுக்கு அவ்வளவு செல்வாக்கு ஏற்பட்டது.

பெரிய மனிதர்களுக்கெல்லாம் பிடிவாதம் அதிகம். அது பிடிவாதமல்ல; ஒருவிதமான தன்னம்பிக்கை. அசையாத நம்பிக்கையினால்தான் அவர்கள் தங்களுடைய காரியத்தைச் சாதித்துக்

கொள்வதற்கு முடியும். இந்த குண விசேஷம் காந்திஜிக்கும் ஜின்னாவுக்கும் பொதுவானது. காந்திஜி ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்த காலத்தில் சாய்வு நாற்காலிகளில் ஓய்வெடுத்துக் கொண்ட 'அறிவாளிகள்' அதைப் பரிகசித்தனர்; 'இது பைத்தியக்காரத்தனம்' என்று கூறினர். ஆனால் கோடிக்கணக்கான மக்களைத் தட்டி எழுப்பும் அரசியல் தந்திரம் அது என்பதை நாம் கண்டோம். அதுபோலவே 'பாகிஸ்தான்' என்பது கவி இக்பாலின் கனவாக இருந்தது. அவர் அதைப் பற்றிப் பாடினார். பிரிட்டிஷ் ஆட்சியையே ஆட்டி வைத்த காங்கிரசிற்கு எதிராக நிற்பது போன்ற ஒரு இயக்கம் எப்படி வெற்றி பெறுவதற்கு முடியும் என்று சிலர் எண்ணினர். கவியின் கனவை நினைவாக்கும் திடசித்தம் ஜின்னாவிடம் காணப்பட்டது. முஸ்லிம் பாமரர்களையும் இந்த எண்ணம் கவர்ச்சி செய்யும் என்ற உண்மையை உணர்ந்தார். இருவரும் மக்களின் 'சுதந்திர' உணர்ச்சியைத் தட்டி எழுப்பினர்.

தாங்கள் 'நியாயம்' என்று கருதும் விஷயத்துக்காக எவ்வளவோ துணிச்சலுடன் ஒரு காரியத்தில் இறங்குவதில் காந்திஜியும் ஜின்னாவும் ஒரே மாதிரி. அபாயகரமான தேகநிலையிலும் காந்திஜி உண்ணா விரதங்கள் சிலவற்றை மேற்கொண்டார். வேறு வழியில் தம்முடைய காரியத்தை அடைவதற்கு முடியாததால் அவர் உண்ணாவிரதம் இருந்தார் என்றாலும் அதற்கும் ஒரு தைரியம் வேண்டும். தன்னைத்தானே வேதனைக்குள்ளாக்கிக்கொண்டு பிறரை மாற்ற முயலும் முறை அது.

உண்ணாவிரதம் மட்டுமல்ல. சில சமயங்களில் மிக அபாயகரமான காரியத்தைச் செய்வதற்கு தாமே முன்வருவதும் காந்திஜியின் இயல்பு. 1947 ஆகஸ்டு 15-க்குப் பின்னர் நாட்டிலேற்பட்ட வகுப்புக் கலவரம் பயங்கரமானது. அதன் கோரத்தனம், அதில் ஏற்பட்ட வெறுப்புத் தணல் பெரிய பெரிய அரசியல் தலைவர்களையும் பிரித்தது. ஒரு சமயத்தில் காங்கிரஸ் தலைவர்களுக்குள்ளேயே வகுப்புவாதம் காணப்பட்டது. அந்த அளவுக்கு வகுப்புவாத விஷம் ஏறிவிட்டது. வகுப்பு வெறியை வெல்லும் வழி, பழிக்குப் பழி வாங்குவதல்ல என்று காந்திஜி தான் உறுதியுடன் கூறினார். அஞ்சா நெஞ்சத்துடன் சற்றும் மனக்கலக்கமின்றி கொந்தளிப்பு நிறைந்த வங்கத்தில் வகுப்பு ஒற்றுமைக்காகப் பிரசாரம் செய்யச் சென்றார். "காந்திஜி போன்ற பெரிய தலைவர்கள் போகலாம், சாதாரண ஆள் போனால் குளோஸ்தான்" என்று திண்ணை வேதாந்திகள் கூறலாம். காந்திஜி போன்றவர்கள் 'பெரிய தலைவர்கள்' ஆனதற்குக் காரணம் இதுதான் என்பதை அவர்கள் அறியவில்லை.

லஞ்ச ஊழலை ஒழிப்பதில் ஜின்னா அசையாத உறுதிகொண்டவர். புதிதாகப் பிறந்த பாகிஸ்தானில் சிந்து மந்திரி குர்ரோவைக் கைது செய்து, அவர் மீது வழக்குத் தொடர்ந்ததற்கு முக்கிய காரணம் ஜின்னா என்று கூறப்படுகின்றது. மற்றவர்கள் அவ்வளவு துணியமாட்டார்கள். எத்தனை பெரிய பேர்வழியாயிருந்தாலும் லஞ்சப்பேயாயிருந்தால் அவனைத் தொலைக்க வேண்டும் என்ற உறுதி ஜின்னாவிடம் காணப்பட்டது.

இத் தலைவர்களுடைய வாழ்விலே சதாரண மக்கள் வியக்கத்தக்க முரண்பாடுகளைக் காணலாம். ஜின்னு, முஸ்லிம் மக்களுடைய சுதந்திரம் என்று பேசியபோதிலும் பழக்க வழக்கங்களில் சர்வாதிகார முறையில் நடந்து வந்தார். பொது மக்கள் வாழ்க்கையை உயர்த்த வேண்டும் என்று பேசியபோதிலும் அவருடைய வாழ்க்கையில் பொது மக்களிடையே சகஜமாகப் பழகும் வழக்கம் கிடையாது. தனிமையாக வாழும் பழக்கமுடையவர். அவருடைய பேச்சு வார்த்தை ஆடம்பரமாயிருந்த போதிலும், வாழ்க்கை சாதாரணமானது என்று கூறப்படுகின்றது. ஆங்கில உடை உடுப்பதில் இந்தியாவிலே முதன்மையானவர் என்று கூறப்படுகின்றது. அவர் மணந்தது ஒரு பார்ஸிப் பெண்ணை; ஆனுல் அவருடைய மகள் ஒரு பார்ஸியை மணந்ததை அவர் அனுமதிக்கவில்லை. 1916-ல் கூட்டுத் தொகுதி வேண்டுமென்றவர் 1934-ல் தனித் தொகுதி மட்டுமல்ல, தனி ராஜ்ஜியமே வேண்டுமென்ருர்!

முதல் உலகயுத்தத்தில் பிரிட்டனுக்கு உதவி அளிக்க வேண்டும் என்று பிரசாரம் செய்தார் மகாத்மா காந்தி. ஆனுல் 1942-ல் பிரிட்டன் மிகப் பெரிய நெருக்கடிக்கு ஆளாயிருந்த காலத்தில், உலகசுதநதிரத்தையே ஹிட்லர் விழுங்கிவிடக் கூடிய நிலையில் இருந்தபோது, யுத்த முயற்சிக்கு எதிராக இயகததை ஆரமபித்தார் காந்திஜி. ஏழை எளியவர்களை உயர்த்த வேண்டும என்று கூறி, ஜமீன்தார்களையும், முதலாளிகளையும்ஏழைகளின் டிரஸ்டிகள் என்றும் காந்திஜி கூறினுர். தீண்டாமை ஒழியவேண்டும் என்பதுடன் வர்ணுஸ்ரம தர்மத்தைக் காக்கவேண்டும் என்றும் கூறினுர்.

ஜின்னு மிகச் சாதுரியமான வக்கீல். எந்த நிலையிலும் தம்முடைய கட்சிக்குச் சாதகமான அம்சங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் நிபுணர். 1944-ல் நடந்த காந்தி-ஜின்னு சம்பாஷணைகளிலும், மந்திரி சபைத் தூது கோஷ்டியார் பிரகடனத்திலும் அவர் அனுஷ்டித்த வாதம் பலருக்கு வீண் வாதம் என்றே தோன்றும். எனினும் அவருடைய கேள்விகளுக்கும், ஆக்ஷேபணைகளுக்கும் சரியான சமாதானம் கூறுவதற்கு முடியவில்லை. காந்திஜியும் பேச்சு வார்த்தை நடத்தி, பேரம் பேசுவதில் பக்காப் பேர்வழிதான். காந்தி-இர்வின் ஒப்பந்தத்தில் அதைக் கண்டோம். ஜின்னுவின் வாதம் பலருக்குப் பிடிக்காத முறையில், காரசாரமாயிருக்கும். காந்திஜியின் வாதம் யாருக்கும் வெறுப்பை ஏற்படுத்தாது. பிரிட்டிஷார் தமக்கு மிகவும் வேண்டியவர்கள் என்று கூறிக்கொண்டு காந்திஜி பிரிட்டிஷ் ஆட்சியின் மீது போர் தொடுத்தார். காங்கிரஸ் எமது பரம விரோதி என்று வெறுப்புத்தட்டும் வாக்கியங்களுடன் ஜின்னு தம் இயக்கத்தை நடத்தினுர். பிரிட்டிஷாரை எதிர்த்துப் பல போராட்டங்களை நடத்திய காந்திஜி, சமாதானத்தை விரும்பும் மனிதர் என்று பெயரெடுத்தார். முஸ்லிம் ராஜ்ஜியத்திற்காகப்பாடுபட்ட ஜின்னு வகுப்புவாதி எனப் பெயரெடுத்தார்.

காந்திஜியோ, ஜின்னுவோ பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அடியோடு ஒழிக்கவில்லை. ஆனுல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நினைத்தபடி நடப்பதற்கு முடியா

மல் செய்துவிட்டனர்; இந்த நாட்டிலேயே ஆளும் வர்க்கம் என்று ஒன்று ஏற்படுவதற்கு உதவினர். காந்திஜியின் சகோதரத்துவ அன்பு தத்துவத்தினுல் வெள்ளைக்கார முதலாளிகளுக்கும், இந்திய ஆளும் வர்க்கத்துக்கும் சௌஜன்யமான கூட்டுறவு ஏற்பட்டு வருகின்றது. ஜின்னுவின் வெறுப்புப் பிரசாரத்தினுல் இரு பகுதிகளிலுமுள்ள ஜனங்களைப் பரஸ்பர விரோதிகளாகத் திரட்டும் ஆபத்து ஏற்பட்டது.

இருபதாம் நூற்ருண்டில் முக்கியமான தத்துவம் சமூக அமைப்பைப் பற்றியது. காந்திஜியோ, ஜின்னுவோ புதுவிதமான சமூக அமைப்புக்கு அடிகோலியதாகக் கூறமுடியாது. காந்திஜி கிராமப் புனருத்தாரணம், அடிப்படைக் கல்வி, சர்க்கா என்பவற்றைப் பற்றிப் பேசி இருக்கிருர். நிர்மாணத் திட்டம் என்ற திட்டம் ஒன்றைச் சில காங்கிரஸ்வாதிகள் பிரசாரம் செய்துள்ளனர். ஆனுல் ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசத்தை ஒழிக்கும் எவ்வித சமூக அமைப்புக்கும் காந்திஜி அஸ்திவாரம் நாட்டவில்லை. ஜின்னுவின் கனவெல்லாம் பாகிஸ்தான் ராஜ்ஜியம் ஏற்படுத்த வேண்டுமென்பதைத் தவிர நியாயமான சமூகத்தைச் சிருஷ்டிப்பதல்ல. பாகிஸ்தான் அதிகத் தொழில் வளர்ச்சி அடையாத பிரதேசம். நிலச்சுவான்கள் நிறைந்த இடம். இத்தகைய நிலச்சுவான்கள் ஆட்சி புரியும் சமூகத்தைப் பாகிஸ்தான் ஏற்படுத்தியுள்ளது. ஆதலினுல்தான் பாகிஸ்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எதிரியாக மலரவில்லை.

*

வாழ்க்கைப் பிரயாணத்தில்...

இங்கிலாந்தில் செஸ்டர் மாதா கோவிலில் ஒரு கடிகாரமூடியில் கீழே காணும் விஷயம் பாட்டாக எழுதப்பட்டிருந்தது:

நான் குழந்தையாக சிரித்துகொண்டும் அழுதுகொண்டும் இருந்த காலத்தில், காலம் நகர்ந்தது. நான் வாலிபனுகக் கனவு கண்டு கொண்டும் உரையாடிக் கொண்டும் இருந்த காலத்தில், காலம் நடந்தது.

நான் முழு மனிதனுக வளர்ந்துவிட்டபோது, காலம் ஓடியது.

பிறகு நான் கிழவனுக மாறிக்கொண்டிருந்தபோது காலம் பறந்தது.

இந்தப் பிரயாணத்தில் முன்னேறிப் போகும்போது, சீக்கிரத்திலேயே காலம் போய்விட்டது என்பதைக் கண்டுகொள்வேன்.

கிறிஸ்து நாதர் அப்போது என்னைக் காப்பாற்றுவாரா? ஆமென்.

—கிறிஸ்டியன் ஹெரால்டு

முதல் வேலை

விஞ்ஞானி: நான் ஒரு யந்திர மனிதனைக் கண்டுபிடித்திருக்கிறேன். இப்போது நான் எது செய்தால் நல்லது?

நண்பர்: முதலில் அவனுக்காக ஒரு வீட்டுக்கு மனுப்போட்டு வைத்துவிடும்.

—ஈ. ஈ. நியூஸ்

காந்திஜியும் ரசமான நிகழ்ச்சிகளும்

'ஸீயார்'

அந்தக் கிழவி ?

காந்திஜிக்கு ஒருவர் தேங்காய்ச் சிரட்டை (கொட்டாங்கச்சி) யால்செய்த மோதிரமொன்றைப் பரிசாகக் கொண்டுவந்து கொடுத்தார். அதை ஏலம் போடுவதற்கு முன் இன்னொருவர் ஒரு தங்க மோதிரத்தைக் கொண்டுவந்து காந்திஜிக்குக் கொடுத்தார். அந்த மோதிரத்தைக் குறும்புப்பார்வையுடன் பார்த்துவிட்டு, "நான் இதைப் போட்டுக்கொள்ள முடியாது. போட்டுக்கொண்டால், இன்னொருதரம் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமே! அப்போது, எரவாடா சிறையிலிருக்கிறாளே அந்தக் கிழவி, அவளுக்கு என்ன பதில் சொல்வது?" என்றார் காந்திஜி.

அந்தக் கிழவி யார் தெரியுமா? கஸ்தூரிபாய்!

ரூ. 1000!

இத்தனை நாளும் நம் கை ரேகையைப் பார்ப்பதற்கு நாம் தானே சாஸ்திரிக்குப் பணம் கொடுத்திருக்கிறோம். ஆனால் காந்திஜியோ...

அமராவதிப்புதூரில் காந்திஜியைப் பார்ப்பதற்காக, ஒரே கூட்டம். கூட்டத்திலே ஒரு ரேகை சாஸ்திரி. அவருக்குக் காந்திஜியின் ரேகைகளைப் பார்க்கவேண்டும் என்ற ஒரே ஆசை. இந்தச் செய்தி காந்திஜிக்கு எட்டியதும், "என் ரேகையைக் காட்ட வேண்டுமானால் ரூபாய் ஆயிரம் வந்தாக வேண்டும்" என்றார்.

"அவருடைய ரேகையைப் பார்க்க எனக்கு உரிமையில்லையா?" என்றார் சாஸ்திரி.

"பார்க்கலாம், ஆயிர ரூபாய் கொடுத்தால் பார்க்கலாம்."

"அதெல்லாம் முடியாது. எப்படியாவது காந்திஜியின் கையைப் பார்க்கவேண்டும். அத்தனை பைத்தியமாய் இருக்கிறது."

"அப்படியானால் பைத்தியம் தெளிய ஆயிர ரூபாய்தான் மருந்து!" என்று காந்திஜியிடமிருந்து பதில் வந்தது!

உண்மையான அணிகலன்

மலையாளப் பிரதேசத்தில் காந்திஜி சென்றிருந்தபோது கௌமுதி என்ற யுவதி ஒருத்தி காந்திஜிக்கு, தன்னுடைய எல்லா நகைகளையும் ஒவ்வொன்றாய்க் கழற்றிக் கொடுத்தாள். "உன்னுடைய பெற்றோரிடம் இதற்கு அனுமதி பெற்றுக்கொண்டாயா?" என்று காந்திஜி கேட்டார். அவள் பதிலே கூறாமல், நகைகளை மட்டும் கழற்றிக் கொடுத்தாள். "கௌமுதி! நீ இந்த நகைகளை மறுபடி போட்டுக்கொள்ளவே கூடாது" என்றார். அவள் ஒப்புக்கொண்டாள். கடைசியாக அவள் காந்திஜியிடம் கையெழுத்துக் கேட்டாள்.

மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் நடைபெற்ற சில ருசிகரமான நிகழ்ச்சிகளை இங்கே காண்கிறோம். முக்கியமாக, காந்திஜி தமிழகத்தில் இருந்தபோது நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அறிவதில் நமக்கு ஒரு சந்தோஷம். ஒரு நிகழ்ச்சி தமாஷாகவும், ஒன்று புரட்சியாகவும், மற்றொன்று ஞானோபதேசமாகவும் இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரசமாக இருக்கிறது.

காந்திஜி அவள் கொடுத்த நோட்டுப் புத்தகத்தில், "நீ இப்பொழுது கழற்றிவிட்ட நகைகளை விட, உன்னுடைய தியாகம்தான் மிகவும் உயர்ந்த அணிகலன்" என்று எழுதிக் கொடுத்தார்!

கௌரவத்தின் விலை?

லூயி பிஷர் என்ற அமெரிக்க அரசியல் எழுத்தாளர் காந்திஜியுடன் தங்கி யிருந்தபோது, காந்திஜியுடன் தானும் நின்று ஒரு புகைப்படம் எடுக்க ஆசை கொண்டார்.

ஆகவே, "என்னுடன் ஒரு புகைப் படத்தில் நிற்க ஒப்புக் கொள்கிறீர்களா?" என்று பிஷர் கேட்டார்.

"படமெடுப்பவர் தற்செயலாக இங்கு வந்தாரானால் உங்களுடன் படத்தில் காணப்படுவதில் எனக்கு ஆக்ஷேபணை இல்லை" என்றார் காந்திஜி.

"இது நீங்கள் எனக்கு அளிக்கும் பெரும் கௌரவம்" என்றார் பிஷர்.

"நீங்கள் கௌரவங்களில் பிரியப்படுகிறீர்களா?" எனக் கேட்டார் காந்திஜி.

"நாம் எல்லோருமே விரும்பவில்லையா?"

"ஆம். ஆனால் சில சமயங்களில் நாம் அவற்றுக்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது!" என்றார் காந்திஜி.

அஹிம்சை!

லூயி பிஷர் வார்தாவில் தங்கியிருக்கும் போது, அவருக்கும் சைவ உணவுதான். ஒரு நாள் சாப்பாட்டு வேளையில் காந்திஜி பிஷரைப் பார்த்து "உங்களுக்குக் காய்கறிகள் பிடிக்காதா என்ன?" என்றார்.

"இந்தக் காய்கறிகளின் ருசி எனக்குப் பிடிக்கவில்லை" என்றார் பிஷர்.

"அப்படியா? நீங்கள் எலுமிச்சம் பழத்தையும் உப்பையும் அதிகம் சேர்க்க வேண்டும்."

"இருக்கும் ருசியையும் கொல்லவா?"

"இல்லை, ருசியை அருமையாக்குவதற்காக!"

"ஓஹோ! நீங்கள் அஹிம்சாவாதி! ருசியைக்கூடக் கொல்லமாட்டீர்களே!"

"மனிதர்கள் இந்த ஒன்றைத்தான் கொல்வார்கள் என்றால் நான் பொருட் படுத்தமாட்டேனே" என்று பதிலளித்தார் காந்திஜி.

ஒத்துழைப்பும் ஒத்துழையாமையும்

"ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார் பிஷர்.

"கிராமங்களில் விவசாயிகள் வரி செலுத்தமாட்டார்கள். உத்தியோக முறையில் தடை இருப்பினும் அவர்கள் உப்பு காய்ச்சுவார்கள். இது ஓர் அற்பமான விஷயமாகத் தோற்றலாம். உப்பு வரி பிரிட்டிஷ் சர்க்காருக்கு மிகச் சிறிய வருவாயாக இருக்கலாம். எனினும் அதைச் செலுத்த மறுப்பது, சுதந்திரச் செய்கையில் ஈடுபடத் தகுதி பெறுவது என்றே அர்த்தம். அதற்கடுத்தபடி நிலங்களைக் கைப்பற்றுவதுதான்" என்றார் காந்திஜி.

"பலாத்காரமாகவா?"

"பலாத்காரம் ஏற்படலாம். ஆனால் நிலச்சுவான்தார்களும் ஒத்துழைப்பார்கள்."

"நீங்கள், வரும் காலத்தில் நம்பிக்கையுடையவர்கள்" என்றார் பிஷர்.

"ஆம்—நிலச் சுவான்தார்கள் தப்பித்துக்கொண்டு ஓடுவதன்

மூலம் ஒத்துழைப்பார்கள்'' என்று புரட்சிகரமாகப் பதிலளித்தார் காந்தி.

காந்திஜியும் கடிகாரமும்

காந்திஜி எதிலும் காலம் தவற மாட்டார். கடிகாரமும் அவரும் அது விஷயத்தில் ஒன்றுதான். காந்திஜி தமிழ் நாட்டுக்கு வந்திருந்தபோது, அண்ணாமலைச் சர்வகலாசாலையில் ஒரு பிரசங்கத்துக்கு ஒப்புக் கொண்டிருந்தார். டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனுடன் அவர் பிரசங்கத்துக்காகப் புறப்பட்டுச் சென்றபோது, வழியில் ஜனக்கூட்டம் அவர்களை வழிமறித்தது. ஒரு சமபந்திப் போஜனம் ஏற்பாடு செய்திருப்பதாகவும், அதற்கு விஜயம் செய்ய வேண்டுமென்றும் ஜனங்கள் அவரைக் கேட்டுக்கொண்டனர். பிரசங்கத்துக்கோ பத்து நிமிஷ நேரந்தான் இருந்தது. ஆகவே காந்திஜி மறுத்தார். ஆனல் கூட்டம் வழி மறித்தது. எப்படியோ தப்பித்துக்கொண்டு கூட்டத்துக்குப் போய்ச் சேர்ந்தார். ஆனல் அப்படியும் ஒரு நிமிஷம் பிந்திச் சென்றுவிட்டார்.

மேடையேறியதும் அவருடைய முதல் வார்த்தை அந்த ஒரு நிமிஷத் தாமதத்துக்கும் மன்னிப்புக் கோரியது தான்!

ஓர் உபதேசம்

இது டில்லி நிகழ்ச்சி...

குழந்தை சாகக் கிடக்கிறது; பெற்றோர்கள் காந்திஜியின் காலைக் கழுவிய ஜலத்தைக் கொடுத்தால் குழந்தை பிழைத்துக் கொள்ளும் என்று நம்பினார்கள். ஆகவே, அவர்கள் உண்ணாவிரதம் இருக்கும் காந்திஜியைப் பார்க்க நினைத்தார்கள். ஆனல், காந்திஜியைப் பார்க்க அனுமதி கிடைக்கவில்லை. கடைசியில் ஒருமட்டும் அவர்கள் 'சத்யாக்கிரஹம்' வெற்றி பெற்றது. காந்திஜி விஷயத்தை உணர்ந்து அவர்களைக் கூப்பிட்டு அனுப்பினார். வந்தவர்களிடம், ''கடவுளிடம் உங்களுக்கு நம்பிக்கை உண்டா? அப்படியானல் உங்கள் நம்பிக்கையை கேவலம் ஒரு மனிதனிடம் செலுத்துவதால், தெய்வ நிந்தனை செய்வதில்லையா? பாதங்களைக் கழுவிய அழுக்குப் படிந்த தண்ணீரை மருந்தாக உபயோகிக்க அனுமதித்தால், அனுமதிக்கும் எனக்கும் உங்களுக்கும் அவமானமில்லையா? சுகாதார விஷயமான இந்தச் சிறு உண்மையை நீங்கள் ஏன் உணரவில்லை?'' என்று அறிவுறுத்தினார் காந்திஜி.

அவர்கள் ஞானோதயம் பெற்றுத் திரும்பிச் சென்றனர்.

✲

'மர்தா உடல் சலித்தாள்!'

நூறு வருஷத்திற்கு முன்னால் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காத்லாந்து ஆகிய மூன்று தேசங்களின் ஜனத்தொகை 1 கோடி 92 லட்சத்து 50 ஆயிரம். இப்போது லண்டன் நகரத்தில் மட்டும் இந்த ஜனத்தொகையில் பாதி இருக்கிறது; தேசத்தின் ஜனத்தொகையில் இப்போது 3 கோடி அதிகரித்துவிட்டது.

—கிரிஸ்டியன் ஹெரால்டு

அவ்வளவு இலேசு

பிரிட்டனில் மிகவும் இலேசான கம்பளித் துணிசெய்யக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு கெஜ நீளமுள்ள இந்தத் துணி இரண்டு அவுன்ஸ் எடையே இருக்கிறது. ஆகவே ஒரு பெண்ணின் உடையை எல்லாம் தபால் கவரில் வைத்தே அனுப்பிவிடலாம்.

அவளுடைய பொக்கிஷம்

சூதக வியாதியினின்று விடுதலையளித்து, புத்திர பாக்கியத்திற்கு உதவிய அருண டானிக்கை தன் அருமைக் குழந்தையைப் போல் பொக்கிஷமாகவும், வரப்ரசாதமாகவும் கருதுகிருள்.

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

அருணா

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

பார்லிக்கஞ்சியை இம்முறையில் தயாரித்தால் நேரமும் சிரமமும் குறையும்

ஐந்தே நிமிஷத்தில் ருசியும் இனிமையும் மிகுந்த பார்லிக்கஞ்சி சாப்பிடலாம். இரண்டு டீஸ்பூன் நிறைய பியூரிடி பார்லியை எடுத்து சிறிது ஜலத்தில் பசையாகக்கரைத்து, பின் இரண்டு டம்ளர் ஜலம் விட்டு ஐந்தே நிமிஷங்களுக்கு கொதிக்கவைக்கவும். இது உபயோகிப்பதற்கு வெகு சிக்கனமானது. ஏனெனில் அரிசிப்பார்லியைப்போல் எட்டு மடங்கு அதிக புஷ்டியுள்ளது.

பியூரிடி பார்லி சுறுசுறுப்பூட்டும் சீதள பிரதேசங்களில் விளையும் புஷ்டி மிகுந்த தானியங்களை யரைத்து தயாரிக்கப்படுகிறது. நுண்ணிய பட்டினுல் சலிக்கப்பட்டு சுகாதார முறைப்படி தகர டப்பாக்களில் அடைத்து முத்திரையிடப்பட்டிருக்கிறது.

பியூரிடி பார்லி

APB1 2 Vm.

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், 20/1, சிட்லா ரோடு, கல்கத்தா

தென்னிந்தியாவிற்கு ஏஜெண்டுகள் :

பாரி அண்ட் கோ., லிமிடெட், தபால் பெட்டி நம்பர் 12, சென்னை.

காந்திஜி நூல்கள்

சத்திய சோதனை	ரூ.	6	0
மாணவருக்கு	ரூ.	5	0
பெண்களுக்கு	ரூ,	3	12
ஹிந்து முஸ்லிம் பிரசினை	ரூ.	6	0
சமஸ்தானப் பிரசினை	ரூ.	6	0
ஆரோக்கிய வழி	ரூ.	1	4
இந்திய சுயராஜ்யம்	ரூ.	1	0
சுயராஜ்யம் வேண்டாமா?	ரூ.	1	0
நான் மந்திரியானுல்	ரூ.	1	0
அணுகுண்டும் அஹிம்சையும்	ரூ.	1	4
காந்தி வழி 2	ரூ.	1	0
அனுசக்தி யோகம் (கீதை)	ரூ.	1	4
இல்லறமும் பிரமசரியமும்	ரூ.	1	0
உத்தம வாழ்க்கை	ரூ.	0	8
நமது மொழிப் பிரசினை	ரூ.	2	8
ஹிந்து தர்மம்	ரூ.	0	8
மஹா தியாகம்	ரூ.	0	12
காந்திமஹான் கதை கொத்தமங்கலம் சுப்பு பாடியது	ரூ.	5	0
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் திரு. வி. க.	ரூ.	5	0

(தபால் செலவு தனி)

சக்தி காரியாலயம்—சென்னை 14.

இருபத்தி மூன்று

•

ரகுநாதன்

அப்போது மணி ஒன்பது.

திருச்சி எக்ஸ்பிரஸ் பத்தரைக்கா? பத்து முப்பத்தைந்துக்கா? எனக்குச் சரியாகத் தெரியாது. உங்களுக்கும்தான் தெரியப் போகிறதா? இந்திய ராஜிய நமக்குத்தான் ஐந்து நிமிஷம் ஒரு பெரிய விஷயம் இல்லையே! இருந்தாலும் ரயில் கெடிக்கு கொஞ்ச நேரங் காலத்திலேயே சென்று காத்துக்கிடந்தாலும் கிடப்போமே ஒழிய, சரியான நேரம் இன்னது என்று நிர்ணயித்துச் செல்வது நம் அகராதியிலேயே கிடையாதே.

அன்று எங்கள் நண்பர் ஒருவரை வழியனுப்ப வேண்டியிருந்தது. திருச்சி எக்ஸ்பிரஸில் சென்றால் கொஞ்சம் இடிபடாமல் போகலாம் என்பது அவர் நம்பிக்கை. திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் எட்டு மணிக்கே கிளம்புவதால், கூட்டம் எல்லாம் அதிலேயே போய்விடும்; அதன் காரணமாக, திருச்சி எக்ஸ்பிரஸ் வண்டிகள் அத்தனையும் காலியாகவே நின்று எங்கள் நண்பர் ஒருவர் வரவை மட்டுமே எதிர்பார்த்து நிற்கும் என்ற அளவுக்கு நாங்கள் ஞானசூன்யப் பிரம்மங்களாயில்லாவிட்டாலும், உட்காரவாவது இடம் கிடைக்குமே என்று நம்பினோம். ஆனால், நம்மை மாதிரியே எல்லோரும் அப்படி நினைத்துவிட்டால், திருச்சி எக்ஸ்பிரஸே திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் மாதிரி ஆகிவிடுமே என்று எண்ணவில்லை. எதற்கும் நாங்கள் சீக்கிரமாகவே கிளம்பினோம்.

நாங்கள் என்று சொன்னேன்? ஆமாம். ஊருக்குப் போக வேண்டியவர் ஒரே ஒருத்தர்தான். மீதியுள்ள ஐந்துபேரும் அவரை வழியனுப்பக் கிளம்பியவர்கள். நண்பர்கள் முத்தையா, ஷெரீப் இத்தியாதி திருத்தொண்டர் கூட்டம். வழியனுப்ப வேண்டிய நபர் ஊருக்கும் புதிசல்ல; கொட்டு மேளத்துடன் பூமாலை போட்டு அனுப்பி வைக்க வேண்டிய அளவுக்கு கவர்னர் ஜெனரல் பதவி வகிப்பவருமல்ல. அவரும் எங்களில் ஒருவர்தான். சாதாரண மூன்றும் வகுப்பு டிக்கெட் ஆசாமிதான். இருந்தாலும் நாங்கள் 'சொதை'யாகச் சென்று வழியனுப்ப நினைத்தோம். ராத்திரி ஒன்பது மணிக்கு தூக்கம் வராவிட்டால், மாலைக் கடற்கரையின் உப்புக் காற்று அனலை அள்ளிச் சொரிந்துவிட்டால், என் போன்றவர்கள் என்ன பண்ணுவது? மனசும் உடலும் புழுங்கிக் கொண்டிருந்தன. மேலும் புதிதாகக் கலியாணத்தைப் பண்ணிவிட்டு, மனைவியைச் சென்னைக்கு அழைத்துக் கொள்வதற்கு இந்த எழவுச் சூன்ய மாசம் எப்போதடா தொலையும் என்று நாட்களை எண்ணும் என் போன்றவர்களுக்கு வீட்டு மொட்டை மாடியில் இருந்து கொண்டு, சந்திரோபாலம்பனம் பாடுவதைவிட, எழும்பூர் ரயிலடிக் கசமுசக் கூட்டத்தில் சிறிது நேரம் சுற்றி

சின்னஞ்சிறு சம்பலம்தான்; எனினும் மனிதஉள்ளத்தில் அது எத்தனை விதமான கோலங்களைத் தீட்டி விடுகிறது! இது மாதிரி நீங்கள் என்றாவது அனுபவித்திருக்கிறீர்களா? பசி என்பதே ஒரு பிரபஞ்சம் தானா?......

யலைந்துவிட்டு வந்து படுப்பது ஒரு மார்க்கம்தானே! ஆகவே நானும் கிளம்பினேன். செம்மறி யாட்டுப் புத்தி நம் எல்லோருக்கும்தானே பொது! மற்றவர்களும் புறப்பட்டார்கள்.

நாங்கள் யாவரும் சாவகாசமாக நடை நடந்து மயிலாப்பூர் மாட வீதியை இடமாகச் சுற்றி வந்து, எழும்பூர் பஸ் ஸ்டாப்புக்கு வந்து சேர்ந்தோம். அதுதான் புறப்படும் இடமே ஆனதால், கூட்டம் அதிகம் இராது. ஆறு பேரும் உட்காருவதற்குத் தாராளமாய் இடம் கிடைக்கும் என எண்ணினோம். எனினும் அந்தச் சர்க்கார் பஸ்ஸின் சங்கப் பலகையில் ஒருவருக்குத்தான் இடம் கிடைத்தது. மீதமுள்ள ஐந்து பேருக்கும் நிற்கத்தான் இடம் கிடைத்தது. ஊசி நுழைய இடத்துக்குப் பஞ்சமில்லை; இந்தப் பஞ்ச பாண்டவர்களுக்குத் தகராறு இல்லாமலே இடம் கிடைத்துவிட்டது.

பஸ் நகருகிற பாட்டைக் காணோம். 'டயப்படி' தானே அது கிளம்பும்! பஸ்ஸுக்குள் பிரயாணிகள் எல்லோரும் புழுங்கித் தவித்துக்கொண்டிருந்தார்கள். மேலெல்லாம் ஒழுகும் வியர்வையைப் பார்த்தால் இன்னும் சிறிது நேரத்தில் பிரயாணிகளெல்லாம் கரியமல வாயுவாயும், தண்ணீராகவும் பிரிக்கப்பட்டு, அரூபிகள்—அதாவது பிசாசுகளாக — மாறிவிடுவார்களோ என்ற அபூதக் கற்பனை என் மனசில் தோன்றியது. ஆனால், சிறிது நேரத்தில் கண்டக்டர் எங்களையெல்லாம் பிசாசாக மாறிவிடாமல், விசில் கொடுத்தான்.

டிரைவர் கியரைத் தள்ளினான்; பஸ் கொரகொரத்து விட்டு முன் வாங்கியது.

கார் ஓட ஆரம்பித்து லஸ் முனை திரும்பியவுடன், எதிர் காற்று உடம்பில் குளுமை ஊட்டியது. பஸ்ஸினுள் வியர்வை நாற்றமும், கதம்ப மலர் மணமும் சேர்ந்து 'செஞ்சாந்தும் நறும் புலவும்' நாறும் பண்டைய யுத்த களச் சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

"ஸார், டிக்கெட்!"

நண்பர் முத்தையா முடிச்சை அவிழ்த்தார்.

காருக்குள்ளேதான் எத்தனை ரகமான பிரயாணிகள். புரசவாக்கத்திலிருந்து வந்த ஆசாமி நம்பர் இருபத்தி மூன்றைத் தவற விட்டுவிட்டால், நம்பர் பதினொன்றில் (11 என்பது கால் நடையின் குழூஉக்குறி) செல்ல நேர்ந்து விடக்கூடாதே என்று ஏறி உட்கார்ந்திருந்தார். அவர் பேசிக்கொண்டது அது. மேலும், வீட்டில் சமையல் செய்யத் தவறினாலும், கபாலி கோவிலுக்கு வரத் தவறாத — அதாவது கபாலி கோயிலைச் சுற்றியுள்ள கடை வீதிகளுக்கு வரத் தவறாத— மாதர் சிரோமணிகள் ரொம்ப அவசரமாய் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். ரயிலுக்கும் ரயிலடிக்கும் செல்லும் நபர்கள், அவர்களுடைய மூட்டை முடிச்சுகள் வேறு. ஒன்பதே முக்காலுக்குக் கிளம்பும் மெயின் லைன் பாஸெஞ்சருக்கானாலும், திருச்சி எக்ஸ்பிரசுக்கானாலும், அல்லது அதற்குப் பின் கிளம்பும் மதுரை பார்ஸல் பாஸஞ்சர் என்னும் நத்தைப் பிறவிக்கானாலும் — எதுவானாலென்ன்? எல்லோருக்கும் ஒரே சம விகிதமான பரபரப்பு.

பஸ் ஆழ்வார்பேட்டை ஸ்டாப்பில் நின்றது.

"ஆழ்வார்!" என்று கத்தினுன் கண்டக்டர்.

வண்டிக்குள்ளிருந்து ஆச்சியும் ஐயருமாக இரு ஐயங்கார் தம்பதிகள் இறங்கினர். அடபாவமே! ஆழ்வார்பேட்டைக்குச் செல்ல, நம்பர் 23 தானு கிடைத்தது? அதைப்பற்றி அவர்களுக்கென்ன கவலே? மூணு, நாலு, ஐந்து எல்லாம் இருந்தாலும், கிடைத்த பஸ்ஸில் ஏறுவது தான் சிலாக்கியம் என்பது அவர்கள் வாதமாயிருக்கலாம். "ஓடு மீன் ஓட, உறுமீன் வருமளவும் ......" என்று நாம் பாடம் ஒப்புவிக்கலாம். ஆனுல் ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா? ஓடுகின்ற மீனேடு உறுமீனும் ஓடிவிட்டால்—? இந்த அவசர யுகத்தில் எதைத்தான் நம்ப முடிகிறது?

ஆழ்வார்பேட்டைக்குச் செல்ல 23-ல் ஏறுவது தர்ம விரோதமாக இருக்கலாம்—ஆனுல், இந்த ரயில் நெருக்கடி நேரத்தில், எங்களின் ஒரு நண்பரை வழியனுப்பி வைக்க நாங்கள் ஐந்து பேரும் கூண்டோடு கிளம்பிச் செல்ல வேண்டியதில்லேயே. 'ஊரோடு ஒத்து வாழ்' என்று ஞானம் பிறந்தாலும் புத்தி பிறக்கவா செய்கிறது? ஞானம் என்பது வெறும் மின்னல; மின்னி விட்டு மறையக்கூடும். எனினும் மின்னிய மின்னலேப் படம் பிடித்து நிரந்தர ஒளி செய்ய புத்தி வேண்டாமா?

என்னுடைய எழுத்தாள மூளே இப்படித் தர்ம விசாரம் செய்து கொண்டிருக்கும் போது, ஷெரீபும், முத்தையாவும் அந்த ஐயங்கார் தம்பதிகள் ஆக்ரமித்திருந்த இடத்தில் அமர்ந்து கொண்டார்கள். என் கற்பனே என்னே மேலும் கால் கடுக்க வைத்து விட்டது.

புதுப்பேட்டை வந்தது. எனக்கும் இடம் கிடைத்தது, உட்கார்ந்தேன். ஆனுல் அதற்குள் இன்னும் ஒரு ஜோடி உள்ளே ஏறினர்கள். வந்தவர்களுக்கு இடம் கொடுப்பதற்காக நான் எழுந்திருந்தேன். இந்த எழவு பஸ்ஸில் பின் பக்கத்து ஸீட் எப்போதுமே அபாயகரமான ஸ்தானம். கைக் கெட்டியது வாய்க் கெட்டாமல் போய் விடக்கூடும். எனக்கும் அந்தக் கதிதான் கிடைத்தது.

பஸ்ஸில் பெண்மணிகள் என்ருல், ஆண் சிங்கங்கள் எழுந்து நின்று இடம் கொடுப்பதைப் பற்றி நீங்கள் என்ன நினேக்கிறீர்கள்? பெண்களுக்குச் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து கொடுக்க வேண்டியது ஆண்களின் தர்மம் என்கிறீர்களா? வாஸ்தவம். ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வதென்ருல், அவர்களும் நம்மோடு நின்று தானே ஆக வேண்டும்! சமயத்தில் ஆபீஸில் ஆறு மணிவரை உழைத்து அலுத்துச் சலித்து, கையில் ஒருகப் காப்பிக்குக்கூடக் காசு இல்லாமல் எங்கேயடா போய் விழுவோம் என்று நாமும் தான் பஸ்ஸில் ஏறித் தொலேக்கிரும். ஆனுல் 'சரிநிகர் சமானம் கோரும்' பெண்களுக்கு, கையில் அலங்காரமாக 'வானிட்டி பேக்' ஊசலாட, பீச்சுக் கரைக்கோ, வளேயல் கடைக்கோ உலாவக் கிளம்பும் நாரீமணிகளுக்கு நாம் அமர்ந்திருக்கும் இடத்தைத் தானம் வழங்கி விட்டு, மீண்டும் தோல் வாரில் தொங்கி கோதண்டம் போடும் நிலே ஏற்பட்டால் என்ன

னரிச்சல் வருகிறது? இதையெல்லாம் சொல்லப் போனால்—

இருந்தாலும் செக்கடி மாடு மாதிரி சம்பிரதாயமென்ற கொடித்தடத்தை விட்டு விலகாத நம்மவருக்கு இடத்தைப்பறி கொடுக்காமலிருக்க முடிகிறதா?

பஸ் ஓடிக்கொண்டிருந்தது.

அடுத்தது கதீட்ரல் ஸ்டாப். பஸ் நின்றது. இரண்டு மூன்று சினிமா எக்ஸ்ட்ராக்கள் ஏறின. ஒரே கலகலப்பு; விஞேலியா ரோஸ் பவுடருடன் வியர்வை நாற்றமும் கலந்த, மனசைக் குமட்டும் மணம்; பக்கத்தில் நாலு ஆண்கள் நிற்கிருர்களே என்ற கூச்சம்கூட இல்லாமல் ஒரே சிரிப்பு, பலுக்கு, எல்லாம் தான். 'இந்த இரு பிறவிக்கு இரு மாதரைச் சிந்தையாலும் தொட்டறியாத' ஆண் சிங்கங்கள் அந்தப் பெண்ணரசிகளைக் கண்டு உடலும் மனமும் ஒரு சாணகக் குறுகிக் கூசி நின்றனர்.

"கண்டக்டர்! மூணு எக்மோர்!" என்று ஆக்ஞை யிட்டாள் அந்த அல்லி அரசாணிகளில் ஒருத்தி.

கண்டக்டர் உதட்டுக் கோணத்தில் அசட்டுச் சிரிப்பு கோணிவதங்க, மூணு டிக்கட்டைக் கிழித்துக் கொடுத்து விட்டு, "என்னம்மா சௌக்கியமா? ஆளேயே காணமே!" என்று பரிதாபப் பட்டுக் கொண்டான்.

அந்த அல்லிராணி 'ஹி ஹி' என்று தனது 'செவ்வாம்பல் முல்லையையும் பாரிக்கும்' பல்வழகைக் காட்டியதும், கண்டக்டர் பின்பக்கம் திரும்பி, "ஸார் லேடிசுக்கு இடம் கொடுங்க, ஸார்!" என்று வேண்டிக் கொண்டான். அதைஎதிர்த்து உட்காரத்திராணியற்ற மனிதர்கள் எழுந்து நின்றனர். ஒருவர் மட்டும் எழுந்திருக்கவில்லே.

பெண்கள் மூவரும் இருவர் உட்காரும் அந்த இடத்தில் உட்கார்ந்தனர். கொஞ்சநேரத்தில் அந்த மூன்ருெம் மனுஷரும் அந்தப் பெண்களால் பிதுக்கித் தள்ளப்பட்டு எழுந்துநின்ருர். பெண்ணரசிகள் தாராளமாக அமர்ந்து கொண்டனர்.

நான் எல்லாவற்றையும்தான் கவனித்துக்கொண்டிருந்தேன். இந்த மாதிரிப் பெண்களுக்கு இடம் கொடுக்காவிட்டால்தான் என்ன? சம உரிமை சம உரிமை என்று சொல்லி நமது உரிமையில் கை வைக்கப் பார்த்தால்—? காரில் ஏறும்போதும் இந்தச் சங்கடங்கள் ஏற்படத்தான்செய்கிறது. நாம் அரை மணி நேரமாய்க் காத்துக்கொண்டிருந்தாலும், அவள் தான் ஒரு பெண் பிறவி என்ற ஒரே ஒரு சலுகையைக் கொண்டு அரை நிமிஷ நேரத்துக்கு முன்னே வந்தவளானலும் இடம் பிடித்து விடுகிருள். நியாயமில்லாத இடத்தில், என்ன சம உரிமை வாழ்கிறதாம்?

கதீட்ரல் கழிந்ததும் ஒரே 'ரைட்' தான். பஸ் விர்ரென்று பாய்ந்து சென்றது. எந்த ஸ்டாப்பிலும் நிற்கவில்லே. மேலும் பஸ் நிறைந்துவிட்டது; எனினும் ஓர் ஆள் அதிகம்தான்.

"மியூஸியம்!" என்று கத்தினன் கண்டக்டர்.

"காருக்குள்ளிருந்து "ஹோல்டான்" என்று கீச்சுக் குரல் எழுந்தது.

கார் நின்றது. காருக்குள் நின்ற சக்ர வியூகத்தைப் பிளந்தெறிந்து கொண்டு ஒரு ஆத்மா இறங்கிச் சென்றது.

மியூஸியம் ஸ்டாப்பில் இரண்டு பேர் நின்றுகொண் டிருந்தார்கள். ஓர் ஆண்; ஒரு பெண். கார் வந்து நின்றதும் அந்த ஆண் மகன் விறுட்டென்று உள்ளே ஏறி விட்டான்; அவனுக்குப் பின்னலிருந்த பெண்ணும் உடனேயே காருக்குள் தாவிவிட்டாள். அவள் ஓர் ஆங்கிலோ இந்தியப் பெண். வயசை நிச்சயமாகச் சொல்ல முடியாததற்கு அவளுடைய உதட்டுச் சாயமும்; பாண்ட்ஸ் பவுடரும், காருக்குள் சிவனற்று எரியும் விளக்குமே காரணம்.

இரண்டு பேரும் உள்ளே ஏறி விட்டனர்.

கண்டக்டர் அவர்களைத் திரும்பிப் பார்த்தான். பிறகு அந்த ஆணைப் பார்த்து "ஸார், இறங்கி விடுங்கள். பஸ்ஸில் இடமில்லை" என்றான்.

அவனே இறங்குவதாகக் காணும். "நான் தானப்பா முதலில் ஏறினேன்" என்று கூறினன்.

"அதெல்லாம் முடியாது ஸார். பஸ்ஸில் ஏற்கெனவே இடமில்லை. லேடீஸ் ஆச்சேயின்னு அந்த அம்மாளுக்கு மட்டும் இடம் கொடுத்தேன். இன்னெருத்திக்கு இடம் கிடையாது. பக்கத்திலே தான் போலீஸ் கமிஷனர் ஆபீஸ் இருக்கு. ஆப்பிட்டுக் கிட்டால் நான் பதில் சொல்ல முடியாது" என்று ஆரம்பித்தான் கண்டக்டர்.

"அதெல்லாம் முடியாது. பெண்பிள்ளைன்னு மட்டும் வேறே வழக்கா? நான் அவசரமாக ரயிலுக்குப் போயி ஆகணும். முதல்லே ஏறினவனுக்கு இடம் கொடு. அதுதான் நியாயம்!" என்றான்.

"முடியாது ஸார். இறங்குன்னு இறங்கிட வேண்டியதுதான்" என்றான் கண்டக்டர்.

"அப்படின்னு ரெண்டு பேரையும் இறக்கி விடு. ஓர் ஆள் ஓவர்லோடு போடலாமென்றால், இரண்டு ஆளும்தான் போடலாம்!" என்றான் அவன்.

"நான் உங்களிடம் சட்டம் பேசிக்கொண் டிருக்கத் தயாரில்லை. இறங்கு கீழே!" என்று ஏக வசனத்துக்கு இறங்கினன், கண்டக்டர்.

டிரைவரும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து மெஷினை நிறுத்திவிட்டான். இனி பஸ் எப்போது கிளம்பப் போகிறதோ என்று பிரயாணிகளுக்குக் கவலை.

தகராறு விளைந்து கொண்டே போயிற்று. கடைசியில் பிரயாணிகளும் தங்கள் தங்கள் கட்சிகளைப் பேச ஆரம்பித்து விட்டார்கள். ஓரே இரைச்சல்.

பெண்டாட்டித் துணையோடு வந்ததன் காரணமாகத் தனக்கும் இடம் ஸ்வீகரித்துக் கொண்ட புதுப்பேட்டை ஆசாமி, "அதென்ன ஸார். லேடீசுக்கு இடங் கொடுக்காமெ? நீங்க வேணுமின்னு அடுத்த பஸ்ஸிலே போங்களேன்—என் வீண் தகராறு? பின்னலேயே பஸ் வர்ரதே!" என்றார்.

இன்னெருத்தர் "அதென்ன ஸார், சட்டமின்னு சட்டம்தான். அவர்தானே முதல்லே ஏறினர்!" என்று குரலெடுத்தார்.

நாங்கள் அறுவரும் வாய் திறக்கவில்லை. இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டு நின்றோம்.

கடைசியில் கண்டக்டரின் கட்சிதான் வழக்கம் போல் ஜயித்

தது. அந்த நபர் இறக்கிவிடப் பட்டான். இறங்கும் போதும் அவன், "டேய்—உன்னை ஒரு கை பார்த்துவிடுகிறேன்!" என்று உறுமிக் கொண்டே இறங்கினன்.

"உன்னைப் போல ஆயிரம் பேரைப் பார்த்திருக்கேண்டா, போடா!" என்று ஏகத்தாளமாகப் பேசிவிட்டு, மறுபேச்சுக்கு இடமில்லாமல் ரைட் கொடுத்தான்.

கார் கிளம்பியது.

நான் ஜன்னல் வழியே பார்த்தேன். இறங்கிய அந்த மனிதன் உடனடியாக ஒரு ரிக்ஷாவைப் பிடித்துக் கொண்டு ஓடச் சொன்னன்—ஸ்டேஷனுக்குத்தான்!

நாங்களும் ஒரு மட்டும் எழும்பூர் வந்து சேர்ந்தோம். இறங்கிய வுடனேயே நான் பேச்சைத் தொடங்கினேன்.

"என்ன மூனு! காரில் நடந்தது ஞாபக மிருக்கா?"

"இதுதானய்யா உலகம்!" என்ருர் அவர்.

"பொண்ணுன்னு என்ன—கொம்பா மூளைச்சிருக்கு. அவனுக்கு என்ன அவசரமோ? அவன் உண்மையிலேயே ரயிலுக்குப் போகிறவனு யிருந்தால்—? அவளுக் கென்ன? விக்டோரியா ஹோட்டலுக்குப் போகிற அவசரம் தானே!" என்றேன்.

அதற்குள் நண்பர் ஷெரீப், "அதெல்லாமில்லை. அவன் ரயிலுக்குப் போகிறவனுகக் காணும். ரயிலுக்குப் போகிறவன் இப்படித் தகராறு பண்ண மாட்டான். அவன் அவளை எங்கே யிருந்தாவது 'விரட்டி' வருகிற ஆசாமியாகத்தான் இருப்பான். அந்தப் பெண் தன் வாயைத் திறந்தாளா?" என்று ஆரம்பித்தார்.

"இருக்கட்டும். விரட்டி வந்த ஆசாமி என்ருல், கை கடக்க விட்டு விட்டு, ரிக்ஷாவிலே ஏற வேண்டியதில்லையே. அவளுக்குத்தான் என்ன? இந்த ரயில் நெருக்கடியில் அடுத்த பஸ்ஸில் போனுல் தான் என்ன? அவளுக்கும் யாரைச் சந்திக்கிற அவசரம் கெட்டுப் போகிறது?"

"அதெல்லாமில்லை. அவன் பேச்சே அவனது குணத்தைக் காட்டவில்லையா?"

"அவன் ஆத்திரத்துக்கு அவன் பேசினுன்!"

"என்ன இருந்தாலும் பொம்பிளை என்ருல் தனி வழக்குத்தான் ஸார்" என்ருர் முத்தையா.

நாங்கள் ரயிலடிக்குள் நுழைந்தோம். எதிர்த்த காப்பி ஹோட்டலிலிருந்து "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்........." என்ற பாரதி பாடல் இசைத் தட்டு கிறுகிறு என்று சுழன்றது.

யாருக்கு விடுதலை—ஆணுக்கா, பெண்ணுக்கா? அந்தப் பாட்டு எனக்கு அர்த்தமற்றதாகப்பட்டது.

நண்பரை வழியனுப்பி விட்டு நாங்கள் நம்பர் பதினென்றில் (அதாவது கால் நடையில்) திரும்பினேம். எனினும் அந்த மியூஸியம் சம்பவத்தை என்னுல் மறக்க முடியவில்லை.

✲

உட்காரக் கூடாது: உட்கார்ந்து கொண்டிருந்தால் காலம் என்ற மணலில் அடிச்சுவடிகள் பதியாது.

—ஜாக் டின்ஸ்மோர்

காந்திஜியைப் பற்றி அறிஞர்கள்

●

ஜி. செல்லையா

ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்: (கணித விஞ்ஞான சாஸ்திரி)

வெளியிடத்திலிருந்து யாதொரு ஆதரவும் பெருமல் தம் மக்களுக்குத் தலைமை தாங்குகிறவர்; யந்திர ஞானமோ சூழ்ச்சித் திறனே இன்றி, தம் சுவானுபூதியை எடுத்துக்கூறி உள்ளத்தில் பதிய வைப்பதன் மூலம் வெற்றி பெறப் பாடுபடும் ஓர் அரசியல்வாதி; பலாத்கார சக்தியைப் பயன் படுத்துவதை எப்பொழுதுமே இகழ்ந்து வரும் ஓர் வெற்றிகரமான போராட்டக்காரர்; ஞானமும், எளிமையும் கொண்ட மனிதர்; நிச்சய தீர்க்கமான மன உறுதியுடன் தம் மக்கள் மேல்நிலை எய்துவதற்காகவும், அவர்களுடைய வாழ்க்கை சீர் பெறுவதற்காகவும் தம் சக்தியை எல்லாம் ஈடுபடுத்தி யிருப்பவர்; ஐரோப்பாவின் மிருகத்தனத்தை சாதாரண மனிதப் பிறப்பின் பெருமையுடன் எதிர்த்து நின்று, அதன்மூலம் எல்லாச் சமயங்களிலும், மேலும் மேலும் உயர்ந்த நிலையை அடைந்துவரும் ஒரு மனிதர்.

இப்படிப்பட்ட ஒருவர் இந்த மண்ணுலகில் சதையும் ரத்தமும் கொண்டு ஒருகாலத்தில் நடமாடினர் என்பதை இனி வரப் போகும் தலைமுறைகள் நம்புமா என்பது சந்தேகமே!

ஜி. டி. எச். கோல்: (பொருளாதார, அரசியல் நிபுணர்)

இந்தியாவில் மகாத்மா காந்தியின் தலைமையில் உள்ள ஒரு செல்வாக்குள்ள பெரிய கூட்டம் பூர்வீகமான கிராமப் பஞ்சாயத்து முறையின் அடிப்படையில் கட்டப்படும் தொழில் முறை தான் இந்தியாவுக்கு உகந்தது என்று வாதிக்கிறது. மேல் நாட்டு முறைப்படி ராக்ஷஸ உற்பத்தியில் இறங்காமல், உள்ளூர் சந்தையின் தேவைக்கு மட்டும் சிறு சிறு அளவில் கைத்தொழில் செய்யவேண்டும் என்பது அவர்கள் கொள்கை. காந்தி கதரை வற்புறுத்துகிறார்; கையால் நூற்பதையும், நெசவு போடுவதையும் வற்புறுத்துகிறார். இது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் இது, மேற்கத்திய செல்வாக்குகளை எதிர்த்து, உள்நாட்டு மரபுக்கேற்றவாறு சமூகத்தையும் பொருளாதாரத்தையும் அமைக்க விரும்பும் ஒரு பொதுவான வாழ்க்கைத் தத்துவத்தின் ஒரு பகுதி என்பதை இன்னும் யாரும் நன்கு உணரவில்லை...... கிராமக் கைத்தொழில்கள் எப்போது வளரும் தெரியுமா? அத்தொழில்களுக்கு வெளி நாட்டு பாக்டரிகளின் போட்டியோ, மேல்நாட்டு முறைப்படி நடக்கும் உள்நாட்டு பாக்டரிகளின் போட்டியோ இல்லாமல் செய்து பாதுகாப்பதின் மூலமும், நில

மகாத்மாவிற்கு, விஞ்ஞானி, ஓவியர், பிரேஸில் நாட்டுக் கவிஞர், முன்பின் தெரியாத ஒருவர்—இப்படிப் பலதிறப்பட்ட அறிஞர்களும் சூட்டிய புகழ்மலரின் மாலையே இந்தத் தொகுப்பு. சில காந்திஜியின் மறைவிற்கு முன்பும், சில மறைவுக்குப் பின்பும் சூட்டப்பட்டவை. கடைசியில் மகாத்மா தம்மைப் பற்றிக் கூறியதிலிருந்து சில பகுதிகளும் எடுத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன,

உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமும்தான் கிராமத் தொழில்கள் வளர முடியும். நில உற்பத்தி பெருகினல், கிராமத்தில் வாழும் ஏராளமான மக்களுக்கு உணவு கொடுக்க முடியும். ஆகவே ஏராளமான மூல தனத்தை நிலத்திலும், போக்குவரத்து சாதனங்களிலும் ஈடுபடுத்தவேண்டும். இதற்கு ஒரு பலம்பொருந்திய மத்திய அரசாங்கமும் வேண்டும். அப்படிப் பட்ட அரசாங்கம்தான் வெளிநாட்டு முதாளித்துவஆலைச் சொந்தக்காரர்களிட மிருந்தும், இந்திய முதலாளிகளிடமிருந்தும் கிராமத் தொழில்களைக் காப்பாற்ற முடியும்.

பாமி தத்: (பொதுவுடைமைவாதி)

நூற்ருண்டுக் காலமாய் சொப்பன உலகிலும், சமூக, மதவிஷயப் பிற்போக்குத் தன்மையிலும் கட்டுப்பட்டுக்கிடந்த மக்கள் சமுதாயம் விழிப்புற்று சமுதாய மாறுதலுக்காக முன்னேற முயலும் வேளையிலே, இந்திய தேசிய இயக்கம் இந்திய பூர்ஷுவாப் புரட்சிப் பாதையிலே பிரக்ஞையோடு சென்று கொண்டிருந்த வேளையிலே, காந்தி கால் நூற்ருண்டுக்கு மேலாகவே இந்திய சுதந்திர இயக்கத்தை நடத்திச் சென்ருர். தேசிய இயக்கத்தின் பூர்ஷுவாப் பாதைக்கும், விழிப்புற்றும் பூரணப் பிரக்ஞை பிறக்காத மக்களுக்கும் இடை விழுந்த இடைவெளியை காந்தியைத் தவிர வேறு எந்தத் தலைவனும் இணைத்திருக்க முடியாது...... "அஹிம்சை போதம்" செய்த தேவமகன் கடைசியில் கொலை வழியினல், துஷ்டர்களின் பலாத்காரத்தினல், கொல்லப்பட்டார். அவர் தம் நம்பிக்கைகளின் சத்தியத்தை நிலைநாட்டிச் செத்தார்; கருமவீரனகக் களத்திலே செத்தார். தேச பக்தனக, மனித குலத்தின் தியாக ரக்ஷகனக, அவரைப் பின் தொடர்பவர்களுக்கு உணர்ச்சியூட்டும் தன்மையிலே செத்துவிட்டார்......

அவருடைய வீரப் போராட்டக் காலத்திலே அவருக்குரிய நண்பர்கள் வலது சாரியில்லாமல், இடது சாரியிலேயே இருப்பதையும் கண்ணாரக் காண ஆரம்பித்தார். கல்கத்தாவிலும், டில்லியிலும் அவர் போராம்போது கம்யூனிஸ்டுகளுடன் நெருங்கிய தோழமை கொண்டிருந்தார். கடைசியாக காந்தியும், புரட்சிகரமான பாட்டாளி வர்க்கமும் ஜனநாயக உரிமைப் போராட்ட விஷயத்தில் ஒரே முகாமில் இருப்பதாக உணர்ந்தார்கள். கம்யூனிஸ்டுகள் அவரை ஆதரித்ததோடு இயக்கத்தையும் பலப் படுத்தினர்கள்.

ஆல்டௌஸ் ஹக்ஸ்லி: (நாவலாசிரியர்)

....ஆப்பிரிக்காவிலும், பிறகு இந்தியாவிலும் காந்தி ஆரம்பித்து நடத்திய அஹிம்சைப் புரட்சியை ஆங்கிலம் கற்ற உலகம் நன்கு அறியும். தென்னப்பிரிக்க இயக்கம் பரிபூரண வெற்றி அடைந்தது என்றே கூறலாம். இந்தியாவிலும் பல முக்கியமான வெற்றிகள் கிடைத்தன. மிருகத்தனமான அடக்குமுறைக்குப் பதிலளிக்கக் கூடியவாறு, ஆண் பெண் பாலாரின் பெருங்கூட்டங்களைத் தைரியத்தோடும் அமைதியோடும் திரட்டலாம் என்பது அப்போது தெரியவந்தது. இந்தப் பெருங்கூட்டத்தின் தைரியத்தையும் அமைதியையும் கண்டு அடக்கு முறைக்காரர்கள் ஸ்தம்பித்து விட்டார்கள்; பக்கத்தில் நின்று பார்த்தவர்கள் ஆச்சரியம்

பட்டார்கள். பத்திரிகைகள் மூலம், அகில உலகத்தின் பொது ஜன அபிப்பிராயமே வியப் படைந்தது.

சலபதி ராவ்: (பத்திரிகை ஆசிரியர்)

காந்தீயம் என்பது ஒழுக்க நியமம், அரசியல் ஆகியவற்றின் ஒரு பகுதியாகும். வாழ்க்கையின் ஒவ்வொரு செயல் முறைக்கும் அது மனிதப் பண்பை ஊட்டுகிறது. காந்திஜியின் தத்துவம் மனிதனுடைய பூர்வ பண்புகளை விழிப்புடையச் செய்யும் போதமாகும். தன்னை வருத்திக் கொள்ளும் அக்கினிப் பரீக்ஷையையும், சிலுவையில் மரித்ததுபோன்ற உயிர்த் தியாகத்தின் பெருமையையும் உள்ளடக்கிய தத்துவம் அது.

ஸெஸில்லா மெய்ரிலெஸ்: (கவிஞர்)

இங்கே, என் அந்தரங்கக் கனவினுடைய வர்ண மலர்களை உதறி எறிகிறேன்; மூலை முடுக்கெல்லாம் பத்திரிகைகள் காற்றிலே விரிகின்றன: "மக்களை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கும் போது கொலை செய்யப்பட்டார்" என்ற செய்தி வெளியாகிறது.

மாலை கேரக்காற்று இந்தியாவுக்கும் பிரேஸிலுக்கும் இடையே மாறி மாறி, போவதும் வருவதுமாக இருக்கிறது; அதற்கு அலுப்புத் தட்டவில்லை...

......அஹிம்சை. ஆனல் எல்லோரும் தத்தம் சட்டைப் பைகளில் புகைகின்ற துப்பாக்கிகளை வைத்துக் கொண்டிருக்கிருர்கள். நீங்கள் (காந்திஜி) ஒருவர்தான் உண்மையில் துப்பாக்கியின்றி, சட்டைப் பைகளின்றி, பொய் புனைசுருட்டுகள் இன்றி, கொஞ்சம்கூட ஆயுதம் தரிக்காமல், நேற்று, நாளை என்பவை இல்லாமல் விடுதலை பெற்றிருக்கிறீர்கள்.

......மகான்கள் அரவமில்லாமல் அமைதியாகத் தங்களைக் கொன்றவர்களை ஆசீர்வதித்துக் கொண்டே மரிக்கிருர்கள்; அப்போது ஒருமைப்பாட்டின் கடைசிக் குரல், வானத்தின் மௌனத்திலே கலக்கிறது.

என் மரங்களிலுள்ள பூக்கள் உதிர்ந்து கொண்டிருக்கின்றன. ஒரு தனிமை உணர்ச்சி என்னைத் தழுவ வருகிறது......

என் கரங்களின் வழியாக அழகும், ஆண்மையும் நிரம்பிய ஒன்று இறங்குகிறது; தாங்கள் ரத்தம் சிந்திவிட்டதற்காக என் ரத்தம் துடிக்கும்படி தங்கள் உள்ளத்துக்கும் என் உள்ளத்துக்கும் இடையே அப்படி என்னதான் ஓடிக் கொண்டிருக்கிறதோ?

நந்தலால்போஸ்: (சித்திரக்காரர்)

நான் ஒரு சித்திரக்காரன்; வெளித் தோற்றத்தை வைத்துக்கொணடே அபிப்பிராயத்தை உருவாக்குகிறவன். அதனுல் காந்திஜியை நேரில் பார்க்கும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தேன். அவரை நேரில் சந்தித்தபின் எங்களிருவரையும் அன்பும் நட்பும் சேர்ந்த பாசம் பிணைத்துவிட்டது. அவருக்குக் கலை (ஓவியம்) சம்பந்தமான விஷயங்களில் அவ்வளவாக அக்கறை கிடையாது என்று நான் கேள்விப்பட்டிருந்தேன்; ஆனல் அது மிகவும் பொய்யான விஷயம் என்பதைப் பின்னல் அறிந்துகொண்டேன். லக்ஷ்மணபுரிப் பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு ஓவியத்தையும் அவர் மிக மிகக் கவனத்துடனும், கலாரஸனையுடனும் பார்வையிட்டார். அவருடைய அழகுணர்ச்சியை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியது ஒரு

சிறு சம்பவம். பொருட்காட்சி மண்டபம் சாதாரணமான வஸ்துக்களைக்கொண்டே ஜோடிக்கப்பட்டிருந்தது; அதாவது மூங்கில், மரக்கட்டை முதலியவை. இப்படி சாதாரணமான வஸ்துக்கள் மொத்த ஜோடனையை எவ்விதத்திலும் குறைத்துவிடக் கூடாது என்பதில் எங்களுக்கு மிகவும் கவனம். ஜனங்கள மட்டுமல்லாமல், பாபுஜியும் இப்படி சாதாரண வஸ்துக்களைக்கொண்டு கலா சிருஷ்டி செய்வதை ஆதரித்ததோடு, அப்படிச் செய்வதையே மிகவும் பாராட்டத் தொடங்கிவிட்டார்...அங்கே ஒரு மேஜை கிடந்தது. மேஜைக்குக் கீழாக ஒரு வாளி. இதை நாங்கள் கவனிக்கத் தவறி விட்டோம். 'இந்த இடத்தின் அழகை இந்த வாளி கெடுக்கவில்லையா?' என்று பாபுஜி பார்த்த மாத்திரத்திலேயே சொன்னார்.

மகாத்மாஜி எங்களைப் போல சித்திரம் எழுதும் தொழில் உள்ளவராக இல்லாமல் இருக்கலாம். ஆனால், அவரை ஒரு உண்மையான ஓவியராக என்னால் கருதாமல் இருக்கமுடியாது. தம்முடைய ஆத்மஸ்வரூபத்தைச் சிருஷ்டி செய்வதிலும், தம் லட்சியத்துக்கு ஏற்ப மற்றவர்களை மாற்றியமைப்பதிலும் அவர் தம் வாழ்க்கையைச் செலவழித்திருக்கிறார். களிமண் போன்ற மனிதர்களைத் தெய்வங்களாக மாற்றுவதுதான் அவர் செய்ய வந்த வேலை. அவருடைய கோட்பாடு உலகத்தின் ஓவியர்களுக்கு உற்சாகம் ஊட்டும் என்பது நிச்சயமான நம்பிக்கை.

ஜான் கந்தர்: (நூலாசிரியர்) புத்தரைப் போல இவர் (காந்திஜி) இறந்தாலும் மக்கள் இவரைத் தெய்வமாகப் பூஜிப்பார்கள். விவசாயிகள் இவர் பாதங்கள் தீண்டிய மணலை முத்தமிடுவதை நான் பார்த்திருக்கிறேன். இவர் ஒரு பெரிய புதிர்; வழுக்கித் தடுமாறும் பேர்வழி. இப்படிச் சொல்லுவதை மரியாதைக் குறைச்சலாகக் கருதக்கூடாது. அவருடைய முரண்பாடுகளைச் சிறிது பாருங்கள். இந்த மனிதர் ரிஷியாகவும், அரசியல் வாதியாகவும், தீர்க்கதரிசியாகவும், பெரிய சந்தர்ப்பவாதியாகவும் இருக்கிறார். தற்கால விஞ்ஞானத்தை வெறுக்கக்கூடிய இவர் மூக்குக்கண்ணாடியையும், தர்மாமீட்டரையும் உபயோகிக்கிறார். ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமையை வற்புறுத்துகிறார்; ஆனால் இவர் தம குடும்பத்தில் ஒருவர் முஸ்லிமாக மாறுவதை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனாலும், அவருடைய வாழ்க்கை உலகத்திலேயே மிகப் பெரிதாகக் கருதப்படும் வீர வாழ்க்கையாகும். இடுப்பிலே முண்டு கட்டிக்கொண்டு, ராட்டினத்தை நூற்கும், 112 பவுண்டு நிறையுள்ள இந்த மனிதர் உலகத்திலேயே சர்வ வல்லமை வாய்ந்த மிகப் பெரிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி, அநேகமாக ஒழித்தும் விட்டார். அவர் விதியை எதிர்த்துப் போராடினார்; விதியை விட மிகவும் வலிமை வாய்ந்ததாக இருக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடினார். அவர் ஒரு புது மாதிரியான சர்வாதிகாரி; அன்பினால் ஆட்சி செய்கிறார். இந்திய மக்களுக்கு புத்துயிரையும், புதிய ஒற்றுமையையும் அளித்தது அவருடைய மிகப் பெரிய சாதனையாகும். மகாத்மாவின் கடவுள், அவர் யாராக இருந்தாலும் சரி, மகாத்மா மறைந்தபிறகு அவரை

மிக வாஞ்சையோடு நடத்துவார்.

நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ்:

இன்று உலகெங்கும் உள்ள இந்தியர்கள் தங்கள் தலை சிறந்த தலைவராகிய மகாத்மா காந்தியின் 75-வது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிருர்கள். எந்த மனிதரை நாம் கௌரவிக்கிறேமோ, எந்த மனிதரிடம் நம் அன்பையும, மரியாதையையும் காணிக்கையாகச் செலுத்துகிறேமோ, அந்த மனிதரின் வாழ்க்கை அனுபவங்களை இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் எடுத்துச்சொல்லுவது வழக்கம். ஆனல் மகாத்மா காந்தியின் வாழ்க்கையைப் பற்றியும், செயலைப பறறியும் இந்திய மக்கள் நன்கு அறிவார்கள். அதனல் அவரது வாழ்க்கையைப் பற்றிய விபரங்களை நான் சொல்லப் புகுந்தால் அது அவர்கள் அறிவை அவமதிப்பதாகவே ஆகும். அப்படி நான் செய்யப் போவதில்லை. அதற்குப் பதிலாக வேறென்று செய்யப் போகிறேன். இந்திய சுதந்திரப் போராட்டச் சரித்திரத்தில் மகாத்மாஜியின் ஸ்தானம் என்ன என்பதை மதிப்பிடப் போகிறேன். இந்தியாவுக்கும் இந்திய விடுதலை லட்சியத்துக்கும மகாத்மா காந்தி செய்துள்ள சேவை ஒப்பற்றது; தனித தன்மை வாய்நதது. அதனல் நம் தேசியச் சரித்திரத்தில் அவர் பெயர் என்றென்றைக்கும் பொன் னெழுத்துக்களால் பொறிக்கப்பட் டிருக்கும்.

விடுதலையை அடைவதற்கு வழிகாட்டும் பொருட்டுத் தெய்வம்தான் அவரை அனுப்பியதோ என்னவோ! அப்படித்தான் இருக்க வேண்டும். தேசம் முழுவதும் அவரது கொடியின் கீழ் அணி வகுத்து நின்றது. இந்தியாவைக் காப்பாற்றி ஆயிற்று......

இருபது வருஷத்துக்கதிகமாக இந்தியாவின் கதி மோட்சத்துக்கென்று மகாத்மா காந்தி பாடுபட்டுவந்திருக்கிருர்; இந்திய மக்களும் அவருடன் கூடவே பாடுபட்டு வந்திருக்கிருர்கள்... எந்த ஒரு தனி மனிதனும்; தனித்த ஒரே வாழ்வுக் காலத்தில் இதே மாதிரியான சமய சந்தர்ப்பங்களில், இதைவிட அதிகமாகச் சாதித்திருககமுடியாது.

முன்பின் தெரியாதவர்:

பமபாயிலுள்ள ஹிந்த் கிதாப்ஸ் லிமிடெட் என்ற புத்தகக் கம்பெனியில் மகாத்மா காந்தியின் கட்டுரைகள் அடங்கிய 'நான் கனவு காணும் இந்தியா' என்னும் புத்தகம அச்சாகிக்கொண்டிருந்த சமயம். முதல் அத்தியாயத்தின் பெயரையே புத்தகத்துக்கும வைத்திருந்தார்கள். அப்போது முதல் அத்தியாயம் மட்டும் அச்சாகி இருந்தது. அந்தச் சமயத்தில் ஓர் ஆங்கிலப் பெண்மணி மேற்படி கம்பெனிக்கு வந்திருந்தாள். அவளிடம் அந்த முதல் அத்தியாயத்தை மட்டும் காட்டி, 'இதை எழுதியவர் யாராக இருக்கலாம் என்று சொல்லுங்கள், பார்ப்போம்' என்ருர்கள். அவள் காந்திஜியின் எழுத்துக்களை அதிகமாகப் படித்தவளல்ல. ஆனல் அந்த அச்சிட்ட பகுதியை வாசித்துப் பார்த்துவிட்டு, "இதை எழுதியது யாராக இருந்தாலும் சரி, எழுதியவர் நிச்சயமாக சக்திவாய்ந்த ஒரு மனிதராகவும் மிக மிக நல்ல மனிதராகவும் இருக்க வேண்டும்" என்று கூறினுள்.

மகாத்மா காந்தி:

மகாத்மாப் பட்டத்தைவிட சத்தியம் தான் எனக்கு மிகவும் பிடித்த விஷயம்; மகாத்மாப் பட்

டம் ஒரு சுமை. இந்தப் பட்டம் என்னை அடிக்கடி புண்படுத்தியிருக்கிறது. அது என்னை எந்தச் சமயத்திலும் சந்தோஷப் படுத்தியதாக எனக்கு ஞாபகமே இல்லை. நான் மகாத்மா என்று எனக்குத் தோன்றவில்லை. ஆனல் நான் தெய்வப் படைப்பில் மிகத் தாழ்ந்தவற்றுள் ஒன்று என்பதை உணர்கிறேன். எனக்கு என் நண்பர்கள் அளிக்கும் மிகப் பெரிய கௌரவம், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் நான் வற்புறுத்தும் கொள்கையை ஏற்றுக் கொள்ளுவதும், அதில் நம்பிக்கை இல்லாவிட்டால் என்னைக் கடைசிவரையில் எதிர்ப்பதும் தான். என்னிடத்தில் மட்டும் அலாதியாக ஒரு தெய்வீக சக்தி இருப்பதாக நான் கூறமாட்டேன். அதே போல நான் ஒரு தீர்க்கதரிசி என்றும் கூறமாட்டேன். சத்தியத்தை நாடும் ஏழை மனிதன் தான் நான். ஏழைகளையே என் வாழ் நாள் முழுவதும் நேசித்து வந்திருக்கிறேன். அவர்களுக்கும் எனக்கும் யாதொரு வித்தியாசமும் இருப்பதாகத் தோன்றவில்லை. அவர்கள் என் நெருங்கிய உற்றார் உறவினராகவே எனக்குத் தோன்றுகிறார்கள்.

✲

சுருக்கவழி

"என் தோணியைப் போல் சித்திரம் தீட்ட எனக்கு இரண்டு மாதங்கள் பிடித்தன"

"ஏன் நேரத்தைப் பாழாக்குகிறாய்? தோணியைப் போட்டோ பிடித்துவிடக்கூடாதோ?"

—ஜான்கார்பென்டர்]

என் நம்பிக்கை

சாதாரண மனிதர்கள் பன்னிரண்டு பேரை நான் நம்புவேன்; ஆனல் சாதாரண மனிதன் ஒருவனை நான் நம்பமாட்டேன்.

—ஜி. கே. செஸ்டர்டன்

நம் நாகரிகம்

நம் நாகரிகத்தின் பெருமை என்ன தெரியுமா? சில சமயங்களில் நாம் ஏறக்குறையச் சுபாவத்துடன் நடந்துகொள்ள உதவுகிறது.—கிளமென்ஸ்

மகாத்மா காந்தி

மகாத்மா ஒரு பெரிய ராஜீயத் தலைவர். ஒரு பெரிய வேதாந்த நிபுணர். இந்த இரு அம்சங்களும் அவரிடம் இருக்கின்றன. அவரை ராஜீயத் தலைவர் என்ற முறையில்தான் நாங்கள் பின்பற்றுகிறோம்... தமது வேதாந்தக் கொள்கையை அவர் வலுக்கட்டாயமாக மற்றவர்கள் மீது சுமத்துவது இல்லை; அரசியலில் கொண்டுவந்து புகுத்துவதும் கிடையாது.

—நேத்தாஜி

அவசியம் பார்க்க வேண்டும்

ஒயிட்ஹால் கட்டடத்தைப் பார்க்கத் தவறிவிடாதீர்கள். அதன் ஒரு கோடியில் தலையைப் பறிகொடுத்த ராஜாவின் சிலையும், மறுகோடியில் தலையை வெட்டியவனுடைய சிலையும் இருக்கும். நாம், எல்லோருக்கும் நல்லவர்களாக நடக்கமுயலுவதற்கு இது ஓர் உதாரணம்.

—சர் எட்வர்டு ஆபில்கன்

பரிபூரணத்துவம்

பரிபூரணத்துவத்தை மனிதனே அல்லது மனித சிருஷ்டியாகிய விஞ்ஞானமோ அடைய முடியாது.

—மகாத்மா காந்தி

புத்தக உலகம்

'ப்ரூ' அல்லது நானறிந்த காந்தி : [ஆசிரியர் : ஜி. டி. பிர்லா. கிடைக்குமிடம்: லலிதா அண்டு கம்பெனி, 289, லிங்கசெட்டி தெரு, ஜி. டி. சென்னை. விலை ரூ. 2-8-0.]

ஸ்ரீ அ. சுப்பையா மொழி பெயர்த்துள்ள இந்த நூல் இப்போது இரண்டாம் பதிப்பாக வெளி வந்திருக்கிறது காந்திஜியுடன் நேரில் பழகிய ஆசிரியர், காந்திஜியின் வாழ்க்கையில் நடந்த அநேக ருசிகரமான செய்திகளையும் காந்திஜியின் உபதேசங்களைப் பற்றியும் எழுதி யிருக்கிறார். மொழிபெயர்ப்பு மிகவும் அருமை. காந்திஜியின் பெருமைக் கேற்றவாறு அவரைப் பற்றிய இந்த நூலை அழகான அச்சமைப்புடன் வெளியிட்டிருக்கிறார்கள். படிக்கவேண்டிய நூல்.

உரிமையின் பரிசு? காந்தியடிகளின் பிரிவு: [கிடைக்குமிடம்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பவழக்காரத் தெரு சென்னை. விலை ரூ. 3-8-0.]

மகாத்மாவின் கடைசி நாட்கள், மகாத்மாவின் மறைவைக் குறித்து உலகத்துப் பிரமுகர்கள், பத்திரிகைகள் கூறிய கருத்துக்கள், ஆங்காங்கே காந்திஜியைப் பற்றிய துணுக்குகள் முதலியன இந்நூலின் உள்ளுறை. தமிழ்நாட்டு தமிழறிஞர் பலரிடமும் காந்திஜி குறித்து கட்டுரைகளும், பாடல்களும் வாங்கிச் சேர்த்திருக்கிறார்கள். பெரிய சரித்திர நிகழ்ச்சியை நல்ல முறையில் இந்நூலில் பதிவு செய்திருக்கிறார்கள். இந்த நூலை எல்லோரும் படிப்பதுடன், தங்களுக்கென்று ஒரு பிரதியையும் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

1. நாம் ஆர்க்கும் குடியல்லோம்:
2. காந்தியும் வள்ளுவரும்: [ஆசிரியர்: ராய. சொ. கிடைக்குமிடம்: பாரதி பிக்சர் பாலெஸ், காரைக்குடி.]

சிறந்த தமிழறிஞரும், "ஊழியன்" என்னும் பிரபல பத்திரிகையை நடத்தி வந்தவருமான ஸ்ரீ ராய. சொ. இந்த இரண்டு நூல்களையும் எழுதியுள்ளார். முதல் புத்தகத்தில் மொத்தம் 14 சிறந்த கட்டுரைகள் இருக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவை தமிழ்ப்பாடல்களை வைத்து எழுதிய நவீன இலக்கியக் கட்டுரைகளாகும். 'காரைக்குடியில் பாரதியார்' என்ற கட்டுரையும், காந்திஜிக்கு ஆசிரியர் விருந்திட்டது பற்றிக் கூறும் 'எம்மை ஆளுடைய நாயகன் விருந்தினுக்கு இசைந்தான்' என்ற கட்டுரையும் உள்ளத்தைப் பரவசப் படுத்துகின்றன.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்பவேண்டும்

புத்திரிபாயின் வயிற்றையும், கஸ்தூரி அன்னையின்தோள்களையும், சபர்மதி நதி நீரையும், ஏர்வாடாச் சிறையையும், தம் உள்ளத்தையும் குளிரச் செய்த காந்திஜியைப் பற்றி ஆசிரியர் கீழ்க்காணும் அற்புதமான கவியை இயற்றி யிருக்கிறார்:

ஏந்தல் இருந்தவப்
புத்திரி பாயின்
எழில் வயிறும்,
தோய்ந்த துணைவி என்
கஸ்தூரி அன்னை நல்
தோளிணையும்
வாய்ந்த சபர்மதி
நீரும் ஏர்வாடா
மணிச் சிறையும்,
பாய்ந்த எனதுள
மும் குளிர்வித்த
பனி வடிவே!

அருமையான இந்தப் புத்தகத்தின் விலை ரூபா 1.

இரண்டாவது புத்தகத்தில், திருவள்ளுவரின் குறள் உபதேசங்

களுக்கு ஏற்றபடி காந்திஜி வாழ்ந்து காட்டிய அறவாழ்க்கையை ஆசிரியர் பாடி யிருக்கிறார். திருவள்ளுவரிடம், முதல் இரண்டு அடிகளை ஆசிரியர் கூற, பின் இரண்டு அடிகளையும் குறள் வெண்பாக்களால் திருவள்ளுவர் கூறி நிரப்புவது போல அமைந்த, மொத்தம் 125 வெண்பாக்கள் பாடி, அவற்றிற்கு விளக்க உரையும் எழுதியிருக்கிறார் ஆசிரியர். காந்திஜியின் பெருமையைக் கூறும் இந்த நூலின் விலை ரூ. 1-8-0.

—கு. அ.

மின்னொளி!: [ஆசிரியர்: சரஸ்வதி தியாகராஜன், கிடைக்குமிடம்: ரமணா பிரசுராலயம், 49-ஸர் தியாகராயரோடு, தி. நகர், சென்னை-17. விலை ரூபாய் 2],

இந்நூலில் மொத்தம் எட்டுக்கதைகள் உள்ளன. நூலாசிரியை எளிய தமிழில் கதைகளை எழுதியிருக்கிறார். கதை சொல்வதில் அடக்க குணம் பிரதிபலிப்பது நன்று. 2-வது கதையான 'மங்கையும் வேங்கையும்' என்ற கதை 'புலியா பெண்ணா?' என்ற பிரபல இத்தாலியக் கதையிலிருந்து எடுத்த சாராம்சம். அது போலவே 7-வது கதையான 'எப்போ வருவாரோ?' என்ற கதை அதே தலைப்புடன் ஸ்ரீ. ந. சிதம்பர சுப்ரமண்யன் எழுதிய கதையின் நேரடி சுவீகாரம் இல்லையென்றாலும், அதிலுள்ள வரிகளில் சிலவற்றையும், கதாம்சத்தையும் அப்படியே எழுதியிருக்கிறார். இது மிகவும் வருந்தத்தக்க விஷயம்; இவ்விரண்டு கதைகளால் ஆசிரியரின் நேர்மை ஐயத்துக்காளாகிறது. புத்தகத்தில் காணப்படும் ரகர றகர பேதங்களை அச்சுப் பிழையாகக் கருதுவதற்கில்லை.

இந்தக் கதைகள் நமது பேருணர்ச்சிகளைக் கிண்டி விடாது; அத்தனையும் பொழுது போக்குக் கதைகள்.

தமிழன் கண்ட மதம்: [ஆசிரியர்: சுப அருணாசலம், கிடைக்குமிடம்: காந்தியப் பதிப்பகம், பள்ளத்தூர், இராமநாதபுரம் ஜில்லா. விலை அணா 6]

தமிழன் கண்ட மதம் என்ற தலைப்பில் ஆசிரியர் தம் மனசில்பட்ட சம்பந்தா சம்பந்தமற்ற பல்வேறு துறைக் கருத்துக்களையும் கதம்பமாக்கி எழுதியிருக்கிறார். காந்திஜியின் மறைவு, கோயில்களின் குறைபாடு, இல்லறம், துறவறம் எனப் பல விஷயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. முடிவாக, திருக்குறளே தமிழன் கண்ட மதம் என்று கூறி நூலை முடித்து விடுகிறார். நூல் முழுதும் முற்றுமோனைத் தமிழில் எழுதப் பட்டிருக்கிறது. ஆனால், இந்த மோனைத் தமிழ் மொழிவேகத்தை இழுத்து நிறுத்துகிறது. ஆசிரியர் பல்வேறு கவிஞர்களின் கூற்றையும் அப்படியே தமது நடையில் சுவீகரித்திருப்பது விரசம் தருகிறது. இந்தச் சாதாரணமான நூலுக்கு நாமக்கல் வெ. ராமலிங்கம்பிள்ளை அகவற்பாவில் ஒரு அணிந்துரை எழுதியிருக்கிறார்.

விடுதலையா?: [ஆசிரியர்: மு. வரதராசன், கிடைக்குமிடம்: இன்ப நிலையம் தியாகராய நகர், சென்னை. விலை ரூ. 1-8-0]

ஆசிரியர் வரதராசன் தமது எளிய தூய தமிழில் இந்நூலில் ஆறு கதைகளைத் தொகுத்திருக்கிறார். இந்நூலில் காதலுக்கு இடமில்லை. ஏழையின் துயரத்தைப் பல கோணங்களிலிருந்தும் பார்க்க முயன்றிருக்கிறார். ஆசிரியரின் தமிழ் நடை கதைக்கு வேகம் ஊட்டவில்லை; கதையின் ஜீவனும் இடையிடையே ஆசிரியர் கூறத் தொடங்கும் பிரசங்க தோரணையால் தொய்வுறுகிறது. எனினும் படிக்க உகந்த கதைகள். 'தேங்காய்த் துண்டுகள்,' 'எதையோ பேசினார்' முதலிய கதைகள் நன்றாயிருக்கின்றன. அச்சும் அமைப்பும் நன்று.

கள்ளோ காவியமோ?: [ஆசிரியர்: மு. வரதராசன், கிடைக்கு

மிடம்: பாரிநிலையம், 59. பிராட்வே, சென்னை. விலை ரூ 3-8-0]

மங்கை என்ற ஏழைப் பெண்ணை அருளப்பன் என்ற வாலிபன் மணக்கிருன்; அவர்களுக்கு தேமொழி என்ற பெண்குழந்தை பிறக்கிறது. ஆனல் தாய்க்கு குழந்தையுடன் வாழக் கொடுத்துவைக்கவில்லை; கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஒருவரை யொருவர் புரிந்துகொள்வதில் ஒரு பூசல்; அதன் காரணமாக, மங்கை கணவனை விட்டே பிரிந்து தேசாந்திரம் சென்று விடுகிருள். மீண்டும் கணவன் அவளைச் சந்திக்க நேர்கிறது. இருவரும் தவறை உணர்ந்து வீடு திரும்புகிருர்கள். ஆனல் தாயை மறந்து விட்ட தேமொழி தாயை வரவேற்கவில்லை; ஆமோதிக்கவும் இல்லை. தன் குழந்தை தன்னை உணர்ந்து கொள்ளவில்லை என்ற கவலையில் மங்கை என்னும் அந்த மங்கல விளக்கு அணைந்து விடுகிறது. இது தான் கதை. கதையும், போக்கும் சுவாரசியமாயிருக்கிறது. "பெண் என்பவளைக் கள்ளாகவே சிலர் பாவிக்கிருர்கள்; ஆனல், அவள் உண்மையில் ஒரு காவியம். வெறும் போதைப் பொருளல்ல; பிரக்ஞை தவருது நுகர்ந்து அனுபவிக்க வேண்டிய கவிச்சித்திரம்'' என்ற கருத்தே நூலின் அடிப்படை. கதைப் போக்கில் ஆசிரியர் வெளியிடும் மின்வெட்டுக் கருத்துக்கள் பலவும் படித்துரசிக்கத்தக்கவை. நல்ல நாவல்; இதைப் படிப்பதில் செலவிடும் பொழுது வீண் போகாது.

மகாத்மா காந்தி வாழ்க்கையில் ரசமான சம்பவங்கள்: [ஆசிரியர்: ஜி. ராமச்சந்திரன், கிடைக்குமிடம் இலக்கியப் பதிப்பகம், காரைக்குடி. விலை ரூ. 1-8-0]

காந்திஜி வாழ்க்கையில் நிகழ்ந்த பல ரசமான சம்பவங்களை அருமையாகத் தொகுத்திருக்கிருர் ஆசிரியர். காந்திஜியின் அருங்குணங்களைத் தெரிந்துகொள்ள நன்கு உதவும். காந்திஜி கவி தாகுரின் சாந்தி நிகேதனத்துக்குச் சென்ற வரலாறு மிகவும் ரசமாயிருக்கிறது. சிறுவர் சிறுமியர் இந்நூலைக் கட்டாயம் படிக்க வேண்டும்; பெரியவர்களும் படிக்கலாம். இந்த நூலை நல்ல முறையில் மொழிபெயர்த்திருக்கிருர் ஸ்ரீ டி. ஆர். அருணசலம். இந்நூலைத் தமிழில் வெளியிட்ட இலக்கியப் பதிப்பகத்தார் தமிழர்களின் பாராட்டுக்குரியவர்கள்.

மகாத்மா காந்தி மறைந்தார்: [ஆசிரியர்: விநோபா பாவே, கிடைக்குமிடம்: அகில பாரத சர்க்கா சங்கம், திருப்பூர். விலை அணா எட்டு.]

மகாத்மா காந்தி மறைந்தபின் நடந்த பதின்மூன்று நாள் பிரார்த்தனைத் தினங்களில் விநோபா பாவே செய்த பிரசங்கங்களின் தொகுப்பே இந்நூல். இது காந்திஜியின் தத்துவங்களைப் புரிந்துகொள்ள ஓரளவு உதவும். விநோபா பாவே நூலுக்கு வேறு முகமன் வேண்டுவதில்லை.

டால்ஸ்டாய் சிறு கதைகள்: [ஆசிரியர்: எம். எஸ். சுப்பிரமணியன். கிடைக்குமிடம்: எம். எஸ். சுப்பிரமணியன், ஸ்ரீவராகபுரம் தெரு, கல்லிடைக்குறிச்சி (S. I. R.) விலை அணா 7½.)

ருஷ்யப் பேராசிரியர் டால்ஸ்டாயின் ஆறு கதைகளை எளிய தமிழில் தழுவித் தமிழாக்கம் செய்திருக்கிருர் ஆசிரியர். இடையிடையே கதைப் போக்கோடு வள்ளுவர், தாயுமானவர், பாரதி முதலியோர் கவிகளைச் சேர்த்திருப்பது நன்று. சிறுவர் சிறுமியர்க்கு பாடப் புத்தகமாக வைக்கலாம்; பெரியவர்களும் படிக்கலாம்.

1. நீ எந்தக் கட்சியில்? [ஆசிரியர்: தமிழ் ஒளி. விலை அணா நாலரை.]

2. மார்க்ஸ் தத்துவமும், திராவிடக் கழகத் தலைவர்களும்: [ஆசிரியர்: எம். இஸ்மத் பாஷா, விலை அணா 4½. கிடைக்குமிடம்:

உண்மைப் பிரசுரம், தேவகோட்டை, ராமநாதபுரம் ஜில்லா.]

1. பாட்டாளி மக்களின் கஷ்ட நஷ்டங்களையும் மதபோதகரின் மாய்மாலத்தையும் ஆணித்தரமாக எடுத்துக் கூறும் பாடல்கள்; விஷயத் தெளிவு போற்றத்தக்கது. சிறு நூல் தான்; கடுகு சிறுத்தாலும் காரம் போகவில்லை.

2. திராவிடக் கழகத்தின் போக்குக்கும் மார்க்ஸீயவாதிகளின் போக்குக்கும் அடிப்படையான தத்துவங்களான "எண்ணம் முதல் வாதம்" "பொருள் முதல் வாதம்" என்ற இரண்டு தத்துவங்களின் குறைகுணத்தை ஓரளவு ஆராயும் சிறு நூல். எண்ணம் முதல் வாதமானது சீர்திருத்தவாதப் பாதைக்கு வழி, அது புரட்சிவாதத்தை மறந்துவிடக் கூடும் என்பதை நன்கு விளக்கியிருக்கிறார். எனினும் இவ்விரு சாராருக்குமுள்ள வித்தியாசத்தை மக்கள் புரிந்துகொள்ள இந்நூல் போதாது. நடைமுறைக் கொள்கைக்கும் அடிப்படைக் கொள்கைக்கும் உள்ள தொடர்புத் தன்மையை அலசி விரிவாக எழுதியிருந்திருந்தால், இந்நூல் மேலும் வலுப்பெற்று விளங்கும்.

—தொ. மு. சி.

இவர்கள்: ஹாஸ்யச் சித்திரங்கள். [ஆசிரியர்: பி. ராமச்சந்திரன். கிடைக்குமிடம்: ஜோதி நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை-5. விலை 1-8-0.]

நம்முடைய தினசரி வாழ்க்கை நாடகத்தில் வருகின்ற பாத்திரங்களாகிய சமையற்காரன், பால்காரன், தோட்டக்காரன், வண்டிக்காரன், தபால்காரன், வேலைக்காரன், தையற்காரன் இவர்களைப் பற்றிய சித்திரிப்பே இப் புத்தகம். சர்வ சாதாரண விஷயங்களையும் ஹாஸ்ய ரசனையுடன் பார்த்தால் ஹாஸ்யமாகவே தோன்றும் என்பதை புத்தகம் நிரூபிக்கிறது. கட்டுரைகளைப் படிப்பவர்கள் சிரிக்கவேண்டும் என்று முயன்றிருக்கிறார், ஆசிரியர்.

—க. பம்பாபதி

88887

அதைவிட மோசம்

பெண்ணே, நீ ஒரு முட்டாளை முத்தமிட அனுமதிப்பது மிகவும் மடத்தனமான காரியம்; ஒரு முத்தத்தினால் நீ முட்டாளாகி விடுவதோ அதைவிடப் படுமோசமானது.

—மாகஸின் டைஜஸ்ட்

அசகாய சூரன்

நைகரா நீர் வீழ்ச்சிக்கு மேலாகக் கயிறுகட்டி அதன் மேல் நடந்து சென்ற ப்ளாட்டின் என்பவர் கயிற்றில் நடக்கும்போதே கொஞ்சம் நின்று ஒரு முட்டையை வேகவைத்து ஆம்லெட் செய்து சாப்பிட்டுவிட்டார்.

—நிக்லஸ் பென்ட்லீ

நாகரிகம்

நவ நாகரிகத்துக்கு நான் எதிரியாகத்தான் இருந்து வந்திருக்கிறேன்; இருக்கவும் செய்கிறேன்.

ரயில்வேக்களோ, ஆஸ்பத்திரிகளோ உயர்ந்த உண்மையான நாகரிகத்தின் அறிகுறிகளல்ல.

—மகாத்மா காந்தி

Edited, Printed & Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah. Madras, 14.
Associate Editor: G. Alagiriswami.

உங்கள் ஊரில்

'சக்தி' தவராது கிடைக்கிறதா? அப்படிக் கிடைக்கவில்லையானல் தயவு செய்து கீழ்க் கண்ட மனுவைப் பூர்த்தி செய்தனுப்புங்கள். 'சக்தி' தவராது கிடைக்கும்.

ஊர்..............................

தேதி..............................

சக்தி காரியாலயம்
சென்னை—14

சக்தி மாத வெளியீட்டிற்கு என்னை சந்தாதாரராகச் சேர்த்துக்கொள்ள வேண்டியது ஒரு வருஷத்திற்குரிய / இரண்டு வருஷத்திற்குரிய சந்தாத்தொகை ரூ. ஆறு / பதினென்று மணியார்டரில் / போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பியிருக்கிறேன்.

தங்கள்,

பெயர் (தெளிவாக)..............................

தெரு ....

ஊர்ப்பெயர்..............................

ஜில்லா..............................

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.
உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.
மைசூர் சில்க்
மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு.
கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.
MSK-10-7

ஸாரிடோன்
எல்லா வலிகளையும் போக்குகிறது
10 Saridon
BRAND ANALGESIC TABLETS

புதிய புத்தகங்கள்

உங்கள் குழந்தை —ஆர். எஸ். ருக்மிணி

குழந்தை ஆடுகிறது, பாடுகிறது, அழுகிறது, குதிக்கிறது, ரொம்ப சுகமாக இருக்கிறது, சிக்காகப் படுத்துவிடுகிறது. இவைக ளுக்குப் பல காரணங்கள் உண்டு. இந்த விவரங்களை இந்த நூல் தெளிவாகக் கூறுகிறது. டெம்மி அளவில் 400-பக்கம் அழகிய உயரிய பதிப்பு. விலை ரூ. 6 14 0 (தபால் செலவு தனி)

தமிழரின் வீரம் —ரா. பி. சேதுப் பிள்ளை

தமிழர்கள் இமயமலையிற் கொடியேற்றிய காட்சியும், கப்பற் படையால் கடல்மீது ஆணை செலுத்திய மாட்சியும், வீரத் தமிழ் மன்னர் கட்டிய மலைக் கோட்டை, நிலக் கோட்டை, கானக் கோட்டைகளின் தோற்றமும், வில்லாளர், மல்லாளர், முதலிய வீரர் தம் ஏற்றமும், தமிழ் நாட்டு மான வீரமும், தான வீரமும், மாதர் வீரமும், வீரக்கல், வீர விருது முதலிய வீறுகளும் இன்ன பிறவும் இந்நூலில் விளங்கக் காணலாம்.
ரூ. இரண்டு (தபால் செலவு தனி)

கொனஷ்டையின் கதை —'கொனஷ்டை'

கதை உலகத்தில் 'கொனஷ்டை'யைத் தெரியாத தமிழரில்லை என்றே சொல்லலாம். அவர் எழுதிய பதின்மூன்று சிறு கதை. கள் அடங்கியிருக்கிறது இந்த நூலில்.
அழகிய பதிப்பு. ரூ. மூன்றரை (தபால் செலவு தனி)

வாழ்க்கை விநோதங்கள் —அழ. வள்ளியப்பா

இந்தப் புத்தகத்திலே பதின்மூன்று ஹாஸ்யக் கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன. பொழுது போக்குப் படிப்புக்கு ஏற்ற ருசியான புத்தகம். ரூ. ஒன்றேகால் (தபால் செலவு தனி)

அச்சாகும் நூல்கள்

வள்ளுவரும் பொது நோக்கமும்

பேராசிரியர் வித்துவான் ச. ஆறுமுக முதலியார், B.A., (Hons.) B.O L., L.T., எழுதியது. உலகத்திலுள்ள அறநூல்களில் சிறந்தது திருக்குறள். அதன் சாரத்தை இனிய எளிய அழகிய நடையில் ஆசிரியர் நமக்கு எடுத் துத் தருகிறார். வள்ளுவரின் பொது நோக்கை அறிய இது ஒரு அரிய நூல்.

காற்றாடி கா. ஸ்ரீ. ஸ்ரீ.

நீல வானத்திலே காற்றாடி ஒய்யாரமாக மிதந்து விர்ரென்று பறக்கும் பொழுது எவ்வளவு ஆனந்தமாக, எவ்வளவு உல்லாசமாக இருக்கிறது. அந்தக் காற்றாடியின் சூத்திரம் நம் கண்ணுக்குப் புலப்படாத ஒரு சிறுவன் அல்லது சிறுமியின் கையிலே இருக்கலாம். அதுபோலவே, பத்மநாப னுடைய வாழ்க்கையாகிய காற்றாடியின் கயிறு ஒருத்தியின் கையிலே இருந்தது. அதை அவன் அறிந்துகொள்ளப் பல நாட்களாயின. பிறகு என்ன? படிக்கப் படிக்கப் பரவசமாக்கும் இனிய நாவல்.

புத்தக நிலையம் ★ ராயவரம்
புதுக்கோட்டை ஸ்டேட்

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்	நம்பர் 80 வரை நூல்கள்

o

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

o

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

உங்கள் வியாபாரம்

★

உங்கள் வியாபாரம் செழிக்க வேண்டுமானால் காகிதம், கவர், ரசீதுப் புத்தகம் விசிடிங் கார்டு எல்லாம் அழகாக இருக்க வேண்டும். அவைகளை அழகுடன் செய்து தருவதற்கு சென்னையில் பெயர் பெற்ற அச்சுக்கூடம் நடைபெறுகிறது. அதன் பெயர் :



சக்தி பிரஸ் லிமிட்டெட்

115 E, மோபரீஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை 14.

டெலிபோன் : *8135*